கல்லும் கனியாகும்

சு. ப. அண்ணாமலை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கல்லும் கனியாகும்

(திருவாசகச் சொற்பொழிவுகள்)

நிகழ்த்தியவர்

டாக்டர் சு.ப. அண்ணாமலை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
1982

முதற்பதிப்பு 1983

தமிழ்க்கடல் ராய. சொக்கலிங்கம்
அறக்கட்டளைச் சொற்பொழிவுகள்–2

விலை ரூ. 5/-

அச்சிட்டோர்:
தமிழ்நாடு அச்சகம்,
சிதம்பரம்.

முன்னுரை

"விஞ்ஞானம் அசுர வேகத்துடன் வளர்ந்து வருகிறது. இயற்கையை ஏறக்குறைய ஏவல் கொண்டுவிட்டோம். ஒரு நாட்டையே சில மணித்துளிகளில் பூண்டோடு அழிக்கவல்ல அணுப்படைக்கலங்கள், விண்வெளியைச் சில நாட்களில் அளவெடுத்துத் தொலைவில் உள்ள கோள்களுக்குச் சென்று திரும்பும் விண்வெளி ஊர்திகள், அவற்றைத் தரையிலிருந்தே இயக்கும் சாதனங்கள், விண்வெளியில் மிதக்கும் ஆய்வு - நிலையங்கள், ரேடார், கம்ப்யூட்டர், இயந்திர மனிதன், மின் அணுச்சாதனங்கள், சோதனைக்குழாய் கருஉயிர்ப்பு, உயிர் காக்கும் மருந்துகள் முதலிய அற்புதங்களை மனிதன் படைத்துள்ளான். இவற்றைப் பயன்படுத்தாதவர் - பயன்படுத்த இயலாதவர்தாம் - வேறு சக்திகளைப் பேசிக் கொண்டிருக்கின்றனர்கள்."

இந்த வாதம் இன்று பலரும் நெஞ்சார நம்புகிற வாதம்.

வாழ்க்கைப் பண்புகள் பலவும் சரிந்துவிட்டன. உண்மை, நேர்மை அன்பு–இவையெல்லாம் தன்னை ஒழுங்கானவனாகக் காட்டிக் கொள்வதற்குப் பயன்படும் சொற்கள் ஆகிவிட்டன. சமுதாயத்தில் எல்லா நிலைகளிலும் இவற்றுக்கு மாறானவையே நிலவுகின்றன; வெற்றிபெறுகின்றன.

இன்று கூட்டம் வலிமை உடையது. கூட்டம் சேர்த்துவிட்டால் யாருக்கும் நெருக்கடி உண்டாக்கலாம். காரியம் சாதிக்கலாம். வன்முறை, கலகம்-இவற்றுக்குப் "போராட்டம்" என்று பெயர் சூட்டியிருக்கிறோம். இவற்றைச் செய்வதற்கு, உரிமையை இன்று அவரவர்கள் தாமாகவே மேற்கொண்டு விட்டார்கள். "சமுதாய நல்வாழ்வு"-இன்று மிகுதியாகப் பேசப்படும் சொல். சீரழிந்துகொண்டிருப்பதும் சமுதாய நல்வாழ்வுதான்.

பணத்திற்கும் பதவிக்கும் மட்டும் இன்று மதிப்பும் மரியாதையும் பாராட்டும் கிடைக்கின்றன. ஆகவே இவற்றை எந்த வழியிலாவது பெற்றுவிடப் பலரும் விரும்புகிறார்கள். உண்மை, நேர்மை ஆகியவற்றைப் பற்றி இவர்கள் கவலை கொள்வதில்லை. கவலை கொண்டால் தாம் விரும்பியது நிறைவேறாது என்று முடிவு செய்துகொண்டுவிட்டார்கள். ஊழல், கையூட்டு, ஆதிக்க மனப்பான்மை ஆகியவை எங்கும் வியாபகம்.

சாதாரண நிலைமையில் உள்ளவர்கள் இன்றுள்ள வாழ்க்கைத் தேவைகள், வருவாய்க் குறைவு, போட்டிகளைச் சமாளித்தல் முதலிய சிக்கல்களில் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவே ஆலாய்ப் பறக்கிறார்கள். உண்மையையும் நேர்மையையும் நினைக்கவே நேரம் இல்லை. கல்லாகிக் கிடக்கிறது மனம்.

நமக்குத் திருவாசகம் என்ன கூறுகிறது? ஒரு நாட்டின் தலைமை அமைச்சர், தமக்குத் தோன்றிய அதிசயமான உணர்வு ஒன்றை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு, தொடர்ந்து அதையே நினைத்து, அதைப் புரிந்துகொண்டே தீர்வது என்று தீர்மானம் செய்து, அரசாங்கப் பதவியைத் துறந்தார். ஆண்டியாகத் திரிந்தார். "எல்லாம் மனிதனின் சக்திதான்; வேறு சக்தி ஒன்றும் இல்லை" என்று நாம் சொல்கிறோம்; அதற்கு மாறாகத் தம் உள்ளத்தின் உள்ளொளியாக நின்று பேசும் சக்தி ஒன்று-அதுவே உலகமெங்கும் பரவிக்கிடக்கும் சக்தி என்று அந்தச் சக்தியை வேண்டித் தவங்கிடந்து, அழுது, கதறி, நைந்து, அன்பர் பணி செய்தும் ஆலயத்தில் பணிசெய்தும் அன்பைப் புரிந்து கொண்டார். உண்மையை உணர்ந்துகொண்டார். அன்பே வடிவமானார்.

"வேண்டேன் புகழ்; வேண்டேன் செல்வம்
வேண்டேன் மண்ணும் விண்ணும்"

என்று இருந்தார். இவை வேண்டா என்று ஒதுக்கி, அருள் தான் எல்லாம்; அது இன்றி ஒன்றும் இல்லை என்று திருவருளை விடாமல் பிடித்துக் கொண்டார்.

''அருள்உடைச் சுடரே அளிந்ததோர் கனியே
   பெருந்திறல் அருந்தவர்க்கு அரசே
பொருள்உடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
   போகமே யோகத்தின் பொலிவே
தெருள்இடத்து அடியார் சிந்தையுள் புகுந்த
   செல்வமே சிவபெருமானே
இருள்இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
   எங்கு எழுந்தருளுவது இனியே''

என்று அருள், சுடர், கனி, தவம், பொருள் உடைய கல்வி, புகழ்ச்சியைக் கடந்த இன்பம், போகம்-எல்லாம் இறைவன்தான். அவன் என் சிந்தையில் நிற்கின்றான். அவனை விடாமல் பிடித்துக் கொண்டேன் என மனம் நிறைய, வாய்நிறையக் கூறுகிறார்.

நாம் உணவுக்கும் புகழுக்கும் பணத்திற்கும் பதவிக்கும் போட்டியிட்டுப் போராடிக்கொண்டிருக்கிறோம். கல்லாகிப் போன நமது மனம் அன்பைப் புரிந்து கொள்ளவேண்டும். சாதி, குலம், பிறப்பு என்ற சுழிப்பட்டுத் தடுமாறாமல், வைத்தநிதி, பெண்டிர், மக்கள், கல்வி என்று அலையாமல், அருளைச் சிறிதாவது புரிந்துகொள்ள வேண்டும். அன்பும் அருளும் மூலதனம் இவற்றை வைத்து மனித குலத்திற்குச் சேவை செய்யவேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் தமிழ்க் கடல் இராய. சொக்கலிங்கனார் நினைவு அறக்கட்டளையின்வழி, திருவாசகச் சொற்பொழிவு ஆற்றவேண்டும் என்று தெரிவித்த பொழுது இப்படி நினைத்தேன்.

இன்றைய 'பாருங்கள் உலகத்தில்', அதன் பிரதிநிதியாக என்னையே வைத்துக்கொண்டு,

கல்லாம் மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் திருவாத வூராளி அன்பாலே
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்து அழுத்தி வினைகடியும் என்றெண்ணித்
தில்லை நகர்புக்குச் சிற்றம்பலம் மன்னு
நல்லமணி வாசகனைப் பாடுதுங்காண் அம்மானாய்

என்று தில்லைக்குச் சென்று என் கல் மனத்தைக் கனியாக்கத் திருவாசகக் குளிர்பூஞ்சோலையில் நுழைகின்றேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்க்கடல் இராய. சொ அவர்கள் காரைக்குடித் திருவாசக மடத்தின் விழாவில் திருவாசகம் பற்றிப் பேச என்னைப் பணித்தார்கள். அன்றைக்குத் தொடங்கியது என் திருவாசகப் பயிற்சி. அவர்களுக்கு இந்தச் சொற்பொழிவுகளைப் படையல் ஆக்குகிறேன்.

இவற்றைப் படிப்பவர்க்கு ஒரு சொல். இடம் இல்லாததால் திருவாசகப் பாடல் சிலவற்றையே இடையிடையில் தந்திருக்கிறேன். மற்ற பாடல்களுக்கு மேற்கோள் எண் கொடுத்து, அடிக்குறிப்பில் பதிகப்பெயரும், பாடல் அல்லது வரியின் எண்ணும் குறிப்பிட்டிருக்கிறேன். திருவாசகத்தையும் வைத்துக் கொண்டு, மாணிக்கவாசகரின் வாக்குகளையே பாடிப் பாடி, அவர் திருவுள்ளத்தைப் புரிந்துகொள்ள வேண்டுகின்றேன்.

மதுரை, சுப. அண்ணாமலை

1. 6. 1982.

"நின் கழற்கு அன்பன் ஆக்கினாய்"

ஒரு நாட்டின் தலைமை அமைச்சர் உலகியலைப் பற்றறத் துறந்து, அன்பு பழுத்த மனத்தவராய், அருள் உள்ளம் கொண்டவராய், இறைவன் அடியாராய், உணர்வால் **சிவமேயாய்** மாறிய அகவுலக வரலாறே திருவாசகத்தால் அறியப்படும் மாணிக்கவாசகர் வரலாறு. திருவாதவூரர் 'ஆளுடைய அடிகள்' என்றும், 'மாணிக்கவாசகர்' என்றும் வழங்கப்பெறும் நிலையில் மாறினார். இவ்விரண்டு பெயர்களும், அவர் வாழ்வின் போக்கையே மாற்றி அமைத்த நிகழ்ச்சிகள் காரணமாக அமைந்தவை. சிவபெருமான் அவருக்கு அருள் வழங்கியதைப் பற்றியவை.

> "ஊன் எலாம் நின்றுருகப் புகுந்தாண்டான்"[1]
>
> "எந்தரமும் ஆட்கொண்டு தோட்கொண்ட நீற்றனை"[2]
>
> "நாட்டார் நகைசெய்ய நாம் மேலை வீடெய்த
> ஆட்டான் கொண்டு ஆண்டவா பாடுதும்"[3]
>
> "எனைப் பெரிதும் ஆட்கொண்டு என்பிறப்பறுத்த
> இணையிலியை"[4]

எனத் திருவாதவூரர் திருவாசகத்தில் பாடும் வரிகள், அவர் சிவபெருமானால் ஆட்கொண்டு அருளப்பெற்று, வாழ்வின் நிறைவினைப் பெற்றார் என்பதைக் காட்டும். இக்காரணம் பற்றி, அவர் "ஆளுடைய அடிகள்" எனப்பட்டார்.

இங்ஙனம் ஆட்கொள்ளப் பெற்றவர் இறைவன் புகழை ஏத்து வகையால் பாடத்தொடங்கித் தமது வாக்கினை இறைவனது 'மணிவார்த்தையை' ப்பற்றியே அமைத்தார். இறைவனே அவ்வாறு அமைப்பித்தான் என்று கூறுவார் அவர்.[5] இறைவனின் அருளைப் பெற்றவர்கள், அவனைப்பற்றிப் பேசுவதையும், பாடுவதையும் கூட அருளனுபவமாகவே உணர்வர். ஆதலால் இறைவனே தம்முடைய வாக்கை வாங்கிக்கொள்கின்றான் எனக்கூறுகின்றனர்.[6]

இறைவனது 'மணிவார்த்தை' அவனைப் பற்றிய வார்த்தை மட்டும் அன்று; அவன் திருவாதவூர் அடிகளுக்குக் கூறிய வார்த்தையும் ஆகும். அவன் சொல்லிய 'வார்த்தை' செவியால் கேட்கப்படுவது அன்று; பேச்சு என்னும் நிலையைக் கடந்தது. அதனைத் திருவாதவூரர், "மெய்யுணர்வு" என்னும் அகவுணர்வால் கேட்டார். இது அவருக்கு ஐம்புலன் கடந்த அனுபவம். இதனை,

(1) "கேளாதன எல்லாம் கேட்பித்து"7
(2) "   —பேச்சு இறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை"8

என்னும் திருவாசகங்களால் அறியலாம்.

மணிவார்த்தை கேட்டல், இறைவன் திருவுருவத்தைக் காணுதல், இவற்றால் மனம் நெகிழ்ந்து உருகுதல் முதலிய அகவுணர்வு அனுபவம் அவர் வாழ்வு முழுதும் நிறைந்து, அதனை நிறைவுபெறச் செய்தது. அந்த அனுபவத்தைக் கவிதையாகப் பாடினார். ஆதலால் 'வார்த்தை' என்றே பொருள்படும் 'வாசகம்' என்னும் சொல், திரு என்னும் அடைமொழி பெற்று அவர் கவிதைக்குப் பெயர் ஆயிற்று. மணிவார்த்தையைத் தம் இலக்கியத்திற்குப் பொருளாக வைத்துப் பாடியதால், அவரும் 'மணிவாசகர்' எனப்பெயர் பெற்றார்.

"பேசும் பொருளுக்கு இலக்கியமாய்ப் பேச்சிறந்த
மாசில் மணியின் மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தின்அடி என்மனத்தே வைத்து"9

பேச்சுக் கடந்த நிலையில்—செவிக்கு எட்டாத நிலையில்—உள்ளதுதான் இறைவன் கூறிய மணிவார்த்தை. அதனை மணிவாசகர் 'கேட்டு', இலக்கியத்திற்குப் பொருளாய் அமைத்தமை, பேசும் பொருளாகவும், கேட்கும் பொருளாகவும் இறையனுபவத்தை உணர்ந்தார்; மனத்தாலும், புலன்களாலும் கூட இறைவனை உணர்ந்து, அனுபவித்தார் என்பதைக் காட்டும்.

"ஐம்புலன்கள் ஆர வந்தனை, ஆட்கொண்டு
உள்ளே புகுந்த விச்சை மால் அமுதப் பெருங்கடலே"10

இங்ஙனம் மனவுணர்விற்கும் புலன்களுக்கும் விருந்தாய், இறைவன் தன்னை மணிவாசகருக்குக் கொடுத்து அவரை 'உலகியல் ஆள்" என்ற நிலையிலிருந்து, 'தன் ஆளாய்' மாற்றிய மணிவாசகரது அகவரலாறே (Personal Religion) திருவாசகத்தின் பாடுபொருள்.

திருவாசகத்தால் அறியப்படும் மணிவாசகரது சமயம் அவர் சிவபிரானோடு நேர்தொடர்பு கொண்டு, அவனை உணர்ந்தும் நுகர்ந்தும் பெற்ற அகவளர்ச்சியே. சைவசமயம் என்னும் நிறுவனச் சமயத்தை விளக்கும் முகமாக அவர் பாடல்கள் அமையவில்லை. சைவசமயக் கோட்பாடு, தத்துவம் ஆகியவற்றை விளக்கவோ, மாற்றுச் சமயங்களின் கோட்பாடு, தத்துவம் ஆகியவற்றோடு உறழ்ந்து மெய்ப்பிக்கவோ முயலாமல், சிவபிரான் தமக்கு உணர்த்திய மெய்யுணர்வும், அவனுடன் தாம் கொண்ட உறவும், அதனால் தாம் பெற்ற பல்வேறு உணர்ச்சிகளும், அதனால் தாம் செய்த செயல்களும், பெற்ற அனுபவமும் பற்றியே பாடுகின்றார். இத்தகைய 'அகச்சமயத்தை' விளக்கும்பொழுது வில்லியம் ஜேம்ஸ் என்பவர்,

"தெய்வீகமாகத் தாம் கருதும் பொருளுடன்
தனிமையில், நேர்நின்று, உறவுகொள்வ
தாக உணர்ந்துநிற்கும் மாந்தரின்
உணர்ச்சிகளும், செயலும், அனுபவமும்
சமயம் எனப்படும் என்று யாம்
கொள்ளுகின்றோம்"

என்று எழுதுகின்றார்.11 சைவம் சிவனுடன் சம்பந்தம் உடையது என்று கூறப்படுவதற்கு ஏற்ப, சிவபிரானுடன் கொண்ட நேர்முகத் தொடர்பே மணிவாசகரது சமயமாய் அமைந்தது. "உணர்வின் நேர்பெற வரும் சிவபோகத்தை" எனச் சேக்கிழார் கூறியதை ஒப்ப, புலன்கள், மனம் முதலிய கருவிகளின் வழியாக அன்றி, நேரே உணர்ந்துகொள்ள நிற்பவன்

இறைவன் ஆதலின், அவனை அவ்வண்ணம் உணர்ந்து, அவனுடன் அன்புறவு கொண்டு அகவளர்ச்சி பெற்றவர் மணிவாசகர். அவர் பெற்ற அகவளர்ச்சி, அன்புவளர்ச்சி; அன்பின் பெருக்கம்; உலகியற் பற்றின் நீக்கம்; மனம் மாசு நீங்கித் தூயதாகி, உருகி உருகிக் கரைந்துபோகும் நிலை; மனவுணர்வு எல்லாம் சிவனுக்கே ஆகி, வேறுள்ளவற்றை எல்லாம் பற்றுமல், புத்தி தத்துவத்தில் கலந்துநிற்க, மெய்யுணர்வே உணர்வாக நின்ற நிலை. இவ்வகவளர்ச்சிப் படிநிலைகளைத் திருவாசகம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வளர்ச்சி முழுவதும் பக்தியால் அமைந்தது. இது பற்றியே அவர், 'இறைவன் தமக்குப் பத்திநெறி அறிவித்தான்' என்று கூறுகின்றுர்.12 அவர் திருப்பெருந்துறையில், முதன்முதலில் சிவபிரானை 'நேர்பெற உணர்ந்த' அகமுகக் காட்சியும் (Mystic Vision), மீண்டும் அத்தகைய காட்சியைப் பெருமையும், அதன் பின்னர்ப்பன்முறை அக்காட்சியைப் பெற்றமையும் அவர் உள்ளத்தில் பக்திப்பயிரை வளர்த்தன.

இந்நிகழ்ச்சிக்கு முன்னர் அவர் பக்தியற்றவர் அல்லர். சமயத்துறையில் அவரது அறிவு சிறந்திருந்த அளவிற்குப் பக்தியுணர்வு சிறந்திருக்கவில்லை. அவர் கல்வியில் மிகச்சிறந்தவர் என்பது, வேத, ஆகமங்களைப் பற்றிப் பொதுவாகவும், இறைவன் முன்பு பிரணவர் முதலியோர்க்குத் தான் சொன்ன ஆகமங்களைப் பின்னர் மகேந்திர மலையில் எழுதுவித்தான் எறுன்ம்13, கடலில் வீழ்ந்த ஆகமங்களை மீட்டு, ஐந்து திருமுகங்களாலும் முனிவருக்கு உபதேசித்தான் என்றும்,14 ஆகமங்கள் கற்பவர் மனத்தை அணுகி நின்று குளிர்விப்பன என்றும்15 ஆகமக் கல்வியைப் பற்றிச் சிறப்பாகவும் கூறுவதால் விளங்கும். "கற்றுரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்"16என்று இறையன்பு பெருகப்பெற்ற பிற்காலத்தில் அவர் கூறுவதுகொண்டு, அவருக்கு முன்பு கல்வியில் இருந்த அளவிலா ஆர்வதையும், கற்றோர் பால் கொண்ட கரையிலா வேட்கை நட்பையும் உய்த்துணரலாம். அறிவுத்துறைகள் பலவற்றையும் கற்றவர் என்டதைப்

முன்பு பிரணவர் முதலியோர்க்குத் தான் சொன்ன ஆகமங்களைப் பின்னர் மகேந்திர மலையில் எழுதுவித்தான் என்றும்[13], கடலில் வீழ்ந்த ஆகமங்களை மீட்டு, ஐந்து திருமுகங்களாலும் முனிவர்க்கு உபதேசித்தான் என்றும்,[14] ஆகமங்கள் கற்பவர் மனத்தை அணுகி நின்று குளிர்விப்பன என்றும்[15] ஆகமக் கல்வியைப் பற்றிச் சிறப்பாகவும் கூறுவதால் விளங்கும், ''கற்றுறை யான வேண்டேன் கற்பனவும் இனி அமையும்''[16] என்று, இறையன்பு பெருகப்பெற்ற பிற்காலத்தில் அவர் கூறுவது கொண்டு, அவருக்கு முன்பு கல்வியில் இருந்த அளவிலா ஆர்வத்தையும், கற்றோர்பால் கொண்ட கரையிலா வேட்கை நட்டையும் உய்த்துணரலாம். அறிவுத்துறைகள் பலவற்றையும் கற்றவர் என்பதைப் 'புலவரம்பாய பலதுறை பிழைத்தும்'[17] என அவர் கூறுவதால் அறியலாம். மற்றும், திருவாசகத்தில் அவர் கூறும் புராண, இதிகாசச் செய்திகளின் மிகுதியும், இறையனுபவத்துடன் இணைத்துக்கூறும் சைவநூல் உண்மைகளின் பரப்பும், ஓரிடத்தில் கூறும் சமயநூல்கள் பற்றிய மதிப்பீடும், உவமைகளின் சிறப்பும், இலக்கிய ஆட்சியும், சொல்வழக்கும் அவரது கல்வி யாழத்தைக் காட்டுவன.

அவர் சமய, மதநூல் ஆய்வில் ஈடுபட்டு இறைவனைப் பற்றி அறிந்துகொள்ள விழைந்தார். வேதத்தின் முதற் காண்டமாகிய கருமகாண்டத்தையும், அதுபற்றி ஆராயும் பூருவ மீமாஞ்சை என்ற தரிசனத்தையும் கற்று, அவை, 'கர்மம் செய்தலே மேலானது, வேண்டற்பாலது' என்றும் 'கர்மங்களே தம்பயனை அளிக்கும்' என்றும் 'தலைவன் ஆகிய இறைவன் உள்ளான் என்பது பொய்' என்றும் கூறுவதை அறிந்தார்.[18] தெய்வம் உண்டு என்ற அழுத்தமான நம்பிக்கை இருந்தமையால் இதை ஏற்றுக்கொள்ளாமல், தெய்வத்தைப் பற்றிக் கூறும் பல்வேறு சமயங்களின் நூல்களைக் கற்றும், சமயவாதிகள் மாற்றுச் சமயத்தாருடன் மாறுபட்டுத் தத்தம் கொள்கைகளை நிலைநாட்டுவதைக் கேட்டும் சமய ஆய்வில் ஈடுபட்டார்.[19] அந்தச் சமயங்கள், உண்மையைத் தம் உள்ளம் ஏற்றுக்கொள்ளும் வகையில் கூறமாட்டாமல் இருந்ததை உணர்ந்தார். 'காணப்படும்

உலகமே உண்மை; மற்று, காணப்படாத இறைவன் முதலிய எல்லாம் பொய்' என்று உலோகாயதரும், அதற்கு நேர்மாறாகக் காணப்படும் உலகம் பொய்; மித்தை; பிரமம் ஒன்றே பொருள்; உலகம் என்பது மாயையால் தோன்றும் தோற்றம்; பிரமமே ஆன்மா; உயிர் என ஒரு பொருள் இல்லை' என்று மாயாவாதிகளும் வலியுறுத்திக் கூறிய நூல்களைப் பயின்றார்.[20] அவற்றில் உள்ள கொள்கைகளின் மயக்கம் சிலவேளையில் அவரையும் சூழ்ந்தது பின்னர்ச் சைவ ஆகமங்களையும் சிவபுராணங்களையும் கற்றார்.

இச்சமய ஆய்வினால் இறைவனைப் பற்றிய பலவகைச் செய்திகளையும் கோட்பாடுகளையும் அறிந்தார். இவற்றினால் இறைவன் அவரது அறிவிற்குப் பொருளானானே தவிர, மனத்தின் அன்பு உணர்விற்குத் தூண்டுகோலாக வில்லை. அதாவது அறிவு எத்துணை பரந்து விரிந்திருந்ததோ, அதற்கு ஏற்ப மனம் அதைப் பற்றி நின்று இறைவனைப் பற்றிய நினைவில் உணர்ச்சி கொள்ளவில்லை. சுருங்கக்கூறினால், அவரது அறிவு இறைவனைப் பற்றி நின்ற அளவு, மனம் அவனைப் பற்றி நிற்கவில்லை. அவரது இறைக்கல்வி, இறையன்பை உண்டாக்கவில்லை. ஆயினும் அவருக்கு அடிப்படையில் பொதுவான இறையன்பு இருந்தது.

"ஆயநான் மறையவனும் நீயே ஆதல்
அறிந்து, யான் யாவரினும் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டும்
நாதனே நான் உனக்கு ஓர் அன்பன் என்பேன்"[21]

என்ற அவரது வாக்கால் இதனை அறியலாம்.

அரசியற் கடமையும் அமைச்சுப் பொறுப்பும் உடையவர் ஆதலால், அவர் மனம் உலகியற் சிந்தனையை ஒட்டியே பெரிதும் சென்றது. குலம், கல்வி, பதவி ஆகியவற்றிற்குத் தக்க பெருமையும் ஒழுக்கமும் உடையவர் ஆதலின், மனத்தைக் காமம் கோபம் பேராசை, உலோபம் முதலிய தீய குணங்களின் வழிப்படாமல் காத்தார்.[22] ஆயினும், மனிதர் மனம் மன்மதன் அம்பிற்குத் தப்புவது அருமை. மகளிரிடம் செல்லும் அவா எளிதில் தடுக்க

முடியாதது. ஆசைவழிப்பட்டு உணர்ச்சி வசப்படும் இயல்பு மனத்திற்கு உண்டு. காமம், கோபம், மோகம் முதலிய தீமைகள் செயலாகத்தோன்றுமல் காத்துவிட்டால் கூட, அவை வாசனையாக மனதில் கிடந்து வாதிக்கும். புலன்களையும் மனத்தையும் முழுவதுமாக வெல்லும் வரை இவ்வாசனையை நீக்கமுடியாது. இதனை உணர்ந்திருந்த மணிவாசகர், இவ்வாசனை தாக்கியபோது, தமது அடிப்படைப் பக்தியுணர்வைத் துணையாகப் பற்றிக்கொண்டு, சிவபிரானது திருப்பெயர் மந்திரத்தை ஓதிவந்தார்.[23] இச்செய்தியைக் கூறும் பாடலில் 'மூர்க்கன்' (மூடன்) என்று தம்மைக் கூறிக்கொண்டார். தாம் ஐந்தெழுத்தை ஓதியது, தீமைபற்றிய அச்சத்தால் அன்றிச் சிவபிரான் மீது அன்பால் அன்று என்பதால் இங்ஙனம் கூறிக்கொண்டார் போலும்! இறைவன் அவரை ஆட்கொண்டது பற்றிக் கூறும்போது, அடியார்களை ஒத்த அன்பு தமக்கு இல்லாதபோதும் இறைவன் ஆட்கொண்டான் என்று கூறுகின்றார். அவன் ஆட்கொண்ட பிறகும், ஒருகால் அன்பால் உருகும் தமது மனம், மறுகால் உருகாமல் இருந்ததை எண்ணி வருந்துகின்றார். அவ்வாறானல், ஆட்கொள்ளும் முன்பு அவரது அன்பின் நிலையை உணரலாம். வாழ்வுக் கடமைகளில் மூழ்கிய பலரது இறைஅன்பும் போல, அவரது இறையன்பு கடமைகளின் நெருக்கிலும், பொறுப்புக்களின் சுமையிலும், அவை தொடர்பான உணர்ச்சிகளின் மோதலிலும் மறைந்து மறைந்து தோன்றி மங்கி நின்றது. இடைவிடாத அன்பாக இருக்கவில்லை. எத்துணையோ நினைவுகளின் ஊடாட்டத்தில் உரங்குன்றித் தீவிரம் இன்றி நின்றது. கண்ணப்பரைப் பற்றி அறிந்திருந்த அவர், அவரையொத்த அன்பு தமக்கு இல்லையே என்று ஏங்கினர்.[24]

> ''அளவிலாப் பாவகத்தால் அமுக்குண்டு இங்கு அறிவு இன்றி
>
> விளைவுஒன்றும் அறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்கு''[25]

எனவரும் அடிகளில், அவர் தமது பக்தியுணர்ச்சி பயன்தரவில்லை; அதனால் தாம் ஒரு வெறுமையை உணர்ந்தார் எனக் கூறுகின்றார். சமயநூற் கல்வி தமக்கு உண்டு எனினும்,

அளவில்லாத எண்ணங்களால், தம் இறையன்பு ஒடுங்கிக் கிடந்தது என்று கூறுகின்றார். இறைவனை அறியும் மெய்யுணர்வு வாய்க்கவில்லை என்று வருந்துவார், 'அறிவின்றி வெறுவியனாய்க் கிடப்பேன்' என்றார்.

அவரது சமயத்துறை முயற்சி பெரிதும் சமய நூல் ஆய்வாகவும், அறிவுப்பசி தணிக்கும் உணவாகவும் அமைய, எப்போதோ சிலமுறை பக்தியால் தோன்றும் உருக்கம் பிற உணர்வுகளின் இடையே மங்கி நிற்பதையும், மனம் உலகியற் கடமைகளில் ஈடுபட்டு உறைந்துபோனதையும் எண்ணி, அது உருகவேண்டும் என்று அறிவித்தவர் ஆதலின், அங்ஙனம் உருகாதது கண்டு அதனைக் கல் என்று பழித்தார்.26 இரும்பு என்றும் நொந்தார்.27

இங்கு உணர்வு (Perception) பற்றி அறிந்தால்தான் ஆட்கொள்ளப் பெறுவதற்கு முன்னும் பின்னும் மணிவாசகரது நிலையைப் புரிந்து கொள்ள முடியும்.

ஒன்றை உணர்ந்துகொள்ள, மனம் ஒரு கருவியே தவிர உணரும் கருத்தா அதுவன்று. உணரும் கருத்தா உயிரே (ஆன்மா) ஆகும். உயிர் மனம் முதலிய அகக்காரணங்களின் வழி அறியும். இது நிகழ்வது விழிப்பு (நனவு), சொப்பனம் (கனவு) ஆகிய நிலைகளில். ஆழ்ந்த துயில் நிலையில், உயிர் அத்தூக்கத்தின் இன்பத்தைத் தானே நேரடியாக உணர்கிறது. இதுபோல், இறைவன் அறிவிப்ப, அதையும் நேரடியாக உணரும். இது துரிய நிலையில் நிகழும். இந்த நிலை மனிதர்க்கு உண்டு என்பதைக் குறித்து வில்லியம் ஜேம்ஸ்

> "பகுத்தறியும் உணர்வு என நாம் அழைக்கும்
> நனவு உணர்வு, உணர்வு நிலைகள் பலவற்றுள்
> ஒன்றே. அதுமட்டும் அன்றி, மிக்க மெல்லிய
> திரையால் அதிலிருந்து பிரிக்கப்பட்டு, சக்தியுள்ள
> பல உணர்வு நிலைகள் நமக்கு உள்ளன. அவை
> இருப்பதை உணராமலே நாம் வாழக்கூடும்"

என்று எழுதுகின்றார்28 மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை அகக்கரணம் என்பர் சாங்கிய நூலார். இக்கரணங்களின்

வழி, உயிர் அறிதல் இரண்டு வகைப்படும். ஒன்று, புலன்களில் மனம் செல்லுவதால் அறிதல். புலன்களைப் பொறிகளில் (மெய், வாய், கண், மூக்கு, செவி) பொருத்தி, அவற்றின்வழி, மனம் வெளியில் உள்ள விடயங்களைப் பற்றுகிறது. இரண்டு, அது புலன்வழியல்லாமலும், விடயத்தைப் பற்றுதல். இவ்விரண்டு வழியாலும் பற்றப்பட்ட விடயத்தை ஆரம்ப்வது சித்தம். அதில் தெளிவு அடைவது புத்தி. ஆராய்ச்சி இல்லையேல் தெளிவு உண்டாகாது. பற்றிய விடயத்தை விரைவில் மனம் விட்டுவிடும். விட்டுவிட்டதை மீண்டும் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளச் செய்வது அகங்கம்ரம். விடயம் சித்தம் அல்லது புத்தியில் இருந்தால், அது நினைவில் நிற்கும். மனம் பற்றியதோடு நின்றுவிட்டால் அது மறக்கப்படும். (இன்றைய உளநூலார் கருத்துப்படி ஆழ் மனம் அல்லது புதை மனத்திற்குச் சென்றுவிடும்). ஆக, விடயத்தைப் பற்றுதல், விடுதல், ஆராய்தல், தெளிதல் அல்லது மீண்டும் ஆய்வுக்கு மேற்கொள்ளுதல் என்ற கரணச் செயல்களால் உணர்வு (Perception) பெறுவது உயிரே ஆகும். இதில் மனம் ஈடுபட்டு நின்ருல் அது உணர்ச்சி (Feeling or emotion) எனப்படும். இதற்கு வேகம் உண்டு. இதில் அறியவேண்டிய உண்மை என்ன வென்ருல், இறைவன் உயிரின் உணர்விற்கு உணர்வாக நின்று உணர்த்திஞல்தான் உயிர் இவ்வழியில் உணரும். அதாவது புலன் அறிவு, கரண அறிவு, உயிரின் அறிவு, இறைவனின் அறிவு — இவ்வளவும் சேர்ந்தால்தான் உணர்வு (Perception) சாத்தியம் ஆகும். மற்றும், புத்தியின் தெளிவில் மனம் ஒன்றி நிற்க வேண்டும். தெளிவு ஏற்படாமல், சித்தத்தின் (சிந்தனை) அளவில் ஒருவிடயம் இருந்தாலும், அச்சிந்தனையில் மனம் ஒன்றி நிற்க வேண்டும். அவ்வாறு நின்ருல்தான், சிந்தனையும், தெளிவும் உணர்ச்சியாகி, நம்பிக்கைக்கும் உறுதிப்பாடு (Conviction) பெறுவதற்கும் இடமாகிச் செயலுக்குத் தூண்டும்.

இறைவன் இன்றி உயிர் தாஞக எதையும் உணராது. அதாவது பொருள்களையும் (உலகம்), தன்னையும், மும்மலங்களையும்,

இறைவனையும் உணராது. இறைவன் உயிருக்குத் தன்னைப்பற்றி உணர்த்தும்போதும் அதைப்பற்றியே உணர்த்தும்போதும் புலன் கரணம் ஆகியவற்றின் உதவி தேவைப்படுவதில்லை. வெளிமுக அறிவுக்குத்தான் அவை தேவை. இது உள்முக அறிவு ஆதலால் அவை தேவையில்லை. உள்முக அறிவு இன்றி, புலன்களாலோ கரணங்களாலோ இறைவனை உணர வியலாது என்பதைச் சேக்கிழார்,

> "பூண்ட ஐம்புலனில் புலப்படாத இன்பம், புணர்ந்து மெய்யுணர்வினில் பொங்க"29

என்பார். மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றுள் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்றையும் உயிருக்கு அறிவித்து நீக்கியே, இறைவன் பதி, பசு, பாசம் ஆகியவற்றை நேரே (மெய்யுணர்வில்) அறிவிக்கின்றான். பாசங்கள் மூன்று. அவற்றுள் ஒன்று மாயை. மாயையின் காரியம் உலகம். அதாவது மாயை என்ற மூலப்பொருளிலிருந்து (premordial Energy) படைக்கப்பட்டது உலகம். உலகத்தைப் பற்றி, மும்மலங்கள் உள்ள போது, புலன் கரணம் ஆகியவற்றின் வழி, உயிர் அறியும்படி இறைவன் அறிவிப்பது பாச ஞானம். பாசத்தை விலக்கி, உயிருக்கு அதைப்பற்றியே நேரடியாக அறிவிப்பது பசுஞானம் பாசஞானம் பசுஞானம் இவ்விரண்டிற்கும் வேறாக, இறைவன் தன்னைப் பற்றி உயிருக்கு நேரடியாக அறிவிப்பது பதிஞானம்.

இவ்வாறு ஓர் உயிருக்கு முதல்முறையாக இறைவன் பசுஞானம், பதிஞானங்களை அறிவித்தவுடன், பாசம் ஒருதலையாக (என்றென்றும்) விலகி நின்றுவிடாது. மீண்டும் வந்து உயிரைச் சூழ்ந்துகொள்ளும். அப்போது செய்யவேண்டுவது யாது? மனம், புலன்களின்வழி வெளி விடயத்தைப் பற்றுவதுபோல், உள்விடயமாகிய மெய்யுணர்வையும் பற்றக் கூடியது ஆதலால் அங்ஙனம் மெய்யுணர்வை மனம் பற்றி, விட்டுவிடாமல், அகங்காரத்தால் மீண்டும் மீண்டும் சிந்தனைக்குக் கொண்டுவந்து, பயிற்சியால் தெளிவுபெற வேண்டும். அதாவது சிந்தனை, மெய்யுணர்வைத் தொடர்ந்து சிந்தித்துப் புத்தியில் சேர்க்கவேண்டும், புத்தி அதில் தெளிவு பெறவேண்டும். இத்தனையும் நிகழும்போது, இவற்றில் மனமானது ஒன்றிநின்றால், மனவுணர்ச்சி வேறுவிடயம் எதிலும்

பற்றுமல், சித்தத்திலும் புத்தியிலும் கலந்து கரைந்துவிட, மெய்யுணர்வு உறுதிப்பாடு (Conviction) பெறும். மனம் தனது இயல்பாகிய உணர்ச்சி வேகத்தால், மெய்யுணர்வில் நின்ற இறைமையில் - இறை உருவத்தில், இறைக்குணத்தில், இறையருளில்-கசிந்து, நெகிழ்ந்து, உருகும். உலகியலில் செல்லும் அதன் உணர்ச்சிகள் பலவும் - நன்றி, பரிவு, அன்பு, காதல், ஏக்கம், வேட்கை, பெருமிதம், ஊடல், கோபம் முதலியவை-இறைவனின் விஷயத்திலும் செல்லும். இறைவனைப் பற்றிய தெளிவே ஞானம். அதில் மனவுணர்ச்சி ஒன்றி நின்றுல்- கலந்து கரைந்து நின்றுல்- அன்பு முறுகிக்கனிந்து, அந்த ஞானம் அனுபவம் ஆகும்.

இவ்வளவும் நடைபெறுவது எளிதன்று. இதற்கு உயிரின் முயற்சியுடன் இறைவனின் திருவருள் இன்றியமையாதது. அதனைத் தருமாறு இறைவனை அழுதும் தொழுதும் பன்னுள், பன்முறை வேண்டிக்கொள்ள வேண்டும். வேறுவழியே இல்லை. இது ஞானிகளின் வாழ்வில் எல்லாம் கண்ட உண்மை. இது பற்றித் திருநாவுக்கரசர்.

> ''அவன் அருளே கண்ணுகக் காணின் அல்லால்
> இப்படியன், இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
> இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணுதே''30

என்று கூறுவார்.

பதியாகிய இறைவனைப் பற்றிய மெய்யுணர்வை அவன் வழங்கியருளினுைம், அதில் மனம் ஒன்றி நிற்பதற்கு, அவனிடம் கூடுதலான அன்புவேண்டும். இப்பெருகிய அன்பையும் அவன் அருளால்தான் பெறமுடியும். அன்பு பெருகப்பெருக, மனம் கசிந்து கரைதலானது பெருகி, மெய்யுணர்வால் 'கண்ட' காட்சியை மீண்டும் மீண்டும் பற்றிச் சித்தத்திற்கும் புத்திக்கும் அது கிடைக்குமாறு செய்யும். இங்ஙனம் மெய்யுணர்வாகிய ஞானம், கரணங்களுக்குக் கொண்டுவரப்பட, மனம் பிற கரணங்களில் கலந்து நிற்க, உயிர் அக்கரணங்களுடன் இயைந்து நின்று அன்பைப் பெருக்கி, ஞானனுபவம் பெற்றுல்தான் அது நிலையான அனுபவம் ஆகும். மனித ஆளுமை (Personality) முழுவதும்

தழுவிய – அந்த ஆளுமையை ஆன்மீகத்தில் வளர்க்கின்ற- அனுபவம் ஆகும். அது மேலும் வளரவும் பெறும். அங்ஙனம், வளரவளர, பாசங்கள் முழுவதும் ஒருதலையாக-மீண்டும் வந்து சூழாதவண்ணம் - விலகி நிற்கும். இதுவே விடுதலை; வீடுபேறு.

இதுவரை உணர்வும், மெய்யுணர்வும், ஞானனுபவமும் பற்றிக் கூறப்பட்ட செய்திகள், மணிவாசகர் ஆட்கொள்ளப் பெறுவதற்கு முன்னும் பின்னும், அவர்தம் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள உதவும்.

மணிவாசகர் அன்பு ஒன்றே மேலான இறையனுபவத்தை எய்துவிக்கும் என்பதை நூலறிவால் நன்கு உணர்ந்திருந்தார்.[31] இறைவனிடம் தமது அன்பு அழுந்தச் செல்லாமல், உலகியல் தொடர்பின் அழுத்தத்தால், மனம் அவனைப் பற்றுவதும் விடுவதுமாக, ஓரளவு மட்டும் அன்புகொண்டதை எண்ணி வருந்தினர். அவனை அடைதலே வாழ்வின் உறுதிப்பேறு என நூல்கள் அறிவுறுத்துவன ஆதலின், அன்புப் பெருகப் பெருமல், அவனையடைவது எவ்வாறு என்று வருந்தியிருந்தார்.

இந்தநிலையில் அவருக்குத் திருப்பெருந்துறை நிகழ்ச்சி நடை-பெற்றது. அது இறைவன் அவரை ஆட்கொண்ட நிகழ்ச்சி. திருவாசகத்தில் உள்ள சான்றுகளைக் கொண்டு இந்நிகழ்ச்சியைக் காண்போம். மணிவாசகர் சில குறியீடுகளை (Symblols), பயன் கொண்டு, தம் மெய்யுணர்வு அனுபவத்தை விளக்கும் வகையில், இந்தநிகழ்ச்சியைப் பலவிடங்களில் குறிப்பிடுகின்றார். இக்குறியீடுகளால் அவர் குறிப்பிடும் பொருளையும் உணர முயல்வோம்.

1. திருப்பெருந்துறையில் அவர் இறைவனை நேர்பெற உணர்ந்தார். அவன் அகமுகக்காட்சியில் தன்னை அவர்க்கு அறிவித்துப் பதிஞானம் அளித்தான்.

"கண்ணால் யானும் கண்டேன் காண்க
சிவனென யானும் தேறினன் காண்க"[32]

இங்குக் 'கண்' என்ற குறியீட்டால் மணிவாசகர் தம் உயிர் உணர்வைக் குறிப்பிடுகின்றார். அதில் மனம் பற்றிச் சிந்தித்துப் புத்தியால் தெளிந்து, சிவனே இக்காட்சி தந்தவன்'

எனத் தெளிந்ததை – பதிஞானம் பெற்றதை-இங்குக் குறிப்பிடுகின்றார். இவ்வரிகள் அவர்பெற்ற அகமுகக் காட்சியைத் தொகுத்துச் சுட்டுபவை. இனி விரித்துக்கூறும் சான்றுகளைக் காண்போம்.

2. திருப்பெருந்துறையில் ஒரு குருந்த மரத்தின் நிழலில் மறையோன் ஒருவன் அமர்ந்து, அவரை வலிய அழைத்து ஓர் இந்திரசால வித்தை காட்டினான்.

"…………..திருப் பெருந்துறையில் செழுமலர்க்குருந்தம் மேவியசீர் இருந்தவாறு"33

"அந்தணன் ஆகி ஆண்டு கொண்டருளி
இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்"34

"அறைகூவி ஆட்கொண்டருளி
மறையோர் கோலம் காட்டி அருளலும்"35

அந்த மறையோன் காட்டிய இந்திரசால வித்தை யாது?

3. அவன் கருணை மிகவும் கொண்டு மணிவாசகரை நோக்கி, 'அதோபார்' என்று இறைவனின் **"பெய்கழல் அடியைக்"** காட்டினான். மேலும், 'உன்னைப் பிரியேன்' என்று மணிவாசகரிடம் கூறினான்.

"கருணையினால் பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்று உன் பெய்கழல் அடிகாட்டிப் பிரியேன் என்று அருளிய அருளும்"36

முன்பு நாம் குறிப்பிட்டதுபோல இவையெல்லாம் செவிப்புலனாகும் வார்த்தைகள் அல்ல. மெய்யுணர்வு அனுபவம்; பேச்சு இறந்த மணிவார்த்தை.

4. அவன் மணிவாசகருக்குக் காட்டிய 'பெய் கழல் அடி' என்பது ஜோதி வடிவம் ஆகும். ஜோதி வடிவத்தையே பின்னும் திருவாசகத்தில் 'கழல்' என்ற குறியீட்டாலும் திருவடி என்ற குறியீட்டாலும் குறிப்பிடுகின்றார். இச்சோதி வடிவம் தோன்றிய போது மறையோன் மறைந்தான்.

"திருவார் பெருந்துறைச் செல்வன் ஆகிக்
கருவார் சோதியில் கரந்த கள்ளமும்"37

இச்சோதி வடிவம் மலர்போன்று குளிர்ந்து விளங்கியது.

"மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே"38

5. பின்னர் அருளுருவம் ஆகிய சோதி வடிவமே உருவமாகிச் செந்நிற மேனியும் நீலகண்டமும் வெண்ணீற்றுக் கோலமுமாகத் தோன்றியது. உமையொரு பாகத்துடன் விளங்கியது.

"......................உன்றன்
வண்ணந்தான் அதுகாட்டி, வடிவு காட்டி,
மலர்க் கழல்கள் அவை காட்டி"39

"கண்டம் கரியான் செம்மேனியான் வெண்ணீற்றான்"40

"எந்தமை ஆண்ட பரிசது பகரின்
ஆற்றலதுவுடை அழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்"41

"அவன்எனை ஆட்கொண்டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க"42

முன்பு திருக்கோயிலில் எந்தத் திருவுருவைப் பார்த்திருந்தாரோ அதுவே அகமுகக்காட்சியில் தோன்றியது. ஆனால் உயிரும உணர்வும் உள்ள மனிதனாகத் தோன்றியதும். அதுவே ஜோதியாகத் தோன்றிக் குளிர்ந்து விளங்கியதும், அச்சோதியே அம்மையப்பன் உருவில் தோன்றியதும் அகமுகக்காட்சியின் தனித்தன்மையாகும். இதனையே,

"காட்டாதன எல்லாம் காட்டிச்
சிவம் காட்டி"43

என்றார். மறையோனாகத் தோன்றியவன் "பேசியதும்" அகக்காட்சியின் தனித்தன்மையே. ஆதலின்,

"கேளாதனவெல்லாம் கேட்பித்து"44

என்றும், இவ்வார்த்தையையே, "மாசில் மணியின் மணி வார்த்தை' என்றும் கூறினார். இவ்" வார்த்தைகளால்',

இறைவன் அவருக்கு ஆன்மீகத்தில் உயர்வழியை நன்கு புலப்படுத்தினன். இவ்வுபதேசம் வாசிகதீட்சை என்று கூறப் பட்டாலும், உண்மையில் வாசகம் ஒன்றும் கூறப்படவில்லை. அவ்வாசகம் ''பேச்சு இறந்த மாசில் மணியின் மணிவார்த் தை''யே; மெய்யுணர்வு அனுபவமே.

> ''அறிவிலாத எனைப் புகுந்து ஆண்டுகொண்டு
> அறிவதை அருளிமேல்
> நெறியெலாம் புலமாக்கிய எந்தை''45

இக்காரணம் பற்றி, அந்த மறையோனையே-மறையோன் வடிவில் தோன்றிய சிவனையே-தம் குருவாக மேற்கொண்டார்.

> ''அருபரத் தொருவன் அவனியில் வந்து
> குருபரன் ஆகி அருளிய பெருமை''46

தாம் கண்ட அகமுகக்காட்சி, ''நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத்துள்ளே'' தாம் கண்டது என்று கூறுகின்றார்.47 இதன் கருத்தாவது: இறைவன் உயிருக்கு நேர்பெற (நேரடியாக) உணர்த்துதல் எப்போது என்றால், அவ்வுயிர் துரியம் என்ற உணர்வுநிலையில் உள்ளபோது ஆகும். பிறர் எல்லாம் விழிப்பு (நனவு) என்ற உணர்வில் இருந்து புறக்காட்சிகளைக் கண்டு-கொண்டிருக்க, மணிவாசகர் இறைவன் திருவருளால் துரிய நிலை உணர்வைப் பெற்று, அவ்வுணர்வால் அகமுகக் காட்சி கண்டார். புறக்காட்சி எதனையும் காணமல் இறைவனுடன் நேருக்கு நேர் நிற்பதாக உணர்ந்தார்.

இந்தக் காட்சியே அதிசயம்; இந்திர சாலம். ஆனால் இதன் விளைவு இதைவிட அதிசயமாக இருந்தது. ஆதலின் மணிவாசகர் அதைப்பெரிதும் வியந்து பாடுகின்றார். ஒருவிளைவு, இறைவன் அவர் மனத்தின் உள்ளே புகுந்தமை; அதனால் விளைந்த ஞானனு பவம். சமயநூற் கல்வியும் ஞானசம்பந்தமாக விசாரமும் மேற் கொண்டபோது, எந்த இறைவன் அறிவுக்குப் புலனாகி, மனத்திற்கு எட்டாதவனாக இருந்தானோ, அந்த இறைவன் இப்போது அவரது ''ஊனெலாம் நின்று உருகப் புகுந்தாண்-டான்''48. ''உள்ளே புகுந்தான்''49 சமயநூல்களைக் கற்றபோது

இறைவன் விஷயத்தில் உணர்ச்சிவயப்படாத மனம், இப்போது இறைவன் உணர்த்திய மெய்யுணர்வில் - அகக்காட்சியில்- எளிதாகப் பற்றி நின்று, உணர்ச்சி வசப்பட்டுப் பாகாய்க் கசிந்து கரைந்து உருகியது. மனத்தின் உருக்கம் உடலில் மெய்ப்பாடாக வெளிப்பட்டது. எத்தகைய மெய்ப்பாடு? எலும்பு எல்லாம் உருகுவது போன்ற உணர்ச்சியைத் தரும் மெய்ப்பாடு. முன்பு அவர் மனம் ஏதோ ஒருமுறை கசிந்துருகுவது உண்டு என்பதை முன்னர்க் குறிப்பிட்டோம். மனம் இறையுணர்ச்சியைப் பற்றுவதும் விடுவதுமாக இருந்தது என்றும் குறிப்பிட்டோம். உலகியலால் கல்போல உறைந்து கிடந்த மனம், இப்போது உருகிய தன் அளவு, முன்பு எப்போதும் உருகியதில்லை. இந்த மெய்ப்பாடும் தோன்றியதில்லை. ''மனக்கல் நெகிழ்ந்தது. அமுதம் உண்டாற்போல இன்பம் விளைந்தது. இறைவனிடம் முன்பு ஒருபோதும் இல்லா அன்பு பெருகியது''

''விச்சைதான் இது ஒப்பது உண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடியனுக்கி
அச்சம்தீர்த்து ஆட்கொண்டான் அமுதம் ஊறி
அகம் நெகவே புகுந்தாண்டான் அன்புகூர''50

என்று இவ்விந்தையைப் பாடுகின்றார் மணிவாசகர். முன்பு மனம் கசியாதது பற்றி அதனைக் கல் என்று கூறியவர், அது இப்போது கசிந்துருகியது கண்டு, இறைவன் கல்லைக் கனியாக்கும் வித்தையைச் செய்தனன் என்றும், முன்பு தான் இறைவனுக்கு அன்பன் அல்லன்; இப்போது அவன் அன்பன் ஆக்கினன் என்றும் கூறுகின்றார். அவன் கருணையை எண்ணி உருகுகின்றார்.

''இல்லை நின் கழற்கு அன்புஅது என்கணே
ஏலம் ஏலும்நற் குழலி பங்கனே
கல்லை மென்கனி ஆக்கும் விச்சைகொண்டு
என்னை நின்கழற்கு அன்பன் ஆக்கினாய்
எல்லையில்லை நின் கருணை''15

இறைவனின் காட்சியையும், அவன் உணர்த்திய மெய் யுணர்வையும், அவன் காட்டிய உயர் ஆன்மீக நெறியையும், அவனது எல்லையில்லாக் கருணையையும் எண்ண, எண்ண, அவர் சிந்தனை அவனிடமே ஒன்றியது. அகக்கண்ணுற் கண்ட காட்சி மனத்தில் பதிந்து, புறக்கண்ணுலும் பார்க்கத்தக்க உருவெளித் தோற்றமாய் நீங்காது நின்றது, அதைப்பார்த்துப் பார்த்து மெய்யுணர்வு அனுபவத்தில் நின்ருர்.

"சிந்தனை நின்தனக்கு ஆக்கி நாயினேன்தன்
கண்ணிணை நின்திருப்பாதப் போதுக்கு ஆக்கி"[52]

கோயிலில் கண்டதும் அகக்காட்சியில் கண்டதும் ஆகிய இறைவனின் திருவுருவம் ஒன்றேயாகக் கண்டார் ஆதலின், இறைவனின் திருமேனியை வழிபட்டு, அவ்வழிபாட்டில் ஐம் புலன்களையும் மனத்தையும் ஈடுபடுத்தி மகிழ்ந்தார்.

"வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக்கு ஆக்கி ஐம்புலன்கள் ஆர
வந்தனை, ஆட்கொண்டு உள்ளே புகுந்த
விச்சை மால் அமுதப் பெருங்கடலே மலையே
உன்னைத் தந்தனை"[53]

பதிஞானமும் சிவானுபவமும் பெற்ருர் ஆதலின் 'உன்னைத் தந்தனை' என்று கூறினுர். அகக்காட்சியின் நினைவிலும், வழி பாட்டிலும் நாம் பெற்ற இன்பத்தை, ஐம்புலன்கள் ஆர வந்தனை என்று கூறியது அன்றியும்,

"வினையேன் மனத்துத் தேனையும் பாலையும் கன்னலையும்
அமுதத்தையும் ஒத்து ஊனையும் என்பினையும்
உருக்கா நின்ற ஒண்மையனே"[54]

என்ற வரிகளிலும் குறிப்பிடுகின்ருர். தம் உள்ளமும் உடலும் முதன்முதலில் இந்த ஞானுனுபவத்தில் திளைத்தன என்பதை,

"ஊனைநாடகம் ஆடுவித்தவா, உருகிநான் உனைப்
பருக வைத்தவா
ஞானநாடகம் ஆடுவித்தவா"[55]

என்று குறிப்பிடுகின்ருர்.

மணிவாசகர் அகக்காட்சி பெற்றதன் மற்றொரு விளைவு அவர் இறைவனுக்கு ஆள் ஆயினமை. பிறவியைக் கடல் என்று உணர்ந்து, துன்பங்களிலிருந்து தப்புவதற்கு வழி என்ன என்று ஆராய்ந்து வந்தவர் அவர். ஐந்தெழுத்து மந்திரம் துணை செய்யும் என்று அதனை ஓதிவந்தவர். இப்போது இறைவன் ஜோதியாய் நின்று உணர்த்திய மெய்யுணர்வில் மனம் பற்றி நின்று, அன்பு பெருக்கிக் கசிந்து நின்றமையால், அம்மெய் யுணர்வைக் கொண்டு பிறவிக்கடலிலிருந்து தப்புவது திண்ணம் என்று உணர்ந்தார்.

"திண்ணந்தான் பிறவாமல் காத்து ஆட்கொண் டான்"55அ

"நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த"55ஆ

வாழ்வெல்லாம் அவர் விடைதேடிக் கொண்டிருந்த வினவிற்கு விடை இவ்வுணர்வின் மூலம் இப்போது கிடைத்து விட்டது. ஆகவே, இறைஜோதியை மீண்டும் காணவேண்டும் என்று பெருவேட்கை கொண்டார். பாண்டிய மன்னனையும் தம் அமைச்சுப் பொறுப்பையும் மறந்தார். தாம் குதிரை வாங்கப் புறப்பட்டதையும், அதற்கெனத் தாம் வைத்திருந்த பெருநிதி யையும் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. தாம் பாண்டியனின் ஆள் என்ற உணர்வு-கடமையுணர்வு-அவர் உள்ளத்திலிருந்து விலகிவிட்டது. 'இறைவனே தன் தலைவன்; அவன் காட்டிய உயர் நெறியைப் பின்பற்றி அவனை அடைவதே குறிக்கோள்'-என்று கொண்டுவிட்டார். இது அவர் வாழ்வில் தோன்றிய மிகப் பெரிய திருப்பம்.

இதுவரை அவரது அறிவு முயற்சியாக இருந்த இறைநெறி (சமயம்), இப்போது உணர்ச்சி வடிவம் எடுத்து, மற்ற எண்ணங்களைத் தள்ளிவிட்டு முன்நின்றது. இதனையே 'ஆட் கொண்ட', 'ஆண்ட' என்ற சிறப்புச் சொற்களால் குறிப்பிடு கின்றார் மணிவாசகர். அவரை ஆட்கொண்டு உள்ளத்தில் புகுந்த இறைவன், அவனுக்குத் தலைவனாகி, பிற எண்ணங்களை முக்கியம் என்று கருதாதவாறு செய்தான். இறையன்பு அவர் உள்ளத்தில் தலைமையுணர்ச்சியாய் நின்றது. இதனையே,

"நின் கழற்கு அன்பன் ஆக்கிஞய்" என்று குறிப்பிடுகின்ருர். தம் உள்ளத்தில் மெய்யுணர்வால் எழுந்த ஜோதிக் காட்சியின் விளைவாகவே அன்பு ஊற்றெடுத்துப் பெருகியது ஆதலின், 'கழல்' என்ற குறியீட்டை இங்குப் பயன்படுத்துகின்ருர். தம்முள் ஜோதி எழுந்ததனை மற்ருெரு குறியீட்டாலும் புலப்படுத்துகின்ருர். 'இறைவனின் திருவடி யிரண்டும் தம் தலையில் பொருந்தின' என்கின்ருர்.

"இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலும்"[66]

இவ்வன்பினுல், இறைவனடியார்களைத் தம் சுற்றமாக தம் சமுதாயமாகக்-கொண்டார். தம் குடும்பச் சுற்றம், அரசியல் சுற்றம் ஆகியோர் மீது முறையே பாசம், கடமையுணர்வு ஆகியவை காரணமாகக்கொண்ட உறவுணர்ச்சியின் அழுத்தம் குறைந்தது. அவரிடம் உலகியற் சமூதாய உணர்ச்சி இருந்த இடத்தில், இப்போது இறையியற் சமுதாய உணர்ச்சி அரும்பியது. இறையடியார்கள் மிக்க அன்பு உடையவர்கள் ஆதலின் அவர்களின் கூட்டுறவை இறைவன் தமக்குத் தந்ததைப் பாராட்டுகின்ருர். அந்த மிக்க அன்பையே அவரும் வேண்டியதை இது புலப்படுத்தும்.

"விச்சைதான் இது ஒப்பதுண்டோ கேட்கின்
மிகுகாதல் அடியார்தம் அடியன் ஆக்கி"

அடியார்களுடன் கூடி இறைவனின் புகழைப் பேசியும் பாடியும் உணர்ச்சி மிகுதியால் கூத்தாடியும் மகிழ்ந்தார்.

"இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்
தேன்',

"யாம் ஆர்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினேம் அவன் அடியார் அடியாரோடு
மேன்மேலும் குடைந்தாடி ஆடுவோமே"[57]

அவரது வாழ்வின் போக்கே மாறிவிட்டது. திருப்பெருந்துறையிலேயே, தம் அரசியற் பொறுப்பு அத்துணையும் மறந்து, அடியார் சமுதாயத்திலேயே ஒருவராய் வாழத்தொடங்கினர். இத்தகைய மாற்றத்தை வில்லியம் ஜேம்ஸ், "Conversion" என்று குறிப்பிடுவார்.[56அ]

இறைவன் ஒருமுறை மெய்யுணர்வை அளித்தவுடனேயே, மனம் அதில் பற்றி உறுதியாக நின்றுவிடாது என முன்னர்க் கூறினோம். பற்றுவதும் விடுவதும் ஆகிய அதன் குணத்தின்படி, மணிவாசகருக்கு மெய்யுணர்வினால் விளைந்த உணர்ச்சி வேகம் சிறிது சிறிதாகக் குறைந்தது. மேலும். பிறவிகளின் தொடர்ச்சியால் வந்துள்ள வினைப்பயனும், பாசவுணர்ச்சியும், ஆணவ மலமும் அத்துணை எளிதில் நீங்குவன வல்லவே! இவை பதி ஞானத்தின் உணர்ச்சிச் செல்வாக்கு உள்ளவரை ஒதுங்கியிருந்து, அதை மனம் மறந்துகொண்டு வரும் பொழுது, மீண்டும் வந்து சூழ்ந்துகொண்டன. இறையன்பை மணிவாசகர் விட்டுவிட்டார் என்பது அன்று. எலும்புகள் எல்லாம் உருகும் உணர்ச்சியைத் தந்த அந்த அன்பின் வேகம், இறைவன் நினைவில் உருகிக் கசிந்து நின்ற அந்த அன்புக்கனிவு, இப்போது இல்லை. இறைவன் ஜோதியாய் அவருள் எழுந்தது, அவரது ஆன்மீக அனுபவப் பாதையில் ஒரு தொடக்கம்தான். இன்னும் எத்தனையோ தொலைவை அவர் கடக்க வேண்டியுள்ளது. அதற்கு அவரை ஆயத்தப்படுத்துவதற்காகவே இறைவன், மீண்டும் தோன்றுமல் இருந்தான். அறிவிலேயே மூழ்கியிருந்தவருக்கு, அன்பை, மெய் யுணர்வால் உண்டாக்கி, ஞானஇன்பத்தின் சுவையைச் சிறிதே காட்டி, மறைத்து-தன் திருவடியின் அழகை, ஒளியைக் காட்டி, மறைத்து-பிரிவுணர்ச்சி என்ற தீயை அவர் உள்ளத்தில் மூட்டி விட்டான். உலகியல் எண்ணம், கடமையின் நினைவு முதலிய வற்றுல் இறையன்புப் பெருக்கத்தை மறந்தவர் அங்ஙனம் மறந்த நேரம் தவிர, மற்ற நேரத்தில், முன்பு மெய்யுணர்வால் விளைந்த அன்பையும், இன்பத்தையும் நினைத்துக்கொண்டு ஏங்கினர். "எனக்கு உன் உண்மை வடிவத்தைக் காட்டினையே. அதைக் கண்டும், இப்போது காணவில்லையே" என்று வருந்தினர்.

"தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்
கண்டும் கண்டிலேன் என்ன கண்மாயமே"[58]

நாளாக ஆக இப்பிரிவுணர்ச்சி அவரை வாட்டியது; வருந்தியது; "பிரியேன்" என்று இறைவன் கூறிய மணிவார்த்தையை நினைத்துக்கொண்டு, 'என்னைப்பிரிவது அவன் திருவுள்ளக் குறிப்பு அன்று, என் அன்பு குறைந்தது கண்டு அவன் காட்சி

தராமல் இருக்கின்றான். அவனைப்பிரிந்தும், நான் என் தலையை மோதி உடைத்துக்கொள்ளவில்லையே' என்று உணர்ச்சி வசப்பட்டார்.59 'அவனைக் காணாமல்-அவனை அணுகிச் சேராமல் உடலை ஓம்பிக்கொண்டிருக்கின்றேனே' என்று நொந்தார்.60 இவ்வாறு, அன்புக் குறைவை உணர்த்திக் காட்டிவிட்டது இறைவனின் பிரிவால் தோன்றிய உணர்ச்சி. முன்பு மெய்யுணர்வால் எழுந்த உணர்ச்சி வேகத்தால், 'நாம் மேலைவீடு எய்த' என, வீடுபேறு பெறுவது உறுதி என்று கூறியதை நினைத்துக் கொண்டு, "உள்ளத்தில் நிறைந்து எழும் அன்பை வளர்த்து உருகி நில்லாமல், வீடுபேறு பெற அவசரப்பட்டேனே. மிக்க அன்பினை உடைய அடியார் வீடுபெறக் கண்டு, அவர்களுடன் சேர்ந்து இருந்தமையால், நானும் அந்நற்கதி பெற நினைத்தேனே! அடியாரும் நானும் ஒன்றாகிவிட முடியுமா? ஒருமுறை உன் கருணையால் காட்டிய உனது மலர்ப்பாதத்தை மீண்டும் காண ஆசைப்பட்டேனே! அன்பு இல்லாமல் இவை எல்லாம் எவ்வாறு சாத்தியமாகும்? வேடத்தால் மட்டுமே நான் அடியான்; அன்பால் அல்லவே?" என்று வருந்தினார்.

> "நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து நான்நடுவே
> வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்
> றேன்"61

இப்பிரிவால், யாரும் அடையமுடியாத இறைவனின் அரிய நிலை அவருக்கு-அவர் மனத்திற்குப்-புரிந்தது. 'அத்தகைய அருமை உடையவனை நானும் கண்டேன் என்று எளிதாக நினைத்தேனே. குழந்தையின் கையில் கொடுத்த பொற்கிண்ணத்தின் அருமையை -விலைமதிப்பை-தன்னால் பெறமுடியாத தன்மையை-அக்குழந்தை அறியாதது போல, உன் கருணையினால், கடையவனாகிய என்னைக் கலந்து ஆட்கொண்ட உனது அருமையை அறியாமல் இருந்தேனே'62 என்று வருந்துவதால் இது அறியப்படும். இதனையே திருவெம்பாவையில், மகளிர் தம் தோழியொருத்தியை நோக்கி ஏசும் கூற்றாக'

> "மால் அறியா, நான் முகனும் காணா மலையினை, நாம்
> போல் அறிவோம் என்று, உள்ள பொக்கங்களே பேசும்
> பாலூறு தேன் வாய்ப் படிறீ"63

என்று கூறுகின்றார். சிவபிரான் யாராலும் காண்டற்கு அரியவன் என்பதைத் திருவாசகத்தின் மிகப் பலவிடங்களில் கூறுகின்றார்.

இத்துணை அருமைப்பாடு உடைய இறைவனை, ஒருகணம் கூட மறவாது நினைந்துருகும் மிக்க அன்பு ஒன்றினாலேதான் அடையமுடியும் என்று உணர்ந்து, அவனைக் காணப்பெற்றும் அவன்பால் தொடர்ந்து அன்பு கொள்ளாமைக்காகத் தம் மனத்தைப் பழித்துக் கொண்டார்.[64] இறைவனையே தலைவனாகக் கொண்டதால், அவன்பால் மிக்க அன்பை நிரந்தரமாகத் தருமாறு அவனையே வேண்டிக்கொண்டார்.[65] நிலைமையால் அரிய அவன், குணத்தால் கருணையாளன் என்று கண்டதால், அக்கருணையையே தமக்குச் சாதகமாகப் பற்றிக்கொண்டு, ‘ஐயா, அன்பு இல்லாத என்னை-என் நெஞ்சக் கன கல்லை-கனி ஆக்கி, உன் திருவடிக்கு அன்பன் ஆக்கினாய். இப்போது உலகப்பற்றினால் மயங்கி நான் உன் அன்பிற்குப் பொருந்தாதவற்றைச் செய்தாலும், உன் கருணை காரணமாக, என்னை மீட்டுவிடுவாய்’ என்று விண்ணப்பித்துக் கொண்டார்.[66] ‘உன்னை நினைத்துப் பித்துக்கொள்ளச் செய்தவன் நீதான். நாடு, சுற்றம், அரசு, கடமை-எல்லாம் விட்டு, உன் கோயில் வாசலில் குடியிருக்கின்றேன். அன்பின் பெருக்கத்தை-உருக்கத்தை மறந்துவிட்டேன். உண்மைதான். ஆனால் நீ உன்னால் ஆட்கொள்ளப்பட்ட என்னை விட்டுவிட மாட்டாய். தாம் வளர்த்தது நச்சு மரமாக வளரக்கண்டாலும் அதை வெட்டிவிட மாட்டார்கள் மக்கள். நானும் அந்நச்சுமரம் போலவே’’[67] என்று இறைவனின் கருணையை நம்பியிருந்தார். ஒரொருமுறை, அவன் கருணைசெய்ய மாட்டானோ என்ற ஐயம் எழுந்தபோது, செயலற்று, ‘ஐயா, என்னை ஆட்கொண்டு விட்டாய். இனி உலகியலுக்கு நான் தகுதி இல்லை. என் இறைப்பித்தைக் கண்டு, உலகர் என்னை, ‘உன் அடியான்’ என்று ஏசுகின்றனர். உன் அன்பர் சிலர் என்னையும் அடியவன் என்று ஏற்றுப் பேசுகின்றனர்’[68] ‘எனக்கோ உன்னைவிடாது நினைத்து உருகும் அன்பு இல்லை. உன்னைக்கண்ட நான், மீண்டும் உன் திருக்காட்சி பெற விரும்புகின்றேன். நீ இரங்காமல், என்னைப் புறத்தே தள்ளிவிடுவாயோ ? உலகிளலிலும் வாழாமல், உன் அன்பருள்ளும் உணர்ச்சியால் சேர்ந்திராமல்-என்னசெய்வேன் ? நீ என்னைக் கைவிட்டால் யார் என்னை நோக்குவார் ? என்று வினவினார்.[69] தமது அன்பின்மையால் தம்மீதே எழுந்த வெறுப்பால், ‘பழுதே பிறந்தேன்’ என்றும், [70] உயிர்வாழ்வை நச்சி உண்டும் உடுத்தும் இருந்தேன்’ என்றும்[71] வருந்தினார்.

இறைவனிடம் கலப்பற்ற அன்பு செலுத்துவதற்குத் தடையாக உள்ள சுற்றம், அமைச்சுப்பொறுப்பு, கடமை ஆகியவற்றைத் துறந்து, இறைவன் தம்மை ஆட்கொண்டதற்கு ஏற்ப அடியவர் வாழ்வை மேற்கொண்டாலும், உலகியற் சூழலின்' வாசனை-மனப்பதிவு-இன்னும் நீங்காமல், அன்பு பெருகிவரும் ஊற்றை அடைத்துக்கொண்டிருப்பதை உணர்ந்தார். ஆதலின் "'இவ்வாழ்வை ஒழித்துவிடு'' என்று இறைவனை வேண்டுகின்றார் 72 உலக வாழ்வின் வாசனை, வாதனையாக இருப்பதை நீக்கு என்பதை இதன் பொருளாகக் கொள்ளலாம். இவ்வாசனைக்கு இடம் கொடுப்பதால், அடியார் வாழ்விற்கு அது பொருந்தாமை பற்றித் தம்மைப் 'பொய்யனேன்' என்று பழித்துக்கொண்டார்.73 'அந்தப் பொய்ம்மையை நீக்கி ஆட்கொள்' என்று இறைவனை வேண்டிக்கொண்டார்.74

தனது பொய்ம்மையை யாரே ஒப்புக்கொள்வார்? மணிவாசகரே பிரிவின் துயரத்தால், தம் பொய்ம்மையை-அதன் வேராகிய ஆணவ அழுக்கை-நுட்பமாக உணர்ந்து, அதை நீக்க இறைவனையே சரணடைந்தார், 'தாம்' என்பதை மறந்து, தம் வாசனை எல்லாம் மறந்து, சிவன், சிவன் புகழ் என்றே சதா எண்ணி அவன் புகழ்களை அன்பாய்ப் பாடவே விரும்பி, அந்த அன்பைப் பெறுவதற்கு அவனையே சரணடைந்தார்.

''மாண்டுமாண்டு வந்துவந்து மன்னநின் வணங்கவே''75

தம் அன்பு தகுதியற்றது; அதைக்கொண்டு அவனைப்பெற முடியாது. அவன் கருணையே வடிவானவன் ஆதலால், அக்கருணையைவேண்டி அழுதால், அவனை மீண்டும் காணப்பெறலாம் கண்டால், அவனிடம் பெருகிய அன்பு உண்டாகலாம் என்பதால் அழுது: அவனைச் சரண் புகுந்தார்.76

இறைவன் மெய்யுணர்வு நல்கியபோது அவரை அறைகூவி அழைத்தான் என்பதை முன்பு குறிப்பிட்டோம். அங்ஙனம் 'வா' என அழைத்ததை, அவனுக்கு நினைவூட்டி, 'வா எனக்கூறி என்னை உன் அடியான் ஆக்கினாய். அடியார் கூட்டத்தில் சேர்த்தாய். என் பொய்ம்மையால் உலகியலைச் சாரும் என்னை,

மீண்டும் நீ வருக என்று அழைத்து உன் பக்கம் இழுத்துக்கொள்ள வேண்டும்' என்று77 சரண் புகுந்தார்.

புலன்களின் தாக்குதலுக்கு உரியவனாக இவ்வுடம்பில் இருந்து வாழ்வதால் என்னை விட்டுவிடாதே78 என உலக ஆசைகள் தம்மைப் பற்றுவதால் தம்மைக் கைவிடலாகாது என்று விண்ணப்பித்தார். மனம் இறைவனுக்கு அன்புசெய்யாமல் வேறுவேறு விஷயங்களைப் பற்றுவதால், இத்தகைய தீமை தமக்கு நேரக்கூடும் என்று அஞ்சி இவ்வாறு கூறுகின்றார் என்றும், மனிதராய்ப் பிறந்தவர்க்கு இவை தோன்றுவது இயல்பு; இவற்றினின்றும் விடுபட இறைவன் திருவடிக்கு அன்புவேண்டி, அவனிடம் முறையிடுகின்றார் என்றும், பிறர்தம் குறைகளை, அவரிடத்துச் செல்லும் அன்பால் தம்மேல் இட்டுக் கூறினார் என்றும் இதற்குப் பல்வகை விளக்கங்களைக் கூறுவர். மும்மலங்கள் காரணமாகவும், பல பிறவிகளில் வாழ்ந்ததன் காரணமாகவும் மனத்தில் புதைந்து கிடக்கும் பல்வேறு ஆசைகளின் வாசனையை உய்த்துணர்ந்து, அதனை வேரொடுகளைய விரும்பி, இறைவன் தம்மைக் கைவிடாது இருப்பானாயின், மெல்லமெல்ல அவன் திருவடிக்கு அன்பை வளர்த்து, வழிபாடு செய்து, இடைவிடாது எண்ணி, அவன் பணிசெய்து, அத்தீமைகளைக் களைந்து தம்மை முற்றும் தூய்மையாக்கிக் கொள்ள, இவ்வாறு அவனிடம் முறையிட்டு வேண்டுகின்றார் என்று கருதுதல் பொருந்தும். உலகில் தீமைகள் எத்துணையும் இருக்கலாம். எத்துணைப் பாவிகளும் இருக்கலாம். இறைவன் துணையாயிருந்து கருணையும் அருளும் தந்தால், அன்பை வளர்த்து, அந்தப்பாவிகள் இத்தீமைகளை வென்றுவிடலாம் என்பது கருத்து. இக்கருத்துடன் பின்வரும் திருவாசகக் கூற்றுக்களைக் காண்க.

1. பொழிகின்ற தீப்புகு விட்டிலின் சின்மொழியாரில் பன்னாள் விழுகிறன் என்னை விடுதி கண்டாய் ?79

2. தீர்க்கின்றவாறு என் பிழையை நின் சீர் அருள் என்கொல் என்று
வேர்க்கின்ற என்னை விடுதிகண்டாய் ?80

3. உன் அருள் பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக்கிலேனை விடுதி கண்டாய் ?[81]

4. மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப, யான் உன் மணிமலர்த்தாள்
வேறுபட்டேனை விடுதி கண்டாய்[82]

5. மடங்க என் வல்வினைக் காட்டை நின் மன் அருள்
தீக்கொளுவும் விடங்க ! என்தன்னை விடுதி கண்டாய் ?[83]

6. தினைத்துணை யேனும் பொறேன் துயராக்கையின் திண்வலையே[84]

7. இனிய மது மதுப்போன்று என்னை வாழைப் பழத்தின்
மனங்கனிவித்து எதிர்வது எப்போது[85]

இறைவனை அகக்காட்சியில் காணப்பெற்ற மணிவாசகர், அவனடிக்கு உண்மை அன்புகொண்டு, உலகியல் காரணமாக, தம் மனம் மாறும் போதெல்லாம் வருந்தி, தம் உண்மையன்பை வளர்த்துக் கொள்வதற்கும், அடியாருடன் கூடி வாழ்ந்து இறையனுபவம் பெறுவதற்கும், இறைபணி செய்வதற்கும் ஏங்கி, ஒருமுறை கண்ட இறைக்காட்சியை மீண்டும் பெறுவதற்கு வேட்கை கொண்டு, இரைதேர் கொக்குப்போல அவன் திருவருளை எதிர்பார்த்து இருந்தார். இவ்வாறு திருப்பெருந்துறையில் அவர் பெற்ற மெய்யுணர்வால் விளைந்த உணர்ச்சி அவரது அருள்நெறி வாழ்வின் வாயிலாக அமைந்தது.

குறிப்புக்கள்

1. திருவாசகம் : திருச்சதகம் : 19.
2. திருவம்மானை : 3.
3. மேலது., 6.
4. கண்டபத்து : 2.
5. "வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி"–திருச்சதகம் : 26
6. "எனது உரை தனது உரையாக" -திருஞானசம்பந்தர் தேவாரம் : "நான் உரைக்கும் வார்த்தை எல்லாம் நாயகன் சொல் வார்த்தை" -வள்ளலார், திருவருட்பா : 6 ஆம் திருமுறை : சுத்தசிவநிலை : 18
7. திருச்சதகம் : 28.
8. பண்டாய நான்மறை : 7.
9. மேலது.
10. திருச்சதகம் : 26.
11. The Varieties of Religious Experience, PP.31-32.
12. அச்சோப்பதிகம் : 1.
13. கீர்த்தித் திருவகவல் : வரி 9-10.
14. மேலது., 17-20.
15. சிவபுராணம் : 4.
16. திருப்புலம்பல் : 3.
17. போற்றித் திருவகவல் : 41.
18. மேலது., 50-51.
19. மேலது., 52-53.
20. மேலது., 54-58.
21. திருச்சதகம் : 23.
22. போற்றித் திருவகவல் : 30-40.
23. திருச்சதகம் : 27.
24. திருக்கோத்தும்பி : 4.
25. கண்டபத்து : 8.
26. திருவம்மானை : 5.
27. திருவேசறவு : 1.
28. The Varieties of Religious Experience, PP.378-389.

29. பெரியபுராணம், ஏயர்கோன் கலிக்காமநாயனர் : பாடல் 90
30. திருநாவுக்கரசர் தேவாரம், பொது, வினவிடைத் திருத் தாண்டகம் : 10.
31. "பத்தியால் நினைந்து பரவுவார் தமக்குப் பரகதி கொடுத் தருள் செய்யும் சித்தனே" -அருட்பத்து : 8.
32. திருவண்டப்பகுதி 58-63 வரிகள் முழுதும் காண்க.
33. அருட்பத்து : 10.
34. கீர்த்தி : 42-43.
35. திருவண்டப்பகுதி : 146-149.
36. எண்ணப்பதிகம் : 2.
37. கீர்த்தித் திருவகவல் : 54-55.
38. சிவபுராணம் : 62.
39. திருச்சதகம் : 25.
40. திருவம்மானை : 9.
41. கீர்த்தித் திருவகவல் : 102-104.
42. திருவண்டப்பகுதி -63-64.
43. திருவம்மானை : 6.
44. திருச்சதகம் : 28.
45. மேலது., 32.
46. போற்றித் திருவகவல் : 75-76.
47. திருச்சதகம் : 28-
48. மேலது., 19.
49. மேலது., 26.
50. மேலது., 29.
51. மேலது., 94.
52. மேலது., 26.
53. மேலது, இப்பாடலில் வரும் 'இரண்டும் இலித்தனிய னேற்கே' என்ற தொடர்க்குப் பலரும் பலவாருக உரை எழுதினர். இரண்டும் என உமமை கொடுத் திருத்தலால், அவ்விரண்டு இப்பாடலில் வரு வனவே யாதல் வேண்டும். அவை திருவுருவக் காட்சியும் வழிபாடும் என்ற இரண்டுமாகும்.
54. நீத்தல் விண்ணப்பம் : 21.
55. திருச்சதகம் : 95.
55.அ திருச்சதகம் : 25.
55ஆ. திருவம்மானை ; 6.

56. திருப்பூவல்லி . 1.
57. திருச்சதகம் : 30.
57அ. To say that a man is 'converted' means that religious ideas, previously peripherel in his consciousness, now take a central place, and that religious aims form the habitual centre of his energy.

–Varieties of Religious Experience, P. 193.

58. திருச்சதகம் : 42.
59. மேலது., 37.
60. மேலது., 38.
61. மேலது., 11.
62. மேலது., 92.
63. திருவெம்பாவை : 5.
64 திருச்சதகம் : 20, 5, 14, 21, 22, 31.
65. திருச்சதகம் : 6, 11.
66. மேலது., 94.
67. மேலது., 96.
68. மேலது., 82.
69. மேலது., 59.
70. மேலது., 88.
71. மேலது., 40.
72. மேலது., 66.
73. மேலது., 73.
74. மேலது., 74.
75. மேலது.,
76. மேலது., 90.
77. மேலது., 41, 68.
78. நீத்தல் விண்ணப்பம் : 21.
79. மேலது., 5.
80. மேலது., 8.
81. மேலது., 14.
82. மேலது., 12.
83. மேலது., 19.
84. மேலது., 39.
85. மேலது., 34.

2. "அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியுங் குனிப்புடையான்"

ஓர் அமைச்சராக உலகியல் வாழ்வின் உச்சகட்டத்தில் வாழ்ந்த திருவாதவூரர் 'ஆட்கொள்ளப்பெற்று' அடியவராக மாறியமையைச் சென்ற சொற்பொழிவில் விளக்கினேம்: சிவபிரான் அவரை ஆட்கொண்டு, மெய்யுணர்வு—உலகத்தின் வாயிலை திறந்துகாட்டி மறைந்துவிட்டான். இறையின்பம் இன்னது என்று சுவைகாட்டி மறைந்துவிட்டான். இந்த நிகழ்ச்சியின் விளைவாக அவரது மனத்தில் பெருகிய அன்பு, நாளாக ஆகச் சுருங்கியது. இதை உணர்ந்து, அதற்குக் காரணம் தம் பொய்ம்மையே-தம்மைச் சூழ்ந்த பற்றுக்களாலும் உலகியல் பந்தத்தாலும் ஏற்பட்ட பொய்ம்மையே-என்று உணர்ந்துகொண்டார். அந்தப் பொய்ம்மை நீங்கவும், தம் மனத்தில் முன்புபோல் என்புருகும் அன்பு வளரவும் வேண்டி, இறைவனிடம் குறையிரந்து அவனைச் சரண் அடைந்தார். தம்மை 'அன்பன்' என்று முத்திரை குத்தியிட்டதற்கு ஏற்ப, 'உண்மையன்பன்' ஆக்கவேண்டும்; முன்பு காட்டிய திருக்கோலத்தை மீண்டும் காட்டிப் பற்றுக்களிலிருந்து மீட்கவேண்டும் என்று முறையிட்டார். குருபரன் ஆகிக்குருந்த மரத்து நிழலில் வீற்றிருந்து இறைவன் காட்டிய தெய்வீகக் காட்சியை, மீண்டும் என்று காட்டுவான் என்று ஏங்கி எதிர் பார்த்து,இறைவழிபாட்டைத் தொடர்ந்து ஆற்றிவந்தார். அவர் மனத்தில் கிடந்து வாட்டிய இறைப்பிரிவு-இறைவனைப் பிரிந்த வேதனை அருள் வேட்கையை வளர்த்தது. அவ்வருளைப் பெறத் தம்மையறியாமலேயே அன்பை வளர்த்து, உலகியலிலிருந்து உள்ளத்தால் ஒதுங்கி ஒதுங்கிச் சென்றார். இது பற்றுநீக்கம் எனப்படும். உலகப்பற்றின் நீக்கமும், இறைவனிடம் கொள்ளும் அன்பின் பெருக்கமும், இறைவன் இவர்பால் கருணை கொள்வதற்கு ஏதுவாயின. அவன் தாய்போலக் கருணைகாட்டி, அருள்தந்து,

தமது அன்பு நாள்தோறும் வளரச்செய்தான் என்று அவர் கூறுகின்றார். இறைவனுக்கு நாம் செலுத்தும் அன்பும், அவனது அருளும் ஒன்றுக்கு ஒன்று ஏதுவாகி வளர்வனவாகும்.

"சாயா அன்பினை நாள்தோறும் வளர்ப்பவர்
தாயே ஆகி வளர்த்தனை போற்றி" 1

மணிவாசகர் தம் மனம் உலகியலையெண்ணும் போதெல்லாம் வருந்தி, அதை வலிந்திழுத்து, இறைநெறியில் நிறுத்தும் நிலையும், அகமுகக் காட்சியில் கண்ட இறைவடிவத்தை நினைந்துருகி அந் நினைவில் இன்புறும் நிலையும் அவரிடம் மாறிமாறித் தோன்றின. படிப்படியாக அவர் உலகியலை மறந்து, அயலார் என்ன எண்ணுவர் என்று நினைப்பதை மறந்து, இறைப்பித்துக் கொள்ளும் நிலையை அடைந்தார். அவர் நிலைக்கு இரங்கி, இறைவன் மீண்டும் காட்சி கொடுத்தான். அக்காட்சியால் மெய்யுணர்வும் அன்பும் அவர் உள்ளத்தில் உறுதிபெற்றன. மெய்யுணர்வின் நினைவு முன்னைவிட அழுத்தமாகப் பதிந்து மனத்தை ஈர்த்தது. இறைவனின் வடிவழகில் மனம் பின்னும் அழுத்தமாகப் படிந்தது. ஒருமுறை அக்காட்சி பெறுபவர் மீண்டும் அதனைக் காணப் பெறுவது உண்டு என்றும், அதனால் அவர் உள்ளத்தில் 'மாறுதல்' உறுதிப்படும் என்றும் வில்லியம் ஜேம்ஸ் எழுதுகின்றார்.2

மணிவாசகரது அன்பு வளர்ச்சி இரண்டுவகை அளவுகளை உடையதாயிருந்தது. ஒருபுறம் இறைவனின் நினைவில் ஒன்றியிருந்து, அமைதி அன்பிற்கு இலக்கியமானார். மறுபுறம், அவனைக் காணாமையால் ஏங்கி, அரற்றி, அவனைத் தேடிப் பித்துக் கொண்டவர் போலத் திரிந்து, அன்பின் ஆற்றாமைக்கு எடுத்துக் காட்டானார்.

தமது இவ்விரண்டு நிலையையும்,

"கசிவது பெருகிக் கடலென மறுகி"

என ஒருவரியில் சுருங்கக்கூறி, அதை விளக்குவாராய், அமைதியன்பினை,

> "தப்பாமே தாம் பிடித்தது சலியாத்
> தழலது கண்ட மெழுகது போலத்
> தொழுதுளம் உருகி அழுதுஉடல் கம்பித்து
> ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்"3

என்று அதன் மெய்ப்பாடுகளை விரித்துரைக்கும் முகமாக எடுத்துக் காட்டுகிறார். தமது அன்பின் ஆற்றாமையை - வருத்தமும், திகைப்பும், ஏக்கமும், வேதனையும் தோய்ந்த அன்பை-

> "சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப
> நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
> பூணது வாகக் கோணுதல் இன்றிச்
> சதுர் இழந்து அறிமால் கொண்டு சாரும்
> கதியது பரம அதிசய மாகக்
> கற்றா மனம் எனக் கதறியும் பதறியும்"4

என்று அதன் மெய்ப்பாடும் விளைவும் தோன்ற எடுத்துரைக்கின்றார். இவ்வரிகளில் 'சகம்' என்றது, உலகியலாளர்களை 'நாடவர்' என்றது, தம்மைச் சேர்ந்தவர்களை, தொடர்பு இன்மையால் உலகியலாளர், 'பேய்' என்று நகையாடினர். தொடர்பு இருப்பதால், அமைச்சுப் பொறுப்புடையவர் இவ்வாறு இருப்பது முறையன்று' என, இவரைச் சேர்ந்த பிற அரசியல் அதிகாரிகள் பழித்துரைத்தனர். இவை பற்றி, நின் அடியான் என்று ஏசப்பட்டேன்' என்று அதற்காக வருந்தியவர், பின்பு இக்கேலியையும் பழிப்பையுமே தமக்கு அணியாக ஏற்று, அதற்காக மனம் தளராமல், தமது இறைப்பித்தை அளக்கும் அளவுகோலாக அவற்றைக் கருதினார். உலகியலில் வெற்றியுடன் வாழவேண்டும் என்று தாம் முன்பு நினைத்த நினைவை இப்போது இழந்து நின்றதைச் 'சதுர் இழந்து' எனக்குறித்தார்.

இறைவன்பால் அவரது அன்பு இவ்வண்ணம் வளர்ந்த போது, மனத்தின் ஆழத்தில் புதைந்திருந்த உலகியல் உணர்வுகளின் வாசனை பெரிதும் நீங்கிற்று. சான்றாக, 'பெண்கள் வாழ்க்கைக் கடலில் சுழித்தடிக்கும் காற்று' எனப்பாடிய5 உணர்ச்சி மறைந்தது. தம்மையே ஒரு பெண்ணாகப் பாவித்து, பிற பெண்களைத் தோழியராகக் கொண்டு, மகளிர் பழகும் விளையாட்டுக்களை

அவர்களுடன் விளையாடுவதாகப் பாவித்து, அவ்விளையாட்டில் இறைவன் நினைவையும், அவன் புகழையும், அவனது திருக் காட்சியையும், அதனால் தாம் பெற்ற இன்பானுபவத்தையும் இணைத்துப்பாடும் நிலை அவரிடம் தோன்றியது. இந்நிலையில் அவர் பாடுவன திருவெம்பாவை, திருப்பொற் சுண்ணம், திருக்கோத் தும்பி, திருப்பூவல்லி, திருத்தோணோக்கம், திருச்சாழல், திருவுந் தியார், திருப்பொன்னூசல் ஆகிய கவிதைகள். புலன் உணர்வில் எஞ்சிநின்ற வாசனையையும் அவர் வென்றுவிட்டமைக்கு இவை சான்றாகும். இதனை,

"மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன்ஐந்தின் வழியடைத்து"[6]

எனக் குறிப்பார் அவர். இந்த ஐம்புலன் உணர்வாம் ஐயுணர்வை வென்று, உயிர் உணர்வாகிய மெய்யுணர்வால் இறைவனின் அருள் அமுதத்தைப் பருகி மகிழ்ந்தார் என்பதை மேற்கூரிய வரிகளைத் தொடர்ந்து,

................அமுதே
ஊறிநின்று என்னுள் எழு பரஞ்சோதி"

என்று கூறுவதால் அறியலாம். இறைவனின் பரஞ்சோதி வடிவம்- நாததத்துவத்தையும் கடந்து பரவெளியில் விளங்கும் வடிவம்- அவரது துரிய உணர்விற்குக் காட்சியாகி நின்றது என்றும் இதனால் அறியலாம்.

புலனுணர்வை வென்றது மட்டும் அன்று. புவியனைத் தையும் இறைவனிடம் வைத்து, எல்லாவற்றிலும் அவன் கலந்து நிற்பதைக் காணும் மெய்யுணர்வும் அவருக்கு உண்டாயிற்று. பெண்ணையும் ஆணையும் முறையே சத்தியும் சிவமுமாய்க் காணும் காட்சி வாய்த்தது. அதனால்தான் இறைவனுக்கு அபிடேகம் செய்வதற்குச் சுண்ணம் இடிக்கும் செயலில் ஈடுபட்ட பெண்களைச் சத்தியும், சோமியும், நாமகளும், பார்மகளும், சித்தியும், கௌரியும், பார்ப்பதியும், கங்கையுமாகப் பார்க்கின்றார்.[7] மகளிரின் விளையாட்டை வைத்து அவர் பாடியுள்ள பாடல்கள் அனைத்திலும் இத்தெய்வீக உணர்வே நிலவுகிறது.

சுண்ணம் இடித்தலாகிய சாதாரணச் செயலை இறைவழி பாட்டிற்காகச் செய்யும்பொழுது, அதுவே இறைபணியாக உணர்ந்து செய்ய இடமிருக்கின்றது. இப்பணியை ஓர் அடியவன் செய்வது போலன்றி, மணிவாசகர் தாம் காதலி ஆகி, காதலனாகிய சிவபிரானுக்கு அபிடேகம் செய்வதற்கு என்ற காதலுணர்வோடு செய்து மகிழ்ந்தார். சுண்ணத்தைத் 'திருப்பொற் சுண்ணம்' என வழங்குவதால் அது இறைபணி என்றும், மணிவாசகர் பெண்டிரை நோக்கி, 'காதலால் மகிழ்ந்து சிரித்தும் வாய் துடித்தும் பாடிச்சுண்ணம் இடிமின்'[8] என்றும் "நந்தம்மை ஆண்டவாறும் பணிகொண்ட வண்ணமும் பாடி இடிமின்" என்றும் கூறுவதால், காதல் உணர்வுடன் இறைபணி செய்தார் என்றும் அறியலாம். இறைவன் மற்ற அன்பரைப் போலத் தம்மையும் கூவிப் பணிகொள்ளுவானோ என்று ஏங்கிய அவர்,[9] இப்பொழுது அவன்பணி செய்யும் உரிமையை அவனருளால் பெற்றுத் தம் அன்பை அதன் வாயிலாகச் செயற்படுத்துகின்றார். அன்புக்கு உண்மையான வெளிப்பாடு செயலே அன்றோ? இறையன்பினை வழிபாடாகிய செயலில் வெளிப்படுத்தினால்தான் அவ்வன்பை அவன் ஏற்றுக்கொள்வான். மணிவாசகரின் பணியைச் சிவபெருமான் ஏற்றருளி, திருவருள் வழங்கலால் அதற்குப் பரிசளித்தான் என்பதை,

> "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை
> பேயேனது உள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை
> சீயேதும் இல்லாதுஎன் செய்பணிகள் கொண்டருளும்
> தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்ற பாடலில் புலப்படுத்துகின்றார்.

அவர் தாம் காதல் கொண்டதன் மேலும் ஒருபடி சென்று, தோழியரை நோக்கிப் "பொங்கிய காதலின் கொங்கை பொங்கப் பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே" எனக்கூறி அவர்களும் சிவபிரானிடம் காதல்கொண்டுள்ளனர் என்று புலப்படுத்துகின்றார். பிற அடியார்களின் நினைவு இதற்குக் காரணம் ஆகலாம். அல்லது தம்மைப்போல் பிறரும் இறையன்பு பெற வேண்டும் என்ற எண்ணம் காரணமாகலாம். மிகுதியான அன்பைத் தருமாறு இறைவனை மாணிக்கவாசகர் அழுது அழுது வேண்டியதற்கு ஏற்ப, அவன் ஒரிருமுறை அகக்காட்சி

வழங்கியதன் விளைவே அவரது இறைக்காதல். அந்தக்காதலையே நினைத்து ஆனந்தக் கண்ணீர் ஒருகாலும், பிரிவால் வந்த துயரக் கண்ணீர் ஒருகாலும் சிந்தினார்.

"சித்தம் சிவனொடும் ஆட ஆட, செங்கயற்கண் பனி
ஆட ஆட"10

அவனைக் காணாதபோதெல்லாம் தேடித்திரிந்தார். 'அவனைக் காணவில்லையே! அருள்புரிய மாட்டானோ? முன்பு கருணைசெய்தவன்—ஆட்கொண்டவன்-என் என்பெல்லாம் உருகக் கலந்தவன்-இப்போது அருளாமல் இருப்பது ஏன் என்று திகைத்தார். இத்திகைப்பு மலையாக வளர்ந்து பெருகியதைப் பற்றி அடுத்த சொற்பொழிவில் விளக்குவோம். இப்போது தோன்றியது ஆரம்பத்திகைப்பு. பின்னர் அவன் அருளால் திகைப்பு நீங்கவும், அவனது காட்சி வாய்க்கவும் பெற்று மகிழ்ந்தார். இதனை,

"தேடுமின் எம்பெருமானைத் தேடித்தேடிச்
சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின்"11

என்று அவர் பாடுவதால் அறியலாம். 'இறைவன் தம் சித்தம் புகுந்து தித்தித்தான்' என்று கூறுகின்றார்.12 முன்பு உயிர் உணர்விற்குப் புலனாகுமாறு அகக்காட்சி தந்த இறைவன், இப்பொழுது, அவர் சித்தத்திலும் புகுந்து இன்பம் அளித்தான். மெய்யுணர்வை விடாது பற்றி, வழிபாடும் இறைபணியும் செய்வதாலும், அடியாரோடு பழகி இறைவனின் புகழைப்பேசிப் பாடியாடுவதாலும், மனநினைவே சிந்தனையும், சொல்லும், பாட்டுமாய், அதில் உணர்ச்சி கலக்கப் பெற்று, இன்பம் விளைந்தமையால் இவ்வாறு கூறினார். இறைவன் ஒளிவடிவாய்க் காட்சி தந்தமையால் தம் உள்ளத்திலும் ஒளிதிகழ்ந்தது என்கின்றார். மனத்தின்—அறிவின்-விகசிப்பை இவ்வாறு கூறுகின்றார். ஒளி நிறைந்த சிந்தையால் நினையுந்தோறும், பேசுந்தோறும், இறைவன் தேனினும் பாலினும் இனித்த சுவையுடையவனாய்த் திகழ்ந்தான். "சிந்தனையை நின்றுருக்கும் சீரார் பெருந்துறையான்" சிந்தனைக்கு இனியவனாக இறைவன் இருப்பது எவ்வாறு

என்பதை விளக்குவாராய் அவர் கூறும் திருப்பொற் சுண்ணப் பாடல் ஒன்றிற்கு விளக்கம் காண்போம். இப்பாடலில் அவர் சோதிக்காட்சியின் போது பெற்ற மெய்யுணர்வும், அதன் பின்பு உணர்வு அனுபவத்தால் பெற்ற தெளிவும் நன்கு புலப்படுத்தப்படுகின்றன.

இறைக்காட்சி பெற்ருேர் எவற்றையும் ஒருமை உடையனவாகவே காண்பர். உலகநிலையில் நின்று சிந்திக்கும்போது முற்றும் வேறுபட்டவையாக உள்ளவை, இறைவனது அருளை அறிவாகக் கொண்டு-அருளறிவால் எண்ணும்போது—வேறுபாடு அற்று விளங்குகின்றன ஏன்? அவ்விரு வகையும் அடிப்படையில் அவன் அருளால் தோன்றி இயங்குபவை அல்லது இருப்பவையாகும்.

மெய்யும பொய்யும் வேருனவை என்கின்ருேம். மெய்ம்மையின் மறைவு அல்லது மறதியே பொய்யன்ருே? மெய் இல்லாமல் பொய் எவ்வாறு தோன்றும்? இல்லாத பொருளைப் பொய் என்று கூறுவதில்லை. உள்ள பொருளின் மறுதலைத் தோற்றம் அல்லது அதுதோன்ருமைதான் பொய் எனப்படும். இந்த மறுதலைத் தோற்றம் எண்ணமாகவோ, சொல்லாகவோ, செயலாகவோ இருக்கலாம். இவை உண்டாவதற்குக் காரணம் மயக்கவுணர்வு. எல்லா உணர்வையும் போல, அதையும் இயங்கச்செய்பவன் இறைவன். அவனே தன்னை மெய்யுணர்வினுல் கண்டு அனுபவிப்பவர்கட்கு மெய் ஆவான். அவ்வுணர்வு இல்லாதோர், புலன்களால் அவனை அறியமுடியாமை பற்றி அவனைப் பொய் என்று கூறுகின்றனர். மணிவாசகருக்குத், 'தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகிய' தொடக்க காலத்தில் 'ஆறுகோடி மாயா சத்திகள் வேறுவேறு தம் மாயைகள் தொடங்கின அல்லவோ?[12] அகக்காட்சியில் இறைவனைக் கண்ட பிறகும், அவர் "கண்டும் கண்டிலேன்" எனக்கூறுவது காண்க. உண்மை உணர்ந்தபோது, 'நின்னை ஐம்புலன்கள் காண்கிலா[13] என்று தெளிந்து, 'அவன அகக்காட்சிக்கு மட்டுமே புலப்படுவான்; அவனை மனத்தால் பற்றிச் சிந்தனையில் நிறுத்திஞல், உண்மையனுபவமாய்-உணர்ச்சி அனுபவமாய்த் தித்தித்து நிற்பான். நினைக்குந்தோறும் சித்தத்தில் தித்திப்பான்' என்று கூறுகின்ருர். 'ஹென்றி உட்' என்பவர்,

'உயிர் உணர்வு, படிப்படியாகத் தன்முன் இறைவன் தோன்றி, எதிர்நிற்பதை உணர்கிறது. அந்தத்தெய்வத் தோற்றம் வன்மையுடையதாய் விளங்கி, நம் துயரத்தை ஆற்றுகிறது. நம்மிடம் அன்பு செலுத்துகிறது. தந்தையே போலத் தலையளிக்கிறது. நாம் நம்மிடம் கொண்ட நெருக்கத்தை விடத் தெய்வம் நமக்கு மிக்க அருகில் இருக்கிறது''14.

என்று எழுதுவதை இங்கு ஒப்புநோக்கலாம். இங்ஙனம் அக அனுபவம் உடையவர்க்கு மெய்யாகவும், அஃதில்லாதவர்க்குப் பொய்யாகவும் இறைவன் இருப்பது பற்றி, 'மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்கு' என்றார்.

சோதி இறைவனின் வடிவம். உயிர் கண்டுகொள்ளும் வடிவம் இச்சோதி. அவனை அவ்விதம் காணாமை இருள். மெய்யுணர்வு பெற்றவரின் உயிர்உணர்வில் அவன் பேரொளியாக விளங்குகின்றான். அவனை இங்ஙனம் காண்பவரும் முழுமையாக அவனை அறிந்துகொண்டாரில்லை14. அவனிடம் அவர் அறியாத பகுதி எல்லாம் அவருக்கு இருளாகவே நிற்கின்றன. ஆதலின் 'சோதியுமாய் இருள் ஆயினார்க்கு'' என்றார்.

துன்பம் தரும் வினைப்பயனை நாம் அனுபவிக்குமாறு கூட்டுவிப்பவன் இறைவன். பிறவி துன்பம். அதனைத் தருபவன் இறைவன். வினையை முற்றாக நீக்கிப் பிறவியை ஒழிப்பவனும் அவனே ஆனந்தமே வடிவமாக நின்று அடியார்க்கு இன்பானுபவம் தருபவனும் அவனே. ஆதலின், ''துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்கு'' என்றார். மற்றும், 'நினைந்துருகும் அடியாரை நையவைத்தே' பிறகு இன்பம் தருகிறான் ஆதலின் இவ்வாறு கூறினார் எனலாம்.

'எல்லாம் சத்தி மயம்' என்பார் சாக்தேயர் என்ற சக்தி வழிபாட்டாளர். உண்மையில் சிவம் பொருள். அப்பொருளின் ஆற்றலே சக்தி. பொருள் இல்லாமல் ஆற்றல் இல்லை. சிவமாகிய பொருள் மறைந்து நிற்கிறது. எல்லாம் கடந்து, சத்தியால்கூட அறியமுடியாததாய் அப்பால் உள்ளது. அவன் தன் ஆற்றலாகிய அருட்சத்தியால் மாயையை இயக்கி இவ்வுலகங்களை-இவற்றை

அடக்கிய அண்டங்களை-படைத்திருக்கின்றான். இதை எண்ணாமல் இயற்கை எங்கும் சத்தியின் ஆற்றல் விளங்குவது மட்டும் கொண்டு, 'எல்லாம் சத்திமயம்' என்கின்றனர். அவளுள்ளும் அவனே இருக்கின்றான். ''உடையாள் நடுவுள் நீ இருத்தி'' என்பது காண்க.15 மெய்யுணர்வால் சத்தியையும் காண்பவர்க்குச் சிவத்தின் உண்மை-எல்லாமாகி நிற்கும் தன்மை- 'சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர முத்தியான முதலாய்' நிற்கும் தன்மை- விளங்கும். இதுபற்றிப் ''பாதியுமாய் முற்றும் ஆயினார்க்கு'' என்றார். பாதி என்பது சத்தி. முற்றும் என்பது சிவம்.

தனியிருளில், தன்னையும் அறியாமல் கிடந்த ஆன்மாவை, அதனுடனே தொடர்புற்று இருக்கும் ஆணவ மலத்திலிருந்து விடுவிக்கக் கருணைகொண்டு, அதற்கு உலக வாழ்வாகிய பந்தத்தைக் கொடுப்பவன் இறைவன். அவன் அங்ஙனம் ஏன் கொடுக்கின்றான் என்றால், ஆன்மா வினைப்பயன்களைத் துய்த்து, அறிவுபெற்று, மெய்யுணர்வு பெற முயல்வதற்கே ஆகும். வாழ்க்கை துன்பம் என்றால் அத்துன்பத்தை இறைவனே தந்துள்ளான். அது அவன் இன்பம் கொள்வதற்கு அன்று; நாம் அறிவு பெறுவதற்கு. நம்மைப் பற்றிக்கொண்டுள்ள ஆணவமலத்தினின்றும் விடுதலை பெறுவதற்கு. இனிமெய்யுணர்வு பெற்று, அன்பைப் பெருக்குபவருக்கு, இறைவனே வினைகளை முற்றும் அகற்றி, மாயையை விலக்கி, ஆணவ மலத்தையும் அறவே விலக்குகின்றான். ஆதலின், ''பந்தமுமாய் வீடும் ஆயினார்க்கு'' என்றார்.

படைத்தல், காத்தல், அழித்தல்களைச் செய்யும் மூவர்களுக்கும் உள்நின்று இத்தொழில்களைச் செய்விப்பதுடன், அவர்களையும் படைத்து அழிப்பவன் இறைவன் ஆதலால், 'ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு'' என்றார். இத்துணை வரிகளும் திருப்பொற்சுண்ணத்தின் இறுதிப்பாடலில் வருகின்றன.

இவ்வாறு அருளறிவால் சிந்திக்குந்தோறும், இறைவனைப் பற்றிய அக அனுபவ உண்மைகள், சிந்தனைக்கும் புலனாகி இன்பம் பயக்கும். இறைவனைப் பற்றிய உண்மை ஆராய்வதற்கு அரியதுதான். ஆயினும் அன்புகொண்டு, அகக்காட்சி கண்டு உணர்பவர் அருள் அறிவு பெறுகின்றார்—இறைவனின் அருள்

அவர்தம் உணர்வில் கலந்து நிற்கிறது-ஆதலின், ஓரளவு மெய்ப் பொருளை ஆராய அவரால் முடியும். அவரது சித்தத்தில் அவன் தெளிவாய்ப் புகுந்து தித்திப்பான் என்பார்,

"ஞானக் கரும்பின் தெளிவை; பாகை,
நாடற்கு அரிய நலத்தை, நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனை"16

என்றார்.

இறைவனை ஆய்ந்து சிந்தித்து இன்பம் நுகரும் 'அருளறிவை' மணிவாசகர் தும்பியாக உருவகித்து ஒரு கவிதை செய்துள்ளார். தும்பி வண்டு. அது மலர்களில் தேன் உள்ளமையை ஆராய்ந்து அதனைப்பருகும் வாழ்க்கையை உடையது. ஆதலின் இவ்வுருவகம் பொருத்தமே. அறிவாராய்ச்சியால் இறைவனை உணரப்புகுந்து தோல்வியுறாமல் 'அருளறிவால்' ஆய்வது தக்கது ஆதலின், இவ் வறிவை வண்டுகட்கு அரசனாகிய 'கோத்தும்பி' யாக உருவகித்தார். ஆக, திருக்கோத்தும்பி என்ற பகுதியில், அவரால் கோத் தும்பி என அழைக்கப்படுவது, அவரது சிந்தனையே ஆகும். அதனை அழைத்து, 'சிவபிரானது திருவடி மலர்களில் சென்று உண்மையை நாடி அங்கே காண்பாயாக என்பார், 'சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ' என மகுடம் அமைத்துப் பாடுகின்றார். இந்த மகுடம் சில பாடல்களில் வெளிப்படையாகவும் பிறவற்றில் குறிப் பாகவும் கூறப்படும். திருவாசகத்தின் மிகச்சிறந்த பாடல்கள் சில இப்பகுதியில் உள்ளன. மெய்யுணர்வும், அன்பும், இறையருள் பெற்ற ஆனந்தமும் ஒருங்கே விளங்கும் பகுதி இது.

இப்பகுதியின் பாடல் ஒன்று, அருளறிவை விளித்து தோன்றி மறையும் உலக இன்பம் என்ற தேனைத் தேடிப் பருகாமல், என்றும் இன்பம் தரும் இறைவனை நாடுமாறு வேண்டுகின்றார்.

"தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணுதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்
போதும்'
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ"17

இதில் 'நினைத்தொறும் ஆனந்தம் தரும் இறைவன்' என்பதையே திருப்பொற் சுண்ணத்தின் இறுதிப்பாடலைக் கொண்டு மேலே விளக்கினேம். இறைவன் மணிவாசகரது அளவு கடந்த அன்புக்கு வயமாகிக் காட்சி வழங்கினன். அப்போது பெற்ற உணர்வு அனுபவத்தைப் பின்பு நினைக்கும் போதெல்லாம், அக்காட்சியையே மீண்டும் பெற்ற போதெல்லாம், அதுபற்றிப் பேசும் போதெல்லாம், ஒவ்வொரு முறையும் புதியதாய்-நவமாய செஞ்சுடராய்-விளங்கித் தமது உயிரையும் ஒளியுடையதாக்கி விளங்கியது; அதனுல் விளைந்த ஆனந்த உணர்வோ கடல்போல் பெருகி, தம் எலும்பு ஒவ்வொன்றையும் உள்ளுருக்கி, அவை கசிந்து கரைந்துருகுவது போன்ற மெய்ப்பாட்டை உண்டாக்கிற்று என்று இப்பாடலில் கூறுகின்ருர்.

அந்த அனுபவத்தால் விளைந்தது ஒருவேதகம் (Bio Chemical Process) அவரது மனம், புலன்கள், உடல் ஆகிய மூன்றையும் மாற்றியது அந்த வேதகம். இறைவனது பேரொளியை அவனருளால் தமது மனமும் பற்றியபோது, இறைவன் தம் மனத்தில் வந்து அமர்ந்துகொண்டான் என்றும், அமர்ந்தவுடன் காமம் என்ற குற்றத்தின் வாசனையாக மனத்தில் மறைந்து கிடந்த பற்றெல்லாம் நீங்கின என்றும், மனத்தால் தூண்டப்பெற்றும் பெருமலும் புலன்கள் வெளிவிடயங்களில் சென்று பற்றுவது அடியோடு நின்றது என்றும், இறைவன் அந்தப் புலன்களுக்கும் விருந்தாகி நின்று, தம்முள் கலந்தான் என்றும் பாடுகிருர்.18

'இறைவன் தம்மை 'வருக' என்று பணித்தவாறு அருள் நெறியில் நடக்க இயலவில்லை. அதற்குத் தம் பற்றுக்கள் தடையாயுள்ளன' என்று மணிவாசகர் வருந்தி, மீண்டும் 'வருக' என்று கூறித் தம்மை அழைத்துக் கொள்ளுமாறு இறைவனை வேண்டியதைச் சென்ற சொற்பொழிவில் குறிப்பிட்டோம். இப்போது

அவனது கருணைக்கு இலக்காகி, அவனது பேரொளியைக் கண்டு ஆனந்தம் அடைந்து, "வா என்ற வான் கருணை என்னே" என வியந்து, 'கண்ணப்பரை வா என்று அழைத்த கருணை, தம்மையும் வாவென்று அழைத்து ஆனந்தம் தந்ததே' என்று, கண்ணப்பரது அன்பின் சிறப்பையும் தமது அன்பையும் ஒப்பு நோக்கி, 'அன்பின்மையில் எனக்கு இணையானே' என்று முடிவு செய்து, தனக்கும் கருணை காட்டிய இறைவனை,

> "வண்ணப் பணித்து என்னை வா என்ற வான்கருணைச்
> சுண்ணப் பொன்நீற்றற்கே சென்றூதாய் கோத்
> தும்பீ"19

என்று பாடுகின்றார்.

இனி அன்பின் முதிர்ச்சியாகிய காதல் உணர்வாகவும், மணிவாசகரின் பாவனையால், அவரது உணர்வு அனுபவம் அமைந்தது என்பதைக் காண்போம்.

அவர் சிவபெருமானைக் காதலனாகக்கொண்டு, தாம் காதலியாக இருந்து, அனுபவித்த உணர்வு நிலைகளைத் திருவெம்பாவையில் வெளியிடுகின்றார். மார்கழி மாதத்தில், நாடுசெழிக்க, நல்ல மழை பொழிய வேண்டும் என்றும், நல்லறமாகிய இல்லறம் நடத்துவதற்குத் தமக்குச் சிறந்த கணவன்மார் வாய்க்கவேண்டும் என்றும் விரும்பிக் கன்னிப்பெண்கள் பாவைநோன்பு மேற்கொள்வதை ஒட்டி, அவர்கள் பாடுவதுபோலப் பாமாலை பாடுவதற்கு, திருவண்ணாமலையில், மாணிவாசகருக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதை, தமது கடவுள்-காதல் அனுபவத்தை வெளியிடுவதற்குப் பயன்படுத்துகின்றார்.

கன்னிப்பெண்கள் அதிகாலைப்பொழுதில், பொய்கையில் நீராடப்போவதற்காகத் தம்முள் ஒவ்வொருத்தியையும் அவள் வீட்டினின்றும் அழைத்துச்செல்வர். தூங்கிக்கிடப்பவரை எழுப்புவர். இங்ஙனம், உறங்கும் கன்னியரை எழுப்புவோராகவும் உறங்கியெழுந்தோ, உறங்குவோர் போலவோ உள்ள பெண்களாகவும் திருவெம்பாவையில் பலரையும் படைக்கின்றார் மணிவாசகர். அவர்களின் இறையனுபவமாக அவர் பாடும் செய்திகள், உண்மையில் அவரது அனுபவம் பற்றியவையே என்று கூறலாம்.

காதல் வயமானவர்கள், அதனால் கட்டுண்டு, தம்மை மறந்து இருப்பார்கள். பெண்கள் இயல்பாகவே நாணம் உடையவர் ஆதலால், காதல் வசப்பட்டாலும் முதலில் நாணத்தின் எல்லையை மீறாமல் இருந்து, பின்பு காதல் கட்டு மீறினால், தம்மையே மறந்து பரவசமாவர்.

மணிவாசகநாயகி இவ்வாறு பரவசமாகிக் கிடந்ததைத் திருவெம்பாவையின் முதல்பாட்டு விளக்குகின்றது. இதில் இரண்டு பெண்களின் நிலைகள் ஒப்பிடப்படுகின்றன. ஒருத்தி, அப்பொழுது படுக்கையில் கிடந்தவள். ஒருத்தி முன்பே எழுந்து நீராடப் புறப்பட்ட பெண்களின் கூட்டத்தில் சேர்ந்துகொண்டவள்.

இந்தப்பெண்கள், இன்னும் படுக்கையில் கிடந்த பெண்ணின் வீட்டுவாயிலில் நின்று, சிவபிரானின் புகழைப் பாடுகின்றனர். திருவண்ணாமலையில், திருமாலும் பிரமதேவனும், ஆதியாகிய திருவடியையும், அந்தமாகிய திருமுடியையும் தேட அவர்களால் காணமுடியாதவனாகத் தனது இயல்பான நிலையில் -அதாவது சொரூப நிலையில்-சிவபெருமான் விளங்கிய புகழைப் பாடுகின்றனர். விண்ணும் மண்ணும் கடந்து விளங்கிய அந்தப் பேரொளிப் பிழம்பே பின்பு மலையாகிக் குளிர்ந்தது. அதுவே திருவண்ணாமலை. இறைவனே மலையாக விளங்குகின்றான் என்பது திருவண்ணாமலையின் சிறப்பாகும். பெண்களின் பாட்டொலி கேட்டும் உறங்குகின்ற பெண் கண்விழிக்கவில்லை. ஒளிவீசும் அவளுடைய அகன்ற கண்கள், இப்போது தூக்கத்தால் இருள் மண்டிக் கிடக்கின்றன. இதைச் சுட்டிக்காட்டி, அவளை எழுப்பும் பெண்கள்,

''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்
சோதியை யாம் பாட, கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்?''20

உனக்கு எப்படித் தூக்கம் வருகின்றது? நீ செவிடும் அல்லவே என்று கேட்கின்றனர்.

ஆம், அவள் செவிடு அல்லள். இறைவனிடம் அன்பில்லாதவளும் அல்லள். அவன் புகழைக் கேட்டவுடன் விழித்து எழுவதுதான் அவள் வழக்கம். ஆயினும் எழுவதற்கு மனமில்லாமல் பொய் உறக்கம்கொண்டு கிடந்தாள். தோழியர் அவளை எழச் செய்வதற்காக, மற்றொரு பெண்ணின் அன்பைப் பற்றிப் பேசத் தொடங்குகின்றனர்.

வீதி முனையிலே அப்பெண்கள் சிவபெருமானின் அருள் திருமேனியாகிய மகாதேவ வடிவத்தை வாழ்த்திப் பாடிய ஒலியைக் கேட்டவுடனே அவள் விழித்துக்கொண்டாள். விம்மிவிம்மி அழுதாள். மகாதேவனின் புகழைக் கேட்டதால் மெய்யுணர்வு வரப்பெற்று, அவனை அகக்கண்ணால் கண்டு, மகிழ்ச்சியால் மீண்டும் விம்மினாள். மெய்மறந்தாள்.

> "மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
> வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து"21

அவள் தன்னை மறந்தாள்; தன் பெயர் மறந்தாள். பாசஞானமும் பசுஞானமும் அவளிடம் விடைபெற்றுப் போயின. பதிஞானம் பெற்றாள். எங்கும், எதிலும். தன் காதலனும் சிவபிரானின் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியே' நிறைந்திருப்பதைக்கண்டாள். அதில் ஈடுபட்டு உறவை, உணவை, சுற்றுப்புறத்தை, உலக நினைவை மறந்தாள். மலர்போன்ற படுக்கை, தூங்குவதற்கு வசதியாக இருந்தும், அதில் தூங்கிக் கிடக்காமல், அதிலிருந்து புரண்டு, மெய்ம்மறந்து தனியே கிடந்தாள். கிடப்பது தரை என்ற உணர்வும் இல்லை அவளுக்கு.

> "போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு"

மகளிர் வீட்டு வாயிலில் நின்று பாடுவதைக் கேட்டும், விழித்துக்கொண்டே, பொய்யாய்த் தூங்குபவள்போலக் கிடப்பவளுக்கும். இவளுக்கும் எத்தனை வேறுபாடு! இவள் கேட்டது மகாதேவனாகிய தடத்த வடிவத்தின் புகழ். தடத்தம என்பது நாம் எல்லாம் நன்றாகப் பார்த்து அறியும்படி திருவுருவம் கொண்டு, சிவபெருமான் வரும் நிலையாகும். அந்த அழகிய

வடிவத்தைப் பாடக்கேட்டுச் சிவபிரானின் இயல்பான, சொரூபத்தை நினைத்துக்கொண்டு காதலால் கசிந்துருகத் தொடங்கி விட்டாள். பின் மெய்மறந்தாள்.

இப்படி, எல்லாம் மறந்திருந்தவளை என்னவென்று குறிப்பிடுவது?

''ஏதேனும் ஆகாள் கிடந்தாள்''

என்கின்றார் மணிவாசகர். அவள் இறந்தவள் போலே கிடந்தாள்; ஆனால் காதல் உலகில் வாழ்ந்தாள். உலகியலில் அவள் எதிலும் சேர்த்தி அல்லள். காதலால் கனிந்துருகி. இறைவனது அருள்வெள்ளத்தில் அழுந்திக் கிடந்தாள்.

''கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சுஏற்றி
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை
வெள்ளத்து அழுத்தி''22

என்று தமது அனுபவத்தை நேர்முகமாகவே மணிவாசகர் குறிப்பிடுவார். ஆதலால் இங்கு, 'ஏதேனும் ஆகாள், கிடந்தாள்' என்று கூறப்படும் பெண், உண்மையில் மணிவாசகநாயகியே ஆவார்.

இப்பாடலில் குறிப்பாக உள்ள இருள் புலரும் நேரம் என்பது ஒருகுறியீடு. அது ஆணவமலம், அகலும் பக்குவத்தைக் குறிக்கிறது. படுக்கை என்பது உலகியல். இதனால் மணிவாசகர் தமது அன்புப்பெருக்கத்தால், முன்பு ஒரோருகால் சார்ந்த உலகியல் வாசனையிலிருந்து நீங்கி, அருளியலையே சார்பாகப் பற்றிக் கொண்டார்; அவர் மனம் மீண்டும் இறைவன் விஷயத்தில் கனியாய்க் கசிந்துருகி நின்றது என்பதை அறியலாம்.

மணிவாசகநாயகி சிவபிரானுடைய அழகிய திருமேனியைக் கண்டு காதல் கொண்டார்: அவன் அவரை ஆட்கொண்டு, இன்பம் அளித்து, மறைந்தான். பிரிவுத்துயரால் பெரிதும் வருந்தினார் நாயகி. காதலனைக் காணத் துடித்தார். வருவான். வருவான்

என்று காத்திருந்த நாளெல்லாம் கனலாய்ச் சுட்டன. பொறுமை, இழந்து, அவனைத்தேடிச் செல்ல முற்பட்டார்.

அவன் ஊர் எது? பேர் என்ன? அவனுடைய சுற்றத்தார் யாவர்? என்றெல்லாம் விசாரிக்கத் தொடங்கினர்.

அவள் காதலைப்பற்றிக் கேட்டவர்கள் கைகொட்டிச் சிரித்தனர். சிவபிரான் உருவம இல்லாதவன் ஆயிற்றே. அவனுக்கா காதல்கொண்டாய் என்று நகையாடினர். இறைவனைப் பற்றித் தாங்கள் அறிந்ததை எல்லாம் கூறத் தொடங்கினர்.

'அவன் மண்ணும், விண்ணும், எல்லாம் அண்டங்களும் கடந்த வடிவத்தை உடையவன். அவனது திருவடியை வேதங்கள் சொல்லால் விளக்க முற்பட்டு, சொல்ல முடியாமல், 'ஐயா' என அலறிக் கையுதறி நின்றன.

''வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே''23

விண்ணோர்கள் அவனைத்தேடிக் காண முனைந்து, அவன் திருவடி, ஏழு பாதாள உலகங்களையும் கடந்து, கீழேகீழே போய்க் கொண்டிருந்த காரணத்தால், அதைக் காணமுடியாமலும், அவனது திருமுடி, மேல் அண்டங்களுக்கு எல்லாம் உயர்ந்து. கடைசியாக உள்ள உலகில், மிக்க உயரமாக உள்ள பொருளையும் விட உயர்ந்து சென்றமையால், அதைக்காண முடியாமலும் தவித்தனர்.

மண்ணுலகில் உள்ளோர், அவனைச் சத்தியும் சிவமுமான வடிவத்தில்–பெண்பாதி, ஆண் பாதியான வடிவத்தில்–கண்டு, ஆணு, பெண்ணு என்று அறியமாட்டாமல் திகைத்தனர். அவனது கடந்த வடிவம் இதுமட்டும் அன்று; இன்னும் பல.34

இப்படித் தனக்கென வடிவமில்லாதவனையா நீ காதலிக்கிறாய்?

"பாதாளம் ஏழினும் கீழ், சொற்கழிவு, பாதமலர்,
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே,
பேதை ஒருபால், திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணேரும் மண்ணும் துதித்தாலும்"25,

என்று மணிவாசக நாயகியை மற்றவர்கள் கேலிசெய்தனர்.

வேதம் துதித்தால், அவன் புகழ் சொற்கழிவு; அதாவது, சொல்லைக் கடந்தது என்றும், விண்ணேர் துதித்தால், அவன் திருவடி பாதாளம் ஏழினும் கீழ்; போதார் புனைமுடி எல்லாப் பொருள் முடிவே என்றும், மண்ணேர் துதித்தால் 'பேதை ஒரு பால், திருமேனி ஒன்றல்லன்' என்றும் கொண்டுகூட்டி இப் பொருளைக் காணலாம். சொற்கழிவு பாதமலர் என்பது, வேதங் களில் உள்ள மந்திரங்களின் பொருளைக் கடந்த திருவடியை உடையவன் என்றும், எல்லாப்பொருள் என்பது வேதங்களால் உரைக்கப்படும் பொருள் என்றும், அப்பொருள் முடிவு என்பது உபநிடதங்களும் ஆகமங்களும் என்றும், அவற்றையும் கடந் தவன் இறைவன் என்றும் மற்ருெரு பொருள் கொள்ளலாம்,

மணிவாசகநாயகி இந்தக் கேலியைக்கேட்டு அயர்ந்து-போய்விடவில்லை. இவர்கள் சொல்வதுபோல், சிவபிரான் இத் தன்மைகளை மட்டும் உடையவன் என்ருல், அவன் தொண்டர் உள்ளத்தில் நீங்காமல் நிற்பது எப்படி முடியும்? காதலியாகிய தமக்கு அன்புகாட்டி, கருணைசெய்து, இன்பம் தந்தானே! அது எவ்வாறு இயலும்? தொண்டருக்கு அவன் அளித்த அருளும் காதலியாகிய தமக்கு அவன் தந்த இன்பமும், சொல்லால் சொல்ல முடியாதனவல்லவோ? 'வேதங்கள் சொல்லிக்காட்ட முடியா தவன், என்று மற்றவர்கள் சொல்கிருர்கள். ஆனல் அவன்எங்களை நெருங்கி, அரவணைத்து, இன்சொல் பேசி ,தந்த அருளும், இன் பமும் சொல்லிக்காட்ட முடியாதவை என்று நான் எண்ணு கிறேன்.

"ஓத உலவா ஒரு தோழன், தொண்டர் உளன்"

எனவே அவனுக்கு வடிவம் உண்டு. "இது அவன் திருவுரு; இவன் அவன்" என யாம் நன்கு பார்க்கும்படி எங்களை ஆண்டு கொண்டு இங்கு எழுந்தருளினன். இப்போது பிரிந்துவிட்டான்.

அவனுக்கு வடிவம் மட்டுமன்றிப் பேரும் உண்டு. ஊரும் உண்டு. உற்ருர் உறவினரும் உண்டு.26 அவன் அருளைப் பெருத அயலாரும் உண்டு. இச்செய்திகளைச் சொல்லக் கூடியவர்கள் தொண்டர் களே. படித்தவர்களால் சொல்லமுயாது. ஏகனுகி இறைபணி நிற்கும் தொண்டர்களால் தான் சொல்லமுடியும்' என்று எண்ணிய மணிவாசகநாயகி அத்தொண்டரை விசாரிக்க எண்ணிய தமது கருத்தைப் பாவை நோன்பிருக்கும் பெண் ஒருத்தியின் மமல் ஏற்றி, அவள் பிற கன்னியருடன் கோவிலுக்குச் சென்றிருக்கும் போது, அங்குள்ள பெண் தொண்டர்களை, இவற்றைக் குறித்து விசாரிப்பதாகப் பாடுகின்ருர்.

"கோயில் பிணைப் பிள்ளைகாள்,
ஏது அவன் ஊர், ஏது அவன் பேர்
ஆர் உற்ருர் ? ஆர் அயலார் ?
ஏது அவனைப் பாடும் பரிசு ஏலோ ரெம்பாவாய்"

கன்னியர், பெண்களுடன் தான் உரிமையுடன் பேசமுடியும். ஆதலால் அவர்களைக் கேட்கின்ருள்.

'நீங்கள் இறைவனிடம் ஒன்றிக்கலந்த உள்ளத்துடன் கோயிற்பணி செய்து வருகிறீர்கள். ஆதலால் அவனைப்பற்றி நன்கு அறிந்திருப்பீர்கள். அன்புகூர்ந்து இவற்றை எனக்குச் சொல் லுங்கள். அவனைப் பார்க்கும்வரை, அவனைப் பாடும் முறை என்ன என்றும் கூறினுல், ஆறுதல் கொள்வேன். உங்களுக்கு நன்றி சொல்வேன்' என்று கூறுகின்ருள்.

இங்குக் கோயில் பணிப்பெண்கள் குறியீடாக நின்று அருள் பெற்ற அடியவர்களை உணர்த்தினர். மணிவாசகர் இறைவனைப் பிரிந்த பிரிவினுல் வருந்தினுலும், அன்பால் அவனைப்பாடுவதில் ஆறுதல் கொள்கின்ருர் என்பது இதனுல் அறியப்படுகிறது,

சிவானந்தத்தை அனுபவிக்கும் உணர்வு நிலைக்குத் துரியா தீதம் என்று பெயர். அடிக்கடி இந்த ஆனந்தத்தில் மூழ்கும் அன்பர்கள், சிலநேரம் உலக உணர்வு பெறுவர். அப்போது கூட, மலரில் இழையும் மணம்போல், இறைவன் நினைவு, இவர்களிடம் இருக்கும்.

இறைவனிடம் காதல் கொண்டவர்க்கு இந்த நிலை உண்டு. மணிவாசக நாயகி இதை அனுபவித்தார். அதைப் பாவைப் பெண் ஒருத்தியின் அனுபவமாக வைத்துப் பாடுகின்றார். அப் பெண்ணின் உணர்வையும், அவளிடம் தோன்றிய மெய்ப்பாடு களையும், அவள் நடந்துகொள்ளும் முறையையும் ஒரு தோழி, மற்ற பெண்களிடம் சொல்வதுபோலப் பாடுகின்றார்.

“தோழிகளே! இவள் எப்போதோ சிலநேரம், ‘எப்பெரு மான்’ எமபெருமான்’ என்று பன்னிக் பன்னிக் கூறுகிறாள். பேசா மலே இருந்தவள், மனமெல்லாம் மகிழ்ச்சியாக, முகமெய்யாம் மலர, இறைவனின் புகழை வாய் ஓயாமல் பேசுகிறாள்.

> “ஓர் ஒருகால் எம்பெருமான் என்று என்றே
> நம்பெருமான்
> சீர் ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர”27

ஓர் ஒருமுறை இப்படி என்றால், பெரும்பாலான நேரம் இறைவன் காதலில் ஆழ்ந்துபோய், தன் வசமில்லாமல் இருந் தாள் என்று தெரிகிறதல்லவா?

இந்தப் பெண்கள் எல்லாமே இறைக்காதல் கொண்ட வர்தாம். ஆனால் தோழி குறிப்பிடும் பெண்ணின் காதல் மிக வும் முற்றிவிட்டது. அதனால்தான் தோழி, ‘இறைவன் நமக் கெல்லாம் பெருமானாக இருக்கவும், இவள், ‘எம்பெருமான்’ என்று உரிமை பாராட்டிக் கொள்வதைப் பார்த்தீர்களா?’ என்று கூறி வியப்படைகிறாள்.

> “எம்பெருமான் என்றென்றே நம் பெருமான்சீர்
> ஒருகால் வாயோவாள்”

ஓயாமல் பேசும் அளவு, காதலனின் குணம், அவன் காட்டிய காதல், அவன் தந்த கருணை ஆகியவற்றை அவ்வளவு நேரம், மனத்தால் அனுபவித்துக்கொண்டே இருந்திருக்கிறாள். அதனால்தான் அதைப்பேசும் உணர்வு வந்தபோது அவள் சித்த மெல்லாம் களித்தது.

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு"

என்று திருவள்ளுவர் கூறுவதுபோல, அன்பும் அறிவும் சான்றாண்மையும் உடையவர்களோடு கொள்ளும் நட்பு, வளர்ந்துகொண்டே செல்வதற்குக் காரணம், அவர்களுடைய பண்பை அறிந்துகொள்ளும் அறிவு; அதுபோல, எல்லையில்லாப் பேரறிவும், பெருங் கருணையும், பேரருளும் உடைய இறைவனிடம் காதல்கொண்ட இவள், அவன் வழங்கும் சிவானந்தத்தை அனுபவிக்க, அநுபவிக்க, மெய்யுணர்வு வளரப்பெற்று, அதனால் அவன் புகழை அறிந்து, அதை வாய்ஓயாமல் பேசுவாள். அதனால் இவள் காதலும் வளர்கிறது. இது இறையருளால், பதிஞானமும் பத்தியும் ஒன்றால் ஒன்று வளரும் நிலை.

இவள் இப்படிப் பேசும் பேச்சு முடியும் முன்னே, தாரை தாரையாகக் கண்ணீர் வடிக்கிறாள். இறைவன் புகழை நினைத்து, உள்ளம் கனிந்து, கசிந்து நெக்குருகி நிற்கிறாள்.

"நீர் ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்ப"

தேவர்களாலும் காணமுடியாத பெருமான் என் காதலை ஏற்றுக்கொண்டானே என்ற நன்றியுணர்வின் மெய்ப்பாடு இந்தக் கண்ணீர். முதலில் சொற்களால் அஞ்சலி செய்தாள். இப்போது கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றாள். சொல்லும் உணர்வும் ஒத்திருக்கும் நிலை இது. இறைவனிடம் பெறுகின்ற அனுபவத்தைச் சொற்களால் சொல்லிவிட முடியாது. இவளோ ஓயாமல் சொல்லிப் பார்த்தாள். சொல்லமுடியாமல் மீதமாய் நின்றதைக் கண்ணீர் சொல்லிவிடுகிறது.

பிறகு, இருந்த இடத்திலேயே, வேரற்ற மரம்போல விழுந்து வணங்குகின்றாள்.

"பார் ஒருகால் வந்தனையாள்"

வணங்கும் கடமைக்குத் தரையில் உடலைக் கிடத்துவதன்று இது. இறைவனிடம் தன்னை முழுவதுமாக அர்ப்பணம்

செய்துவிடும் உணர்வின் மெய்ப்பாடு. இப்படித் தன்னையே கொடுத்து விடுபவள் என்ன வரம் கேட்பாள்? அவளுக்கு ஒன்றுமே வேண்டா. ஆதலால் வரம் வழங்கும் தேவர்களை அவள் வணங்குவதில்லை.

"விண்ணோரைத் தான் பணியாள்"
தோழி தொடர்ந்து பேசுகிறாள்:

'இறைவனிடம் காதல் கொண்டவர்களை நமக்குத் தெரியும். ஏன்? நாமும் அவனிடம் காதல் கொண்டிருக்கிறோம். ஆனால், இவளைப்போல, இறைப்பித்தாகிக் கிடப்பவர்களைப் பார்த்த தில்லை. இது என்ன வியப்பு!'

'இந்த நிலைக்கு வரும்படி, சிவபிரானைத் தவிர, வேறு, யார் ஆட்கொள்ள முடியும்?'

"பேரரையற்கு இங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்?"

எல்லா உலகத்திற்கும், எல்லாக் கடவுளர்க்கும் தலைவனாக உள்ள இறைவன், தன்னுடைய தலைமையையும் மனிதரின் சிறுமையையும் பாராட்டாமல் ஆட்கொள்வதற்கும் வித்தகம் வேண்டும். இது எளிமையாக வந்தருளும் வித்தகம். இனி, உலகியலை அறவே மறந்து, தானாகப் பேசி, சிரித்து, கண்ணீர் வடித்து, விழுந்து வணங்கிக் கிடக்கும்படி, இறைபித்தாக அடிப்பதற்கும் வித்தகம் வேண்டும். இது காதல் வித்தகம்.

'அந்த வித்தகம் உடையவனை நாமும் வணங்குவோம். நமக்கும் அந்த ஆனந்தத்தை அவன் வழங்க வேண்டுவோம்.'

"வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோ ரெம்பாவாய்' "

இப்பாடலில் மார்கழி நோன்பின் முக்கிய செயலாகிய நீராடல், இறைவனின் அருளில் தோய்வதைக் குறிக்கும் குறியீடாகும். ஆனால் காதல் என்றும், கூடல் என்றும் இப்பாடல்களில்

வரும் செய்திகள் குறியீடுகள் அல்ல. இறைவனிடம் அன்பு கொள்ளும், போது தம்மை நாயகியாகவே பாவித்துக்கொள்ளு தல், அந்த நிலையில் அவனுடன் உறவுகொள்ளுதல் ஆகியவை உணர்வுப்போக்கில் ஒரு சிறப்புத்தன்மையைக் குறிக்கின்றன. இதுபோலவே மகனாக, தொண்டனாக, இறைவனுடன் உறவு கொள்வதும் உணர்வுப்போக்கின் ஒவ்வொரு சிறப்புத்தன்மை யைக் குறிக்கும்.

இறைவன் உணர்த்திய மெய்யுணர்வையும், அவனது அகக்காட்சியால் பெற்ற இன்பானுபவத்தையும் மனம் பற்றி, மறந்துவிடாமல், இடையறாது நினைத்தும் சிந்தித்தும், ஒரு தெளிவினை அடையும் குறிக்கோளுடன், அன்பைப்பெருக்கி, அவனையே நாடி, பிறவற்றை மறந்து நிற்கும் இறையன்பிற்கும் காதலுக்கும் வேறுபாடு இல்லை. தம்மை நாயகியாகப் பாவித்து அதுவே ஆகிவிடுகின்றனர் இறையடியார்கள். இறைவன் குதிரைவாணிகர் தலைவனாகக் குதிரைகளைப் பாண்டியனுக்கு அளிப்பதற்குத் தானும் ஒரு குதிரையின் மேல் ஏறிவந்த காட்சி, தமது உள்ளம் கவர்ந்ததைக் கண்டபோதே, அன்பின் மிகுதியால் தம்மை நாயகியாகப் பாவிக்கும் உணர்வு நிலை மணிவாசகரிடம் முகிழ்த்தது.

"பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரிமேல் கொண்டு என்
உள்ளம் கவர்வரால் அன்னே என்னும்"28

என்ற செவிலித்தாய் கூற்றில் குறிக்கப்படும் தலைவியின் செயல் மணிவாசகரின் செயலே.

"பத்தும் பரியப்பரிமேற் கொண்டான் தந்த
அந்தமிலா ஆனந்தம் பாடுதும்காண் அம்மானாய்"29

என்று இந்நிகழ்ச்சியைப் பெண்ணொருத்தியின் கூற்றாகவே மற்றோரிடத்திலும் கூறுகின்றார்.

''குதிரையைக் கொண்டு குடநாடதன் மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தான் எழுந்தருளியும்
....
நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்
ஆண்டு கொண்டருள அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமாவிற்று''30

என்ற வரிகளில் தம் வாழ்க்கை நிகழ்ச்சியாகவே இதனைக் குறிக்கின்றார். இது முன்பு திருப்பெருந்துறையில் நிகழ்ந்தது போல், அகமுகக் காட்சி அன்று. 'பாண்டியன் தனக்குப் பரிமா விற்று' என்றே கூறப்படுவதால், வெளியில் யாவரும் காண நடந்த நிகழ்ச்சியேயாகும். இங்ஙனம் குதிரை விற்றமையே பின்னர் நடந்த நிகழ்ச்சிகளுக்குக் காரணமாய் அமைய, அதன் விளைவாய், மணிவாசகர் உலகறிய அரசியற் பொறுப்பைத் துறந்து, முழு அடியார் ஆனார். ஆதலின், 'பந்தம் பரியப்பரிமேற் கொண்டான்' என்றார். இதனையே, மக்களுக்கும் பொதுவில் உரியதாக்கி,

''குதிரையின் மேல்வந்து கூடிடுமேல் குடிகேடு
கண்டீர்''31

என்றும் கூறுவார். குடிகெடுதல்—உலகியலைத் துறத்தலால் நிகழ்வது என்பர் திரு. அருணைவடிவேல் முதலியார். மணிவாசகர் உலகபந்தத்தைத் துறப்பதற்குத் தொடக்கமான—குதிரை மேல் வருதலாகிய-இக்காட்சியே, அவர் இறைவன் மீது காதல்கொள் வதற்குரிய தொடக்க நிகழ்ச்சியாக அமைந்தது என்பதை மேற் காட்டிய

''பாய்பரி மேல்கொண்டு என்
உள்ளம் கவர்வரால் அன்னே என்னும்''

என்ற அடிகள் உணர்த்துகின்றன. கன்னி ஒருத்தி காதல் கொள்ளுதல், அவள் தன் அன்னையையும் பிரிந்து, சமுதாயத்தாரின் கட்டுப்பாட்டு ஒழுக்கத்தை மீறிச் செல்வதற்கு வித்தாதல் போல, இறைவன் குதிரையின்மீது வந்து நிகழ்த்திய அருட்செயல்

அல்லது திருவிளையாடல், மணிவாசகரின் பிறவிப்பந்தம் அகலுதற்கு ஏதுவாயிற்று. மெய்யுணர்வு அனுபவமாக மட்டும் அல்லாமல் மனம் ஈடுபட்டு, உணர்ச்சி பெருகி உருகி, நிற்கும் அனுபவமாகவும் மணிவாசகருக்கு இறையனுபவம் வாய்ந்தது என்பதே அவர்தம் அகப்பொருள் பாடல்களால நாம் அறியவேண்டுவது. இதனை

"ஊன்பழித்து உள்ளம் புகுந்து என்
உணர்வதுவாய ஒருத்தன்"32

என்றும் குயிற்பத்தில் கூறுகின்றார். இறைக்காதலால் கட்டுண்டு, 'அவன் சூடிய ஊமத்தமாலை தமக்குப் பித்தமே பிடிக்கச்செய்தது, என்பார் மற்றொரு பாடலில்.33

இங்ஙனம் இறைக்காதலில் ஈடுபட்டு அவன் நினைவாகவே நின்றமை அவரது உலக பந்தம் நீக்குவதற்குக் காரணமாயிற்று. இறைவனது அருள் ஏண்ணத்தால் அவன் படைத்த உலகம், பந்தமாக மாறித் துன்புறுத்தியது, தமது சிந்த விகாரக் கலக்கத்தால் என்று கூறுவார் அவர். விகாரம் வேறுபடுதல். அவர் அளவில், திருப்பெருந்துறையில் கண்ட அக்காட்சியில் மனம் பற்றிச் சிந்திக்க வேண்டிய சிந்தனை சலனம் அடைந்து, அதை விட்டு விலகி, முன் அனுபவித்த உலகியலையே மீண்டும் எண்ணியதால், அதனைச் சித்த விகாரம் என்றார். உலகியலோ, சேர்த்த நிதி, மணந்த மனைவி, பெற்ற மக்கள், பிறந்த குலம், முயன்று அடைந்த கல்வி-இவை அனைத்தாலும் அல்லது இவற்றுள் ஒன்றுபோக ஒன்றாலும் உழலும் பித்திற்கு இடமாவது. அதனால் பிறப்பு இறப்புக்களை மாறிமாறி அடைந்து துன்புறுவதைத் தவிர வேறு வழி இல்லை.34 மணிவாசகரின் உள்ளத்தில் இறைப்பித்துக் கர்தலாக முறுகி எழுந்ததும், அந்தச் சித்தவிகாரக் கலக்கம் நீங்கியது. இதனைத் திருப்பெருந்துறை நிகழ்ச்சியில் இருந்து தம் உள்ளத்தில் இறைவன் ஏற்படுத்திய மாற்றங்களை எல்லாம் தொகுத்துக்கூறும் ஒரு பாட்டிலும் அமைத்துக் கூறுகின்றார்.

''நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்
பெற்றேன்
தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுஉள்ளம் புகுந்து அடியேற்கு
அருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்து அன்றே
வெறுத்திடவே''35

இங்குச் ''சிவாயநம எனப்பெற்றேன்'' என்பது ஒரு குறியீடு. இதனால் குறிப்பிடுவது, இறைவனுடைய அருவக்காட்சி (சூக்குமக்காட்சி) ஒன்றைக்கண்டு தேனை, ஆன்நெய்யை, கரும்பின் தேறலை அனுபவிப்பது போல் அனுபவித்ததை ஆகும்.

'இறைவன் தமக்குக் காட்சி கொடுத்தும் மறைந்தும், தமது இறைவேட்கையையும் அன்பையும் வளர்த்துப் பின்னர் தம் எலும்புகள் எல்லாம் உருகும் வண்ணம் திருவடிகளைக் காட்டித் தம்மைக் கலந்து, கரும்புச்சுவை போன்ற, ஆனந்தத்தை அளித்தான்; அவனது அருள் நரிகளை எல்லாம் குதிரைகள் ஆக்கிற்று என்று ஒருபாடலில் கூறுவார்.35 இதனை முன்பு எடுத்துக்கூறியவாறு, இறைவன் குதிரைமீது வந்த திருவிளையாடலை மணிவாசகரின் பந்தத்தை அறுத்தது என்ற செய்தியோடு தொடர்புபடுத்தி விளக்கலாம். அல்லது இரும்புபோன்ற, கல்போன்ற மனம் உடைய தம்மை மாற்றி உயிர் உணர்வால் கனிந்து கனிந்து கனிபோன்ற மனம் உடையவராகச் செய்தமையை ஓர் உருவகத்தால் கூறுவாராய், 'நரிகள் எல்லாம் பெருங்குதிரை ஆக்கியவாறு என்னே' என்று வியந்ததாகவுங் கொள்ளலாம். ஒரு கல் கனியாக மாறிய விந்தை இது.

குறிப்புக்கள்

1. போற்றித்திருவகவல் : வரி 86-87.
2. Varieties of Religious Experience, P. 8.
3. போற்றித்திருவகவல் : 59-62.
4. மேலது., 68-73.
5. திருச்சதகம் : 27.
6. கோயில் திருப்பதிகம் : 1.
7. திருப்பொற் சுண்ணம் : 1.
8. மேலது., 11.
9. திருச்சதகம் : 46.
10. திருப்பொற் சுண்ணம் : 10.
11. மேலது., 11.
12. போற்றித்திருவகவல் : 44-45.
13. திருச்சதகம் : 76.
14. "உணர்ந்த மாமுனிவர் உம்பரோடு ஒழிந்தார் உணர்வுக்கும் தெரிவரும் பொருளே" -கோயில் திருப்பதிகம் : 4.
15. கோயில் மூத்த திருப்பதிகம் : 1.
16. திருப்பொற் சுண்ணம் : 15.
17. திருக்கோத்தும்பீ : 3.
18. திருத்தோணோக்கம் : 14.
19. மேலது, 4. கண்ணப்பர் ஆறுநாள் அன்பு வழிபாடு செய்த அளவில், அன்பில் முதிர்ந்து, இறைவனது கண்ணில் வழிந்த குருதியை நிறுத்தத் தம் கண்ணைத் தோண்டி அப்பினர். மறுகண்ணையும் தோண்ட ஆயத்தமானர்.
20. திருவெம்பாவை . 1.
21. மேலது.
22. திருவம்மானை : 5.
23. சிவபுராணம்: வரி 34-35.
24. "ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகில் அளவில்லை" என்பார் திருஞானசம்பந்தர். -தேவாரம் : பொது : திருப்பாசுரம் : 4.

25. திருவெம்பாவை : 10.
26. கீர்த்தித்திருவகவல் : 117-122; 130-132.
27. திருவெம்பாவை : 15.
28. அன்னைப்பத்து ; 7.
29. திருவம்மானை : 3.
30. கீர்த்தித்திருவகவல் : 27-28; 36-39.
31. திருப்பாண்டிப்பதிகம் : 2.
32. குயிற்பத்து : 4.
33. அன்னைப்பத்து : 10.
34. திருக்கோத்தும்பீ : 6.
35. திருவேசறவு : 10.
36. மேலது., 1.

3. "திகைத்தால் தேற்ற வேண்டாவோ"

"உணர்ந்தார்க்கு உணர்வரியான்" என்பது திருக்கோவை யாரில் மணிவாசகர் கூறும் ஓர் அருமையான தொடர். திருவா சகத்திலும் அவர் இறைவனைச் "சோதியுமாய் இருள் ஆயினார்க்கு, என்று குறிப்பிடுவார். இவற்றினுடைய கருத்தாவது, அவனது அருளால் அவனுக்கு அன்பராய், அகக்காட்சியில் அவனைக்கண்டு மெய்யுணர்வு பெறுவார்க்கும் அவனது முழுஇயல்பும் (சொரூப வடிவம்) புலப்படாது எஞ்சி நிற்கும் என்பதாகும். இதனைத் திருவாசகத்தில் பிறிதோரிடத்தில் "உணர்ந்த மாமுனிவர், உம்பரோடு, ஒழிந்தார் உணர்வுக்கும் தெரிவரும் பொருளே" என மணிவாசகர் கூறுவார். இவ்வாறு இறைவன் அறிதோறும் அறியாமையை எடுத்துக்காட்டுபவனாக, ஆன்மீக நெறி அனுபவத்தில் மேலும் மேலும் உணர வேண்டியவனாக, எல்லையற்று நிற்கின்றான். ஆகவே அதனை அறியும் ஆன்மீகப் பாதை முடிவடைவதே இல்லை. ஞானிகள் அவனை அறிய முயன்று, பெறும் அனுபவம் படிப்படியாக நுண்ணியதான நெறியில் செல்லும். ஆதலின் அவ்வழியில் இடர்ப்பாடுகள் மிகுதி. அவற்றைக்கண்டு அவர்கள் திகைப்பர் இதனை வள்ளலார்,

"தனக்கு நிகரிங் கில்லா துயர்ந்த தம்ப மொன்றதே
தாவிப் போகப் போக நூலின் றரத்தி னின்றதே
கனக்கத் திகைப்புற் றங்கே நானும் கலங்கி வருந்தவே
கலக்க நீக்கித் தூக்கி வைத்தாய் நிலைபொ ருந்தவே"

"இங்கோர் மலையி னடுவி லுயர்ந்த தம்பம் நணுகவே
ஏறிப் போகப் போக நூலி னிழைபோல் நுணுகவே
அங்கே திகைத்து நடுங்கும் போதென் னடுக்க நீக்கியே
அதனமே லுயர்ந்த நிலையில் வைத்தாய் யடிமை
யாக்கியே"1

எனத் தம் அனுபவத்தினின்று கூறுவார். இறைவன், அடியார்களுக்கு அகக்காட்சி வழங்கும்போதேல்லாம், ஆன்மீக நெறியில் மேலும் புதிதாக உள்ள ஓர் அனுபவத்தைச் சுட்டிக் காட்டுவான் என்பதை மாணிக்கவாசகர், “மேல் நெறியெல்லாம் புலம் ஆக்கிய எந்தையை” என்று கூறுவதால் அறியலாம். இவ்வாறு அவருக்கு உணர்த்தியதோடு, அவர்காணத் தன்னோடு இருந்த அடியார் சிலரைத் தன்னோடு உட்கொண்டு மறைந்தான். அவர்கள் சிவகதி சேர்ந்தனர் என்பதை உணர்ந்த மணிவாசகர், ஆன்மீகத்தில் மேல்நெறி அனுபவம் எல்லாம் சிவகதி சேர்தலிலேயே நிறைவு பெறும் என்பதை உணர்ந்தார். அவன் காட்டிய பாதையில் மேலான அனுபவங்களை ஒவ்வொன்ருகப் பெற்றுவந்த மணிவாசகருக்கு, ஓர் இடத்தில் பெருந்தடை உண்டாயிற்று. அதைக் கண்டு திகைத்தார். இத்திகைப்பைப் பற்றியும், அதிலிருந்து அவர் மீண்டு, தேறிய வகையைப் பற்றியும் இச்சொற்பொழிவில் காண்போம்

மணிவாசகருக்கு விளைந்த தடை, இறைவன். அவருக்கு முன்போலக் காட்சி வழங்காமையே ஆகும். முன்னர் அவனைக் கண்ட ஒவ்வொரு முறையிலும் மேல்நிலை மெய்யுணர்வு (பர ஞானம்) பெற்றுவந்த அவர், இப்பொழுது அவற்றினும் மேம்பட்ட மெய்யுணர்வு உண்டோ இல்லையோ; தம் கண்முன் அடியார்கள் சிலர் சிவகதி அடைந்ததுபோலத் தாமும் அடைவதே முறையாக இருக்கவும், இறைவன் இப்பொழுது காட்சி, கூட வழங்காது இருக்கின்ருனே என்று திகைத்தார்.

அவரது அன்பு இரண்டுவகை அளவுகளை உடையது என்றும் அவற்றுள் ஒன்று அன்பின் ஆற்ருமை என்றும் சென்ற சொற்பொழிவில் கூறினோம். இறைவன் காட்சி வழங்காது பிரிந்த ஒரு கட்டத்தில் இவ்வாற்ருமை வயப்பட்டு மறுகிப் பித்தம் கொண்டவர்போல் ஆனர். வாழ்க்கையே ஓர் முடிவுக்கு வந்தது போல் உணர்ந்தார். இவ்வுணர்வின் விளைவாகச் செத்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து அருட்பத்து. குழைத்த ப்த்து, எண்ணப்பதிகம், ஆனந்தமாலை ஆகிய பகுதிகளைப் பாடினர். இவற்றில், தம் பற்றெல்லாம்

நீங்கிவிட்ட காரணத்தால் வாழ்க்கையை முடித்துக்கொள்ள முந்தும் ஆற்றாமையும், இறைவன் அருளைப் பெறவேண்டும் என்னும் ஆசையும், அவனைக்கலந்து, நிறை அமுது போன்ற சுவையைப் பெறவேண்டும் என்னும் வேட்கையும், அவன் அருள் செய்யவில்லை என்றால் அவனைப்பிரிந்து வாழ்வதில் ஓர் பயனில்லை என்ற கையறவும், தம் துயரம் எல்லாம் தீரத் தமக்கு வழி தெரியவில்லையாதலின், இறைவனையே அடைக்கலமாக அடையும் சரணாகதி உணர்வும், இறைவனுடைய மனம் இரங்குமாறு தம் துயரங்களை எடுத்துக்கூறிக் குழைவிக்கும் உணர்வும், அவன் திருவுள்ளப்படி நடக்கட்டும் என்று இருக்கும் மேலான உணர்வும் முறையே வெளிப்படுகின்றன.

இவற்றுள், வாழ்வை முடித்துக்கொள்ளும் உணர்வை வெளிப்படுத்துவதில், திருச்சதகத்திற்கும் செத்திலாப் பத்திற்கும் இடையில் வேறுபாடு உள்ளது. திருச்சதகத்திலும் இறைவனைக் காணாமை பற்றி,

> "தாயிலாகிய இன்னருள் புரிந்த என்தலைவனை
> நனிகாணேன்
> தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன் செழுங்கடல்
> புகுவேனே"2

என்று கூறுவாராயினும், இறைவனுடைய திருவுள்ளக் குறிப்பின்படி தம்மால் நடக்க முடியாமையை எண்ணி அங்கு வருந்தினார்.

> "வினைஎன்போல் உடையார் பிறர்யார்"

எனத்தொடங்கும் பாடலில், 'பிரிவது திருக்குறிப்பன்று; ஆயினும் யான் உலகியல் பற்றியே மனம் செலுத்துகின்றேன். இதனால் நான் அருளுக்கு மாறாகச் செல்கின்றேன். இது தெரிந்தும் நான் என் தலையை மோதி உடைத்துக் கொள்ளவில்லை'3 என்று உடல் மீதுள்ள பற்றுத் தமக்கு நீங்காமையைக் குறிப்பிட்டார். ஆனால் இப்போது செத்திலாப்பத்தில், "ஆட்டுத்தேவர் தம் விதி ஒழித்து அன்பால் ஐயனே என்று உன் அருள்வழி இருப்பன்" என்று கூறி, "என்னைச் செத்திடப் பணியாய்" என்றும்

"கழலிணை காட்டிக் மாயத்தைக் கழித்து அருள்செய்யாய்" என்றும் வேண்டுகின்றார். முன்பு திருவருட்குறிப்பு அறியாமல் இருந்த நிலைமைக்கும், இப்போது 'அருள்வழி இருப்பேன்' என்று கூறுவதற்கும் உள்ள வேறுபாட்டையும், முன்பு காயத்தைச் சிதைக்க மாட்டாமைக்கும் இப்போது இறைவனது திருவடியைக் கண்டு உடலை நீத்து விடவேண்டும் என்ற முனைப்பிற்கும் உள்ள வேறுபாட்டையும் காண்க. இவ்விரண்டு பகுதிகளுக்கும் இறைவனைப் பிரிந்த பிரிவுத்துயரம் பொதுவாகும்.

இப்பொழுது மேல்நிலை அனுபவங்களை வேண்டி வருந்துகிறார் என்பது "அருள் புரிந்தனை புரிதலும் களித்துத் தலையினால் நடந்தேன்" என்றும், "நமசிவாய என்று உன் அடிபணியாப் பேயனாகிலும் பெருநெறி காட்டாய்.............சேயனாகி நின்று அலறுவது அழகோ" என்றும், "அடியேனேன் இடர்ப்படுவதும் இனிதோ" என்றும் செத்திலாப்பத்தில் கூறுவதால் புலப்படும். இத்தொடர்களுள், இறைவன் அருள்புரிந்தமையால் அவனைக் கலந்து அனுபவித்த மணிவாசகர், அது கருதித் தாம் இறுமாப்புக் கொண்டதாகப்பாடுவதன் பொருளாவது, அதற்கு மேலும் அனுபவம் இருந்ததைத் தாம் அறியாது இருந்தார் என்பதைப் புலப்படுத்தும். இம்மேல்நிலை அனுபவத்தையே பெருநெறி என்று குறிப்பிட்டு, அதனைப் பெற வேண்டுகிறார். தாம இறைவனது திருவருள் வழியில் இருப்பதால் வந்த உரிமை பற்றித் தம்மைச் 'சேயன்' (மகன்) என்றும் 'அடியன்' என்றும் அழைத்துக்கொண்டு, தாம் அலறுவதும் இடர்ப்படுவதும் இறைவனுக்கு இனிதோ என்று கேட்கின்றார். அருள் வழங்கித் தமது அன்பைப் பெருக்கவேண்டும் என்று முன்பு வேண்டிக்கொண்டவர், இப்பொழுது அவ்வருளையே முழுவதாக அனுபவிக்க விரும்புகின்றார்.

> "அளித்துவந்து எனக்கு ஆவ என்று அருளி
> அச்சம் தீர்த்தநின் அருட்பெருங் கடலில்
> திளைத்தும் தேக்கியும் பருகியும் உருகேன்"[4]

உலகப்பற்றும் பாசமும் நீங்கின என முன்பு கூறினார். இப்பொழுது உடல்மீது பற்றில்லாமையை வெளிப்படுத்தி, அருட்கடலில் திளைத்தாடுவதற்குத் தடையாய் உள்ளது உடலிலிருந்து

வாழும் வாழ்வே; ஆகவே அது ஒழியவேண்டும் என்று விரும்புகின்றுர். அருள் பெருங்கடலாக உள்ளது என்று அறிந்துகொண்டிருந்தார் ஆதலின், அதை அனுபவியாமல் உடலில் இருப்பதற்கு மனமின்றி, இருப்புக்கொள்ளாமல் துடித்தார்.5 இறைவன் 'வா' என்று முன்பு கூறியதை நினைவுகூர்ந்து; "இங்கே வா" என்று என்னை, உனது இடத்திற்கே அழைத்துக்கொள்" என்று வேண்டுகிறுர்.6 அவருக்கு இறைவனுடன் கலந்து இன்பம் பெறவேண்டும் என்ற வேட்கை அளவுகடந்து பெருகியது. செக்கர் வானம் போலச் சிவந்த மேனியை உடைய அவனைக் கண்ணுரக்கண்டு மெய்சிலிர்த்து நிற்கவேண்டும். அவனைக்கண்ட மகிழ்ச்சியால் தம் மனம் நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகவேண்டும். எப்போதும் அவன் நினைவு தம் உள்ளத்தில் இருக்கவும், நின்றுலும் இருந்தாலும் கிடந்தாலும் எழுந்தாலும் அவனை வாழ்த்தவும்வேண்டும். அவன் தம்மொடு கலந்து தந்த இன்பத்தை எண்ணி மகிழ்ந்தும், இதுகாறும் அவனைப் பிரிந்தமையை நினைந்து அழுதும், இனிப் பிரியாமை வேண்டும் என்று தொழுதும் வாழ்த்தவேண்டும். அவனது திருவடிகளில் கலந்து, 'நான் இன்றி' இருந்து இன்புறவேண்டும். களிப்பால் கூத்தாட வேண்டும். என்றைக்கு வரும் இவையெல்லாம் என்று ஏங்கினுர்.7

அவர், ஐம்புலன்களை வென்றுவிட்டார் என முன்பு கூறினேம். புலன்கள் பொருந்தி நின்று, விடயங்களை அறிதற்கு வாயிலாக இருக்கும் ஐம் பொறிகளையும் மனத்தையும் இறைவனுக்காகவே-இறைவனை வணங்கி வழிபடுவதற்காகவே- அவன் -பணி செய்வதற்காகவே-பயன்படுத்தி, வேறு வாழ்க்கை இல்லாதவராக ஆனுர். அந்த நிலையில் தமது உலகவாழ்க்கை முடிவெய்த வேண்டும் என்றும், இறைவனை எப்பொழுதும் பிரியாது வாழ்கின்ற கதி தமக்கு உண்டாகவேண்டும் என்றும் கருதினுர். அக்கதியை அடைதற்கு இறைவன் அருள்புரிவானே, மாட்டானே என்ற திகைப்பு அவருக்கு உண்டாயிற்று. தமக்கு ஒருபற்றும் இல்லை என்றும், இவ்உலகில் வாழத் தம்மால் இயலாது என்றும், உலகில் ஒருவரோடும் தமக்கு உறவு இல்லை; எல்லா உறவும் சிவனிடத்திலேயே என்றும் கூறி, தன்னைச் சிவபுரத்திற்கு வருமாறு அழைத்துக்கொள்வானுக என்று இறைவனை வேண்டுகிறுர்.8

அவர் உள்ளத்தில் தோன்றிய துயரங்களை எல்லாம் இறைவனிடத்தில் அன்றி, வேறு யாரிடமும் கூறுவதால் பயனில்லை என்று, அவனிடமே அவற்றைக் கூறித் தம்மை அடைக்கலமாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறார். அடைக்கலப் பொருளைக் காத்தல் பெரியோர் பண்பு ஆதலின், அவ்வாறு அளித்தாலேனும் இறைவனின் மனம் இரங்காதா என்று கருதினார். தறியில் நெசவுசெய்யும்போது, நெய்யப்படும் துணியின்கீழ் மறைந்து குறுக்கே ஓடும் குழலினைப்போல, மெய்யுணர்வு பெற்று வரும்போதே, மனம் மறைவாக முன்னை வாசனைகளை நாடுவதை உணர்ந்து, இறைவன் தமக்கு அருளவில்லையேல், தம் மனம் வினைகளால் மீண்டும் புலன்வழியில் வீழ்ந்து, உலகியலைச் சார்ந்த பழைய வாழ்க்கையையே தர, அதன் விளைவாக நரகத்தில் விழ நேருமோ என்று அஞ்சி, அவன் தம்மைத் திருவடிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பி, அவன் திருவுள்ளக் குறிப்பு யாதோ என்று திகைக்கின்றார்.

> ''மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
> கூவிடு வாய்தும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்''[9]

இங்கு மணிவாசகர் தம்மை இறைவன் அழைத்துக் கொள்ள வேண்டும் எனத் தமது அறிவில் விளைந்த விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்ளுவது குறிப்பிடத்தக்கது. இவ்விருப்பத்தைக் கூறியே, இறைவனது குறிப்பைத் தாம் அறியாது திகைப்பதாகச் சொல்கின்றார். இதிலிருந்து, இறைவனது குறிப்பினை அறியமாட்டாமை, இவரது திகைப்பிற்கு ஒரு காரணம் என அறியலாம் இனி, தம் திகைப்பின் மற்றொரு காரணத்தை விளக்குவாராய், ஓர் அழகிய உருவகத்தைப் பயன்படுத்திப் பாடல் செய்கின்றார். அதில், இறைவன் வாரி வழங்கிய அருள் அமுதத்தை அப்படியே அள்ளி விழுங்கியதாகவும், அந்த அவசரத்தில் விக்கியதாகவும் கூறி, அவ்விக்கல் தணியத் தண்ணீர் தரவேண்டும் என்று இறைவனை வேண்டுகிறார்.[10] சுவைப்பொருள் ஒன்று கிடைத்தால், அதைச் சிறிது சிறிதாகச் சுவைத்து உண்பதே உலக வழக்கம். அதுபோல, அகக்காட்சியில், அருள் அமுதினை மெய்யுணர்வு என்னும் ஞானத் தோடு குழைத்து வழங்குகின்றான் இறைவன். அந்த அருள், உயிரு

ணர்வினால் சுவைக்கப்படும்போது அமுதம் போல் இனிக்கிறது. அதுவே சிவானந்தம் ஆகிறது. ஆனால், அதனோடு இறைவன் தரும் மெய்யுணர்வைச் சிந்தித்துச் சிறிதுசிறிதாக உணர்ந்தா லன்றிப்பயனில்லை. அதுமட்டுமன்றி, ஞான அனுபவத்தில் தடை யும் உண்டாகும். மணிவாசகர் உணர்ந்தது இத்தடையையே ஆகும். அதனையே விக்கல் ஏற்பட்டதாகக் கூறுகிறார். மெய்யுணர் வைச் சரிவரப் புரிந்துகொள்ளமால் நிற்கும் தமக்கு, அதனைப் புரிந்துகொள்வதற்குரிய எளிய வழியைக் கருணையால் அருள வேண்டும் என்பார், அக்கருணையைத் தண்ணீர் என்றார். இறை வனது கருணையை முன்பே பெற்று, அதன் தன்மையை அறிந்திருக் கின்றார். ஆதலின், அதனைத் "தேன் அன்ன தண்ணீர்" என்று உருவகிக்கின்றார். இங்குத் தேன் என்பது கருணையால் அவர் பெற்ற இன்பத்தைக் குறிக்கும். இறைவன் இக்கருணையைக் கூட வழங்காது இருந்தது அவருக்குத் திகைப்பை உண்டாக் கிற்று. இதனையே,

> "யாரொடு நோகேன் யார்க்கெடுத் துரைக்கேன்
> ஆண்ட நீ அருளிலையானால்"11

என்று இறைவனோடு நொந்து உரைப்பதின் வாயிலாக வெளிப் படுத்துகின்றார்.

சிவபிரான் தமக்கு அளித்த மெய்யுணர்வைத் தாம் புரிந்து கொள்ளாமல், இப்போது சிவானுபவத்தை இழந்து நிற்பதா கவும், இறைவனைக் குறைகூறிப் பயன் இல்லை என்றும் ஒரு பாடலில் கூறுகின்றார்.11அ

தமக்கு வீடுபேற்றில் உள்ள விருப்பத்தினை அருட்பத்தில்.

> "பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
> போதராய் என்றரு ளாயே"12

என்ற வரிகளில் புலப்படுத்துகின்றார். அவ்வீட்டின்பம் எவ்வாறு இருக்கும் என்பதைப் பிற அடியார்களின் மெய்யுணர்வு நிலை யைப் பார்த்து ஊகித்து அறிந்தார். அவர்கள், உடல் பற்றிய

எண்ணம் எதுவுமின்றி (அதுவேண்டா என்ற வெறுப்பும் இன்றி 'தானே கருத்தா' என எண்ணும் அகங்காரமும், 'தன்னுடைடது என எண்ணும் உடைமை உணர்ச்சியும் ஆகிய, தம்மை நோக்கிய உணர்வு ஒன்றுமின்றிச் சிவ சிந்தையாகவே வாழ்வதைக் கண்டார் அந்த நிலை தமக்கும் வருமோ என்று ஏங்கித் திகைத்தார்.13

அடியார்கள் பெறும் சிவானந்தத்தை அவர் விரித்துரைக்கக்கேட்டு. அவ்வின்பம் தமக்கும் வாராதோ என்று விழைகின்றார். அந்தப் பேரின்பம் பெருங்கடல் போன்று, பரந்து விரிந்தது. அது ஒருவர்பால் அலையும்போது, அவரை விட்டு அகல்வதில்லை. அது தமது அளவில் தங்கி, மற்ற இடங்களில் இல்லாதது போல் அவர்கள் உணர்வதும் இல்லை. "சிவானந்த வெள்ளம் பொங்கித் ததும்பிக் கிடக்குதையோ" என்பார் தாயுமானுர். 'குறைவிலா நிறைவே'14 என்றும், 'பார்பதம் அண்டம் முழுதுமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே''15 என்றும் மாணிக்கவாசகரே பின்னர்ப் பாடுவர். ஆதலால் அந்தச் சிவானந்தத்தைப் "பேரா, ஒழியா இன்பமாகடல்'' என்றார். இவ்வின்பத்தை அனுபவிக்கும் ஆன்மா, தனது வியாபகத்தை உணர்ந்து, தன்னையும் ஒளியாகவே, உணர்கிறது ஆதலின், இவ்வின்ப உணர்வு உடலில் தங்கியிருக்கும் உயிரின் சிற்றளவில் நிற்பதன்று. 'அகிலமெல்லாம் ஒன்று' என உணரும் உயிர்உணர்வாகி, 'எங்கும் சிவமயம், எங்கும் இன்பமயம்' என்று உணர்வதாகி, குறுகிய எல்லைகளைத் தாண்டிக் கொண்டு செல்லும் நிலை இது. இதை "ஒழியா" என்ற அடைமொழியால் குறித்தார். இவ்வின்பானுபவம் உயிருக்கு நிலைத்த, அனுபவம் ஆகும் என்பார் "பேரா" என்றும், உடம்பு, மனம் அறிவு என்ற சிறிய எல்லைகளில் அடைபட்டுக் கிடக்கும் உயிருக்கு அதன் வியாபக நிலையை மீண்டும் உண்டாக்கிக் கொடுத்து, இவ்வின்பத்தி அகத்தில் மட்டும் அன்றிப் புறத்திலும் பரவிக்கிடப்பதை உயிரானது உணரச்செய்வான் இறைவன் ஆதலின் "ஒழியா" என்றும், வெவ்வேறு அடைமொழிகளால் சிறப்பித்தார். இவ்விரண்டினுடையதாகவும் உள்ள பொதுத்தன்மையைப் 'பிரிவில்லா' என்ற அடைமொழியால் குறித்தார். உயிர்க்கு நிலைத்த சிவானந்தம் கிடைக்கிறது என்றால், இறைவன் அவ்வுயிரை

விட்டுப்பிரியாதிருக்கின்றான் என்று பொருள். இதனை மணிவாசகரே, தாம் அனுபவித்த நிலையில், 'ஊனாருடல் புகுந்தான் உயிர் கலந்தான் உளம் பிரியான்' என்று கூறுவார். அதே சமயம், அச் சிவானந்தம் இங்கு, அங்கு என்பது இன்றி எங்கும் பரவி நிற்பதாக உயிரானது உணரும் ஆதலின். பிரிவில்லாமை இவ்விரண்டிற்கும் பொதுவாயிற்று.

இச்சிவானந்தத்தை மனம் ஒருபோதும் மறவாது. மறந்தால் தானே நினைப்பது ? ஆதலின், நினையவும் செய்யாது. அதன் புத்தியில் என்றென்றும் ஆனந்தம் தங்கி நிற்கும். இங்ஙனம் மறவாமைக்குக் காரணம், அளவின்றிப் பெருகிக் கிடக்கும் சிவானந்தம் இருப்பது மனத்தால் புரிந்து கொள்ளப்பட்டு, எல்லாம் இறைவனே என்று அது தெளிந்து கொள்கிறது என்பதாகும். பிறகு இதைவிட்டு வேறு எதைப்பற்றும்? பற்றுதலும் விடுதலும் நின்று விட்டால் மனம் என்ற ஒன்று இல்லாமலே போய்ப் புத்தி ஒன்றே சுத்த தத்துவத்தில்-அதாவது சிவதத்துவத்தில்-சிவத்துடன் கலந்து நிற்கும். சிவமாதல் என்பது இதுவே. இனி இந்நிலையை உயிர் அடைந்தால், அது அழியா நிலையாகிய வீடுபேறு எய்தும் என்பார், "மாளா இன்ப மாகடல்" என்றார். 16

சிவானந்தத்தை இத்தகையதாக அடியார்கள் அனுபவிக்கின்றார்கள் அறிந்துவைத்தும், அதனைத்தாமும் பெறாமல் இருந்ததே மாணிக்கவாசகருக்குப் பெருந்திகைப்பாயிருந்தது. அது பற்றி இறைவனை இரந்து வேண்டி, அவனது மனத்தைக் குழைவிக்கத் தொடங்கினார். சிவானந்த அனுபவத்தில், முன்வினைப் பயனால் உண்டாகிவிட்ட இந்தத் தடை, அந்த வினையின் மிகுதியால் நீங்காது இருப்பினும், இறைவனின் உள்ளம் குழையும்படி இரந்து குறையுற்றாலாவது நீங்காதா என்று நினைக்கின்றார்

"குழைத்தால். பண்டைக் கொடுவினை நோய்
காவாய்" 16அ

நீ காவாதிருந்து. நான் வினைப்பயனால் துன்புற்றால், நன்மை உண்டா என்று தெரியாமல் திகைக்கின்றேன் என்பார்.

"உழைத்தால் உறுதி உண்டோதான்" என்கின்றார்.

வினைப்பயனால் நான் இறைநெறிக்கு மாறாகத் தவறுசெய்தால், அதுபற்றிக் கருணையாளனாகிய நீ, அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டாவா? நீ பொறுத்துக்கொள்ளவில்லையே அதனால் திகைக்கின்றேன் எங்கின்றார்.

"பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ?"

இறைவன் தம்மை ஆட்கொண்டு ஆராத இன்பம் தந்தவன் என்ற உரிமைபற்றி, 'பொறுக்க வேண்டாவோ' எனக் கேட்கின்றார்.

"முன்னர், அழையாமலே வந்து ஆட்கொண்ட நீ, 'பிறை சேர் சடையாய் முறையோ' என்று, நீ செய்த தகவின்மை கூறி அழைக்கின்ற இந்நேரத்தில், அருளாது இருக்கின்றாயே என்று திகைக்கின்றேன்[17] எனக்கூறுகின்றார்.

'இறைவா, நான் உன்னைப்பாடும்போது, என் நாவாக, மனமாக, மற்ற பொறிபுலன்களாக-அவற்றில் உடனாகி நிற்பவன் நீ. அப்படியானால் மனத்தின் திகைப்பும் நீதான். அதிலிருந்து தேறும் வழியும் நீதன் உரைக்க வேண்டும். நன்மை, தீமை யாவும் நீயே. நீ அல்லால் பிறிது ஒன்று இல்லை, நான் திகைத்தால் நீ தேற்ற வேண்டாமா? என்று முறையிடுகின்றார்.[18]

சிவபெருமான் மாணிக்கவாசகருக்கு, 'ஊனாய், உயிராய், உணர்வாய்'—உட்கலந்து, தேனாய், அமுதமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்த் தித்தித்தான் ஆதலின், தம் பொறிபுலன்களும் மனம் முதலிய அகக்கரணங்களும் அவனே என்றார். அவரவர் வினைப்பயனுக்கு ஏற்ப, நன்மை தீமைகளை, அவரவர் அனுபவிக்குமாறு, கூட்டுவிப்பவன் இறைவன் ஆதலின், தீமை நன்மை முழுதும் அவனே என்றார். மனத்தில் உணர்வாய்க் கலந்து நின்றவன், இப்போது காட்சிதராமல், அதன்வழி, மேல்நிலை யனுபவம் தராமல், பராமுகமாக இருப்பது பற்றி, திகைப்பும் அவனே என்றார். அவனைப்பற்றி வந்த திகைப்பாதலின், அதை நீக்கித் தெளிவூட்டுபவனும் அவனாகவே இருக்கமுடியும் என்று,

தேறும் வகை அவனே என்றார். தாய்போல், இறைவனால் தலையளிக்கப்பட்டவராதலின், 'நான் திகைத்து நிற்கும்போது, தேற்றத்தெரிந்த நீ, தேற்ற வேண்டாவா?' என்று வினவுகின்றார். இவ்வாறெல்லாம் வருந்திய மணிவாசகருக்கு, இவ்வருத்தச் சிந்தனையில் பிறந்த தெளிவாக ஓர் உணர்வு தோன்றியது.

இறைவனது திருவுள்ளக் குறிப்பு எதுவாயினும், அதன்படி நடக்கவே முடிவாக விரும்பினார். ஆதலின், திகைப்பினால் வருந்தினாலும், அதை நீக்குதல் பற்றி, அவன் திருவுள்ளத்தில் என்ன கருதுகின்றானோ, அதன்படிச் செய்க. எதுபற்றியும் தாம் முனைந்து செயல்படப் போவதில்லை என்று இருந்துவிட்டார். தம் உள்ளத்தில் தோன்றும் ஒவ்வொரு விருப்பமும் அவன் திருவுள்ளத்தின்படியே நிகழ்கிறது என்று நம்பினார். திருப்பெருந்துறையில் அவன் 'மெய்ந்நெறி எலாம் புலம் ஆக்கினான்'. மெய்ந்நெறி எதுவென்று அவரது மெய்யுணர்வில் புரிந்துகொள்ளச்செய்தான் தொடர்ந்து அவன் மெய்யுணர்வு தந்ததும் உண்டு; தராமல் இருந்ததும் உண்டு. இவை எல்லாம், தமது முயற்சியால் அன்றி, அவனது திருவருளால் தோன்றிய திருவுள்ளக் குறிப்பால் நடந்தவை என்று இப்போது தெளிவடைந்துவிட்டார். ஆதலால், தமது திகைப்பை நீக்கி அருள்செய்வது அவன் பொறுப்பு; தமது முயற்சி ஒன்றும் வேண்டா என்று இருந்தார்.[16] இந்த நிலை, இறைவனிடம் தம்மை முழுதும் ஒப்புக்கொடுத்துத் தற்சுதந்திரம் இன்மை என்ற உணர்வுடன் இருப்பதாகும்.

> "பாட்டுவித்தால் பாடுகின்றேன் பணிவித்தால் பணிகின்
> கின்றேன் பதியே நின்னைக்
> கூட்டுவித்தால் கூடுகின்றேன் குழைவித்தால் குழைகின்
> றேன்..............................
> ....
> .... அந்தோ இச்சிறியேனால் ஆவதென்னே"

என்று இதே உணர்வுநிலையில் பாடுகின்றார் வள்ளலார். டாக்டர் ஸ்டார்பக் என்னும் அறிஞர்,

"மிகப்பெரிய வேதனையிலிருந்து விடுபட வேண்டுமானால், அதற்குத் தானே முயற்சி செய்யலாம் என்றும், தடையை எதிர்த்து நிற்கலாம் என்றும் எண்ணும் தன் முனைப்பு (Personal will) முழுவதுமாக நீங்கவேண்டும். இந்த முனைப்பு உள்ளவரை, தான் விரும்பும் திசையில் செல்லத் தன் முயற்சி செய்யும்வரை, வேதனை நீங்காது" என்று கூறுகின்றார்.20

மணிவாசகரும் இந்நிலைக்கு வந்து, இறைவன் திருவுள்ளம் எதுவோ, அதன்படி நடக்கட்டும் என்று இருந்தார். இன்று, எனக்கு இடையூறு வந்ததாகக்கூட நான் கருதவில்லை. 'அவன் என்னை ஆட்கொண்டான், எல்லாம் அவன் பொறுப்பு' என்று உணர்வாராய், இறைவனை விளித்துக் கூறுகிறார்;

"மலையேபோல் பெரிதுயர்ந்து நிற்பவனே, என் உயிர், உடல், உடமை எல்லாம் உனக்கே சொந்தமாக நீ ஆட்கொண்டு விட்டாயன்றோ ? அவ்வாறு இருக்க, எனக்கு இடையூறு வந்தது என்று நான் எண்ணலாமோ ? எனக்கு நன்மையோ, தீமையோ எது வரவேண்டும் என்று நானா அதை முடிவுசெய்வது ? நீயன்றோ முடிவு செய்கின்றாய் ?21

இறைவன், தம்மை ஆட்கொண்டபோதே தம் உயிர், உடல், உடைமைகளுக்கு எல்லாம் சொந்தக்காரனாகி விட்டான் என்பதை இப்போது உணர்கின்றார் மாணிக்கவாசகர். இது, படிப்படியாக அனுபவம் பெற்றதன் விளைவாகும். இறைவன் அடித்தடித்து அக்காரம் ஊட்டியதால்-வேதனைகளை உண்டாக்கி, அவற்றைப் பின்பு தீர்த்தும் அவரில் கலந்துநின்று இன்பம் அளித்தும்-இவ்வாறு துன்பமும் இன்பமும், இறையனுபவத்திலும் புறவாழ்க்கையிலும் அவருக்குக் கொடுத்ததால்-பட்டு உணர்ந்த அனுபவத்தின் விளைவு இது. அவர் மேலும் கூறுகின்றார்:

"இறைவா, நீயே விரும்பி என்னை ஆட்கொண்டாய், ஆகவே இன்னும் நீ என்னைப் பிறப்பில் விடுவாயோ, அல்லது உன் திருவடி நிழலில் வைப்பாயோ, அது உன் பொறுப்பு. உடம்பையும் உனக்கு உரியதாகவே வைத்து, நான் சும்மா இருப்பது

அல்லாமல், என்னை நீ என்ன செய்யவேண்டும் என்று சொல்ல நான் யார்? அந்த உரிமை எனக்கு ஏது? உன் விருப்பப்படி செய்தருள்க''22

முன்பு, தம்மைத் திருவடிக்கே அழைத்துக்கொள்ள வேண்டும் என்று தம் விருப்பத்தை வெளியிட்டதற்கும், இப்போது அவன் திருவுள்ளப்படி நடப்பதாக என்று இருப்பதற்கும் உள்ள வேறுபாட்டைக் காண்க. முன்னையநிலை, ஆன்மபோதம் முனைத்து நின்றநிலை. பின்னையதோ, அந்த போதம் மங்கித் தற்சுதந்திரம இழந்தநிலை. ஆன்மபோதம் மங்காமல் இருந்தமையால்தான், அவரது மேல்நிலை அனுபவம் தடைப்பட்டது; திகைப்பு ஏற்பட்டது.

மேல்நிலை அனுபவத்தைப்பெற வாய்ப்பாக இருக்கும் என்று, அடியார் கூட்டத்தில் சேரவிரும்புகின்றார். ஆனால், அவர்கள் தம்மை ஏற்றுக்கொள்வார்களோ என்ற திகைப்பு உண்டாயிற்று. அந்தத்தகுதி பணியால்தான் வந்துசேரும். முன்பு இறைவன் பணித்தவாறே, பணிசெய்தாரேனும், தம் அன்புக் குறைவால் அப்பணியிலும் குறை நேர்ந்ததோ என்றும், அதனால் தான் தாம் அனுபவப்பாதையில் பிற்பட்டிருக்கலாமோ என்றும் எண்ணினார்.

''முன்னின்று ஆண்டாய் எனை முன்னம், யானும்
அதுவே முயல்வுற்றுப்
பின்னின்று ஏவல் செய்கின்றேன் பிற்பட்டொழிந்தேன்
பெம்மானே''

என்னும், 'நீ எனக்குக் காட்சிதந்து, என்னை வாவென்று அழைத்துக் கொள்ளாவிட்டால், உன் பழவடியார் உனக்கும் இவனுக்கும் தொடர்பு இல்லையா என்று வினவமாட்டார்களா?' என்றும் முறையிடுகின்றார். 23

''நீ என்பால் வந்திருப்பதற்கு உன் திருவுள்ளம் இரங்குமோ என்று அழுவதைத்தவிர வேறு யாது செய்வேன்?'' என்று கூறி அழுது அழுது வருந்தினார். அடியார்கள் மெய்யுணர்வுக் காட்சி பெறுவதையும் தாம் பெறாமல் இருப்பதையும் எண்ணி இறைவனிடம், 'அவர்கள் பிறவிக்கடலின் கரையை அடையுமாறு

காட்சிகொடுத்தாய். நானோ உன் அருளை எதிர்பார்த்து ஏங்கி, இரைதேரும் கொக்குபோல இரவு பகலாக வருந்தி இளைத்தேன். பிரை ஊற்றிய பாலில் மறைந்திருக்கும் நெய்போல எனக்குத் தோன்றாமல், அருள்செய்யாமல், வாளாவிருக்கின்றாய்! இது கண்டு நடுநிலையாளர் உன்னை ஏசமாட்டாரா? 24 என்று வினவுகின்றார்.

"நீயும் உன் அடியார்களும் நின்று நிலவி விளையாடும் ஞானானந்தச் சூழலுக்கு அருகில் வர எனக்கு அருள்செய்வாயாக" என்று வேண்டுகின்றார். 'இதற்கு நீ அருள்புரியா விட்டால் நான் வீணே இறந்துபடுவேன். அவ்வாறு இறந்துபோனால் என்னைப் பிறர் சிரிக்கமாட்டார்களா?' என்று கேட்கின்றார். 25

இவற்றால், அவர் இறைவனின் அருகே நெருங்கிச் செல்வதற்கு எத்துணை ஆர்வம் கொண்டார் என்பதும், அத்துணை ஆர்வம் உடையராயினும், அவன் திருவருள்-குறிப்பு வைத்தால் தான் அது நடக்கும் என்று தெரிந்திருந்தாராதலின், 'தன்னை வருக' என்று அழைக்கத் திருவுள்ளம் பற்றுமாறு, இறைவனை வேண்டுகின்றார். மற்றும், அடியார் கூட்டத்தில் சேர்ந்திருந்தால், இறைவனின் மெய்யுணர்வு அனுபவத்திற்கு அவர்களின் நட்பும் நெருக்கமும் துணைநிற்கும்; அதுமட்டுமன்று. இறைவன் அவர்களிடம் உடனாய் நின்று உறைகின்றான் ஆதலின், 'அன்பு நிறைந்த அவர்களும் சிவமே' எனக்கொண்டு, அவர்களைத் தொழுது அவர்களுடன் உறையவும் அவர்கட்குப் பணிசெய்யவும் விரும்பினார் இது சங்கம வழிபாடு எனப்பெறும். பெரிய புராணத்தில் பல அடியார்கள் செய்தது இவ்வழிபாடே யாகும்.

"மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன் எனத்தொழுமே"
என்பது மெய்கண்டார் வாக்கு"

'ஆணவமலம் முழுவதும் அகலப்பெற்று, அன்பு நிறைந்த அடியார்களால் திருக்கோவிலும் சிவமே எனக்கொண்டு தொழுவர் சிவனை அணைந்தோர்' என்பது இதன் கருத்து. இவ்வழி பாட்டை விரும்பி அதற்கு இறையருளை வேண்டுகின்றார் மாணிக்கவாசகர்.

குறிப்புக்கள்

1. திருஅருட்பா–கீர்த்தனைப்பகுதி ; மெய்யருள் வியப்பு : 1, 2.
2. திருச்சதகம் : 39.
3. திருச்சதகம் :, 37.
4. செத்திலாப்பத்து : 10.
5. ஆசைப்பத்து : 2.
6. மேலது., 1.
7. புணர்ச்சிப்பத்து . 8.
8. வாழாப்பத்து : 1, 3, 5.
9. அடைக்கலப்பத்து : 8.
10. மேலது., 10.
11. வாழாப்பத்து : 1.

11.அ. ஆனந்தமாலை . 2.

12. அருட்பத்து : 10.
13. பிரார்த்தனைப்பத்து : 5.
14. கோயில்திருப்பதிகம் : 5.
15. மேலது., 8.
16. பேரா ஒழியாப் பிரிவில்லா மறையா நினையா அளவிலா மாளா இன்ப மாகடலே-பிரார்த்தனைப்பத்து : 6.

16.அ குழைத்தபத்து ; 1.

17. குழைத்தபத்து : 1.
18. மேலது., 5.
19. மேலது , 6.
20. The personal will must be given up. In many cases relief persistently refuses to come until the person ceases to resist or to make an effort in the direction he desires to go-Dr. Star buck as quoted in Varieties of Religious Experience, P.205.
21. குழைத்தபத்து : 7.
22. மேலது., 8.
23. கோயில்மூத்த திருப்பதிகம் : 2.
24. மேலது., 5.
25. மேலது., 8.

———O———

4. "எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார்?"

வில்லியம் ஜேம்ஸ், அருளாளர்களின் (Saints) பண்பமைப்பினை ஆய்ந்து, உலகமெங்கிலும் உள்ள அருளாளர்களின் பண்பமைப்பு ஏறத்தாழ ஒரு தன்மையதாகவே உள்ளது எனக்கூறி, அதைப்பின்வருமாறு விளக்குகின்றார்.1

1. இவ்வுலகிற்குரிய சுய நலமான விருப்பங்களை விடுத்து, பரந்துபட்ட பெரிய வாழ்வினை உடையராதல்.

2. இலட்சியமாக உள்ள பேராற்றல் தம்முடன் நெருக்கமாகத் தொடர்புகொண்டு வருவதாக உணர்தலும், அதன் ஆளுகையில் முழுவிருப்பத்துடன், தம்மை ஒப்புக்கொடுத்து அடங்கிப் போதலும் ஆகிய உணர்விற்கு ஆட்படுதல்.

3, 'நான்' என்ற குறுகிய எல்லைகள், தமது உணர்விலிருந்து நெகிழ்ந்து, கரைந்து போவதால், மிகஉயர்ந்த அறிவும், கட்டினின்று விடுபட்ட நிலையும் பெறுதல்.

இப்பண்பமைப்பு மாணிக்கவாசகருக்கும் இருந்தமையை அவருடைய வாக்குகள் எடுத்துக்காட்டுகின்றன. அவர் தமது மெய்யுணர்வு-அநுபவத்தில் நிகழும் தடையையும் நீக்குவதற்குத் தாம் முயற்சி செய்வதில்லை: இறைவன் திருவுள்ளம் யாதோ, அதன்படி நடப்பதாகுக' என்று, பெருநிலை ஞானமும் உயர்நிலை. ஆன்மீக அனுபவமும் பெறுதலில் கூடச் சுயவிருப்பத்திற்கு இடமளியாமல் இருந்ததை முன்னைச் சொற்பொழிவில் கூறினோம் சைவசித்தாந்தக் கருத்தின் படி, பசுஞானம் கழலும் நிலை இது. பதிஞானம் முழுமையாகப் பெறவிருக்கும் ஆயத்த நிலையும் இதுவாகும்.

இறைவன் 'தில்லைக்கு வருக' என்று ஆணையிட்டதற்கு ஏற்ப மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையை விட்டுத் தில்லைக்குச் சென்றார். அங்கு அவரது திகைப்பு நீங்க இறைவன் அகக்காட்சி

நல்கி மேல்நிலை மெய்யுணர்வு அனுபவம் அளித்தான். அந்நிலையில் அவரது ஆணவமலம் முற்றாக நீங்கியது: அதன் வேரும் நீங்கியது. வேர் நீங்கினால்தானே அது மீண்டும் முளைக்காது! இதனை,

"பாசவேர் அறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமாறு அடியேனேற்கு அருளிப்
பூசனை உகந்துஎன் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே"[2]

என்று குறிப்பிடுகின்றார்: இறைவன் தமக்குத் திருப்பெருந்துறையில் அகக்காட்சி நல்கியது முதல் இப்பொழுது வரை அவன் அளித்த சிவானந்தமும், சோதனையும், திகைப்பும் எல்லாம் ஒரு குறிப்பிட்ட நோக்கம் நிறைவேறுவதற்காகத் தொடர்ச்சியாக நிகழ்ந்தவை; அந்நோக்கம், தமது உயிரை அநாதியே பற்றியிருந்த ஆணவ மலத்தினை வேரொடு களைதலாகும் என்பதை இப்போது உணர்ந்து குறிப்பிடுகின்றார். இதனைப் பின்னும், 'பொய் இருள் கடிந்த மெய்ச்சுடரே'[3] என்பார்.

ஆணவமலம் வேரோடு நீங்கியமையால், அவரது திகைப்பு முற்றும் நீங்கச் சிந்தை தெளிந்தது. முழுஞானம் கைவரப் பெற்றார். சீவன் முத்தர் ஆனார். இறப்பு என்ற பொதுநிலையிலிருந்து தப்பினார். இறந்து நரகில் வீழச்செய்வதாகிய முக்குணச் சேட்டையிலிருந்து தப்பினார். அதுமட்டுமோ? இறைவனுடைய திருவடியின்பத்தை அதனால் நல்கப்பெற்று ஆரத்துய்த்தார். அந்நிலையிலும், அவன் ஆண்டானாகத் தாம் அடியவராக இருந்து, ஆனால் தற்போதம் இழந்து, தாம் துய்க்கின்றோம் என்ற நினைவின்றி, என்றும் நீங்காத பேரின்பமாகிய ஆனந்தம் பெற்றார். இதனைத் தாம் 'சிவம்' ஆனதாகக் குறிக்கின்றமையால் உணர்த்துகின்றார். இந்த அனுபவம் இருந்தது: ஆனால் தாம் அனுபவிக்கிறோம் என்ற ஆன்மபோதம் இல்லை.

"இந்திரிய வயம்மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லைக்கண்டேனே"[4]

'சிவமாக்கி என்னை ஆண்டான்' என்ற சொல்லாட்சியைக் கவனியுங்கள்.

மற்றும், இறைவன் இதற்கு முன்னர், தமது கன்ம மலத்தை நீக்கினன்-வினையறுத்தான்-என்பதையும் மாயா மலத்தை நீக்கினன் என்பதையும்,

> "வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
> தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
> எனைப்பெரிதும் ஆட்கொண்டுஎன் பிறப்பறுத்த இணையிலியை
> அனைத்துலகும் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே"[5]

என்ற பாடலில் தெளிவாக்குகின்றார். ஆக, அவரைப் பற்றியிருந்த பேரழுக்குகளாகிய மும்மலமும் நீங்கின. மற்றும், இறைவன் முன்பே தனது பசுஞானம் கழன்று நீங்கச் செய்தமையை,

> "பல்லோரும் காண என்றன் பசுபாசம் அறுத்தானை"[6]

என்று, இறைவன் மதுரைக்குக் குதிரையின் மேல் வந்த நிகழ்ச்சியுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றார். பல்லோரும் காணவந்து என் பசுஞானத்தை நீக்கியவனை என்று பொருள் கொள்ள வேண்டும். பசுஞானம் என்பது ஆன்மா தன்னை உணர்தல். மாயாகாரியமாகிய உலகின்றும் தன்னை வேறாக உணர்தல். "இங்ஙனம் உணர்ந்த அளவிலே, ஆன்மா தன்னைப் பிரம்மத்துடன் அத்துவிதமான பொருள், அதாவது பிரம்மத்தினின்றும் வேறல்லாத பொருள் என்று உணர்ந்து சீவன் முத்தி பெறும்" என்பர் ஏகான்மவாதிகள். மாணிக்கவாசகரோ "என் பசுஞானம் அறுத்தான்" என்று கூறுகின்றார். பசுஞானத்தையே பதிஞானமாகக் கொண்டு மயக்கவுணர்வால் ஏகான்மவாதிகள் குழப்புகின்றனர் என்பதை இங்கு மாணிக்கவாசகரது அனுபவ வாக்கால் உணர்ந்துணரலாம். இராமலிங்கரும் தமது அனுபவவாக்கால் 'அது நான் என்னும் கைஞானம் கழன்று ஏறி'[7] என்று கூறுவார். 'தம்மைச் சிவமாக்கி ஆண்டான்' என்று இறைவனது செயலாகவே மாணிக்கவாசகர் கூறுவதையும் கருதவேண்டும். அவரைச் சிவமாக்கினாலும் அவனே ஆண்டான்; அவனே பதி என்று உணர வேண்டும். இறைவனது திருவடி வியாபகத்துள் அடங்கித் 'தான்' என்ற தனித்த இருப்பினை (Existence) உணராமல் சிவானந்தத்தை என்றென்றும் அனுபவித்தலே 'சிவமாதல்' என்பதன் பொருளாக, மாணிக்கவாசகரின் பேறு உணர்த்துகிறது.

இனி, மேலே 'சிந்தைதனைத் தெளிவித்து' எனக் கூறினர். அஃது எங்ஙனம் தெளிந்தது என்பதை ஓராற்றன் விளக்குகின்றார். சாதி என்றும் குலம் என்றும், குடிப்பிறப்பு என்றும் இவற்றையே முக்கியமாகக் கருதி, இவற்றுள் உயர்வு தாழ்வு கற்பிக்கும் சிந்தனைச் சுழியில் அகப்பட்டுத் தடுமாறிய நிலையை நீக்கி, அதனால் வந்த அல்லலைப்போக்கி, இறைவன் ஆட்கொண்டான். மற்றும் முக்குணங்களால் மாறிமாறிச் சிந்திக்கும் அறியாமையை நீக்கினன். மேலும் உருவ வேறுபாடு ஒன்றைக்கொண்டே பிறர் என்றும் பிற என்றும் வேறுபடுத்திச் சிந்திக்கும் பகுத்தறிவை மாற்றி, ஒருமைப்பாட்டைச் சிந்திக்க வைத்தான். மற்றும், யானே செய்கின்றேன்; யானே அதிகாரி; யானே உடையவன் என்றும், என்பால் உள்ளனவெல்லாம் எனது உடைமை என்றும் கொண்டு, தன்னையே மையமாக்கியும் தன் விருப்பை விடாமலும் சிந்திக்கும் சுயமையச் சிந்தனையை நீக்கினன். பின்பு தானே ஆனந்தம் அளிக்கும் அமுதம் ஆனன்[8] என்றும் கூறுகின்றார்.

தாம் பெற்ற இறைவாழ்வு, முற்றிலும் புதுவாழ்வு என்பார், முன்பு தம்மிடம் இருந்தவற்றை எல்லாம் இறைவன் அழித்துத் தம்முட் புகுந்தான் என்றும், அதனல், தமது எலும்பெல்லாம் உள்ளுருகின என்றும் பாசஞானத்தால் உலகப்பொருள்களையும் இயல்புகளையும் மாறுபடும் இரட்டைகளாக உணரும் நிலை நீங்கிற்று என்றும் கூறுகின்றார்.[9] முன்பிருந்தவை முற்றும் அழிந்தன என்று தொகையாகக் கூறியவர், அவற்றின் வகையை, 'ஐம்பூதங்கள் அழிந்தாலும், அவை யழியும் ஊழிப்பெயர்ச்சிக் காலத்தில் தான் அழிதலின்றி என்றும் ஒரு தன்மையனாய்-சத்தாய்-உள்ளவனுக்குத் தனது ஊன் கெட்டது; உயிர்கெட்டது, உணர்ச்சி கெட்டது; உள்ளம் கெட்டது; நான் என்ற அகங்காரம் கெட்டது' என்று கூறுகின்றார்.[10] நமக்கு இவையெல்லாம் கெடுவது மரணத்தைக் குறிக்கும். ஆனல் அவருக்குப்புதுவாழ்வை-பெருவாழ்வைக் குறித்தது இவை அழிந்தன என்பதை இவற்றின் மடைமாற்றமாகக் (Sublimation) கொள்ளவேண்டும். இந்த மடைமாற்றம் திருவருளால் நடந்தது என்பதை அறியவேண்டும். இவற்றுள் ஒவ்வொன்றும் எவ்வாறு மடைமாற்றம் பெற்றது என்பதைப் பின்வரும் அனுபவ வாக்குகளால் அறியலாம்.

ஊனும் உயிரும் கெடல்:

1. அடியேனுடைய உயிரும் உடலும் பகுதிகள் தோறுங் கனிந்து நிற்க இறைவன் என்னுள் புகுந்துநின்று உருக்கினன். அதனைப் பொய்யிருள் ஆகிய ஆணவமலத்தை நீக்கினன்.11

2. ஐந்து புலன்களின் வாயிலாகிய பொறிகளை அடைத்து, அப்புலன்கள் பொறிகளின் வழியே விடயங்களில் செல்லா வண்ணம் தடுத்து. பொறிகளில் அமுதம் ஊற, என்னுள் எழுந்து நிற்கின்ற பரஞ்சோதி.12

3. எனக்கு அழியும் உடலை நீக்கியவன் அருள் உடலை அமைத்தருளினன்.13

4. திரிபுரங்களையும் புன்னகையாகிய தீயில் எரித்ததே போல, அருட்பெருந்தீயில் அடியவராகிய எமது உடலை ஒடுக்கினன். வாயில் உள்ள நெல்லிக்கனி போல விழுங்கப்படாமல், உள்ளங்கை நெல்லிக்கனியானன். அருளாரமுதம் பருகினேன். சொல்லமுடியாத நிலையில் மயிர்க்கால் தோறும் அமுதம் நிரம்பச் செய்தான் உடம்பின் பகுதிகளில் தேனைப் பாய்ச்சி அற்புதமான அமுதத் துளிகளை என் புத்துளைகளில் எல்லாம் ஏற்றினன். உடம்பு முழுவதும் உருகிற்று. உருகும் உள்ளத்தினலே வடிவமைத்தது போல, எளியேனுக்குப் பேரின்பம் ஊறுகின்ற உடலை அமைத்தான். 14

5. வானுலகம் மகிழும் படியான ஒரு வேதகம் வெளிப்படும்.15

மேற்போந்த அகச்சான்றுகளால் அவர் உள்ளம் இறைவனின் அருளால் உருகியதுபோல, உடலும் உருகிற்று. உடல் காரணங்கள் அருள் வண்ணம் ஆயின. அருளினுல் வேதகம் உண்டாக அதில் அவர்தம் சீவ காரணங்கள் சிவ காரணமாயின என்று அறியலாம். "இன்புறு வேதகத்து இரும்பு பொன் ஆனாற் போல்........அன்பு பிழம்பாய்த் திரிந்தார்" என்று கண்ணப்பரைப் பற்றிச் சேக்கிழார் கூறியதை இங்கு நினைவுகொள்ளலாம். அன்பு நிறைவினுல் கண்கள் உருகிக் கண்ணீர் சொரிந்ததுடன் அமை

யாமல், உடம்பின் எலும்புகள் எல்லாம் உருகின; அருட்டையில் உடல் ஒடுங்கிற்று என்பது இங்குச் சிறப்பாகக் கருதத்தக்கது.

2. உயிர் கெடல்;

உன்னை எனக்குத் தந்தாய்; அதற்கு ஈடாக
என்னை ஏற்றுக் கொண்டாய்16

3. உணர்வு கெடல்; உள்ளமும் போதல்:

1. உனது அருள் வெள்ளத்தில் மூழ்கும் சிந்தையில் எழும் தேனே.17

2. யான் யார் என்பதை மறந்து விட்டேன். பகலிரவு வேறுபாடும் மறந்து விட்டேன். இறைவன் என்னை மத்தோன் மத்தனாக்கி விட்டான்.18

3. இறைவன் எவன் உள்ளத்துள் யானாகி நின்றான்.19

4. 'நான்' என்ற அகங்காரம் கெடல்:

1. செறிந்திருக்கின்ற ஆணவ இருளில், தெளிவாய் நிற்கும் தூயவெளியே.20

2. திருவடியணை தற்கு நான் என்ன உரிமையுடையேன்?21

3. "இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
........நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகம்?"22

இவை எல்லாம் மடைமாறியமை பாசநீக்கத்தைக் குறிக்கும். இனித் தாம் பெற்ற சிவப்பேற்றை மாணிக்கவாசகர், பல படப் பாடுகின்றார். அது உரையும் உணர்வும் கடந்து நின்று, அதாவது பாசஞானமும், பசுஞானமும் கடந்துநின்று அனுபவிக்கப்பெற்று, உரைக்க முடியாத ஒன்றாய் நிற்பினும், இறைவனை 'யான் உன்னை உரைக்கும் வழியை உணர்த்தியருள்' என்று வேண்டி, அவனது கருணையைப் பெற்று, அவன் திருவருள் நினைவுடன், அமுதம் போன்ற பாடல்களை இயற்றினார்.23

சிவானுபவத்தில் அவரது ஆன்மா நிறைவுபெற்றது. முன்பெல்லாம் சிவானுபவத்தின் பின், இறைக்காட்சி மறைந்தபின், ஒரு வெறும் பாழ் உணர்வு தோன்றிட, பிரிவுணர்ந்து அவர் திகைத்திருக்கின்றார். அழுதிருக்கிறார். இப்பொழுதோ, சிவானந்தம் இல்லாதபோதும், அவர் யாதொரு குறையையும் உணரவில்லை. ஏன் ? சிவக்காட்சி இல்லையேனும் திருவருள் அவர் உள்ளத்தில் நிறைந்திருந்தது. ஆதலின் இறைவனைக் 'குறைவிலா நிறைவாக' உணர்ந்தார். அவன் சர்வவியாபி யாதலின் எங்கும் குறைவற நிறைந்திருப்பவன். இத்தன்மை தமது அனுபவத்திற்கும் வந்தது ஆதலின் இவ்வாறு கூறினர்.

அவர் இதுவரை பெற்றுவந்த இறையனுபவம் மும்மலங்களும் இருக்கும்போதே பெற்றவையாகும். ஆதலின் அவ்வனுபவம் சிறுதுபோது தோன்றுவதும, பல்லுள் மறைவதுமாயிருந்தது. இப்போது பெறும் அனுபவமோ மலத்தடையால் மறைபடாத உயிர் உணர்வால் உணரப்பட்டு, உடல்எங்கும் அமுததாரைகள் சொரியச் செய்தமையால், ''கோதிலா அமுதே' என்றார். இறைவன் மலத்தால் பற்றப்படாதவன்; விமலன், அவ்வனுபவம் தமக்கு வந்தமையால் இவ்வாறு கூறினர். மண்ணும் விண்ணும் கடந்துநின்ற இறைஜோதியைத் திருமாலும் பிரமனும் காணாது திகைத்தனர், 'அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார்' என்று மாணிக்கவாசகர் கூறுவதுபோல, மால், பிரமன் முதலியோர் யாரும் பெறாத வண்ணமாய்[23] அளவுபடாதிருக்கும் இறைஜோதி அவரது அனுபவத்தில், "இருள் கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று நின்றது" ஆதலின், அதனை நினைப்பு அற நினைந்து-மறவாமல் நினைந்து-ஈறிதாக் கொழுஞ் சுடர்க் குன்றே' என்று பாடுகின்றார். துரியாதீத உணர்வால் ஈறில்லாமையை உணர்ந்து நின்றார். இது பற்றியே பிறிதோரிடத்தில், 'வானவரும் அறியா மலர்ப்பதம் வணங்குதும் அல்லமோ?' என்றும், [24] 'எங்கும் நிறைந்து அமுது ஊறு பரஞ்சுடர் எய்துவது ஆகாதோ' என்றும்[25] கூறுகின்றார், தாம் மறையையும் ஆகமங்களையும் ஆய்ந்த காலத்தில் விளங்காத மெய்யுணர்வு, இப்போது இறைபதியால் உணர்த்தப்பட்டுக்

கைவந்தது. மறையும் ஆகமமும் இறைவனை உணர்த்திக் காட்டத் தொடங்கி, தாம் வாளா கலைஞானமே யாதலின் உணர்த்த முடியாமல் கையுதறி நிற்க, இறைவன் அந்த மறை, ஆகம வாசகங்களாகவும், வாசக வடிவைக் கடந்த மெய்ப்பொருளாக வும் அவர் மனத்தே நிலைத்து நின்றான். அவனை நினைப்பதாக அவரது சிந்தைசெல்லும் எல்லை, மறை அளவோடு, ஆகம அளவோடு நில்லாமல், அதைக்கடந்தும் சென்றது. அதை நினைப்பற நினைத்தார். ஆதலின், 'மறையுமாய் மறையின் பொருளுமாய் மனத்திடை மன்னிய மன்னே' என்றார். முன்பு அவன் அருளாரமுதத்தை வாரி வழங்க, அதை 'வாரிக்கொண்டு விழுங்குகின்றேன், விக்கினேன், என்று தம நெஞ்சம் திருவருளை விளங்கிக்கொள்ள முடியாமையால் சிவ அனுபவம் தடைப் பட்டதைக் கூறிய அவர், இப்போது அவனருள் அணை கடந்த வெள்ளமாய்த் தம் சிந்தையில் பொழிவதைப் பேரானந்தத்துடன் அனுபவிக்கின்றார் ஆதலின், சிறை பெறு நீர்ப்போல் சிந்தை வாய்ப் பாயும் திருப்பெருந்துறையுறை சிவனே' என்றார். அவன் 'புன்புலால் யாக்கையே பொன்னெனுங் கோயிலாகப் புகுந்து ஆண்டான' ஆதலின், "இறைவனே நீ என் உடல் இடங்கொண் டாய்" என்றார். தமது உடலும் உள்ளமும் உயிரும் புகுந்து அமர்ந்தவன், தமக்குத் தரவேண்டியது யாது உள்ளது என்பார், "இனி உன்னை என் இரக்கேனே" என்றார்.26

மேலே காட்டியவாறு, 'நினைப்பற நினைந்தேன்' என்ற நிலையை மேலும் விளக்குவார். 'நான் பாசக் கூட்டங்களிலிருந்து விலகி, விலகி முறையே பசுஞானமும் பதிஞானமும் தலைப்பட்டுப் பின் பசுஞானமும கழலப்பெற்று, திருவருளால் இறைவனுடன் ஒன்றி நின்று அவன் உணர்த்த உணர்ந்தேன். நான் உணர்ந்ததா வது: அவன் ஒருவனே மெய்ப்பொருள். உலகத்துப்பொருள் ஒன் றும், ஆன்மாவும் அவன் அன்று; ஆனால் அவன் இல்லாத பொரு ளோ ஆன்மாவோ ஒன்றும் இல்லை. எங்கும் சிவமயம். அவ்வாறு இருந்தும் யாரும் அவனை அறியக்கூடவில்லை'27 என்று கூறுகின் றார். இப்பாடலுள், 'சென்று சென்று' என்பதற்குப் பாசக் கூட்டம் பலவாதலின், அவை ஒவ்வொன்றிலிருந்தும் விலக வேண்டும் என்றும் அவை மீளவும வந்து பற்றுமாதலின், திரு வருளால் மீண்டும் முயற்சிசெய்து ஒருகாலாக விலகவேண்டும்

என்றும் பொருள் செய்யலாம். அணு என்பது உயிர். பாசத்தினின்றும் விலகியவுடன், உயிர் தன்னைப் பதி உணர்த்த உணருமாதலின், ''அணுவாய்'' என்றும், அது பதியுடன் கலந்து ஒன்றாய்த் தற்போதம் இழந்து நிற்கும் ஆதலின் 'தேய்ந்து ஒன்றாகும்' என்றும் கூறினார்.

இந்நிலையில் நின்று பின்னோக்கும் பொழுது மாணிக்கவாசகருக்கு, இறைவன் தமக்கு அகக்காட்சி தந்ததும், பிறகு தராமல், வருந்தி நைந்தும் திகைத்தும் நிற்கச் செய்ததும் எல்லாம்' தாம் ஆன்மீக நெறியில் முறைப்படி வளரவேண்டும் என்ற கருணையால் செய்யப்பட்டவை என்று நன்கு புரிந்தது. இறைவன் அருள் வழங்கியிருந்தும், தம் மனத்தின் அலைவால் அதைப் பற்றிக் கொள்ளாமல் இருந்திருக்கின்றார் ஆதலின், தான் பாவியாக இருந்துள்ளதை எண்ணி, ''நான் பாவியேன். எனக்கு எச்சமயத்தில் எங்ஙனம் அருள்புரிதல் ஏற்றது என்று பார்த்து, குழந்தையின் உடல்நலத்தை நினைந்து பால் ஊட்டும் தாயினைவிட என் மேல் கருணை கொண்டு, எனது ஊன் உடலை உருக்கி, என் உயிரை ஒளிபெறச் செய்து, அவ்வொளிக்குள் பேரொளியாக நின்று, அளவிலாத ஆனந்தம் ஆகிய தேனைச் சொரிந்தாய். எனது அகவளர்ச்சியை நோக்கியவாறே என்னுடன் திரிந்தாய். நான் வளர்ந்த சமயத்தில் அருள் அமுது ஊட்டியும், தாழ்ந்த சமயத்தில் எனக்குப் பிரிவு வேதனையை மிகுதிப்படுத்தி, என் மனமாசுகளை நீக்கியும் என் கருத்தாகவே இருந்தாய். இப்போது என் செல்வமாக இருந்து பேரின்பம் தருகின்றாய். நானும் என் அல்லல்களால் அயர்ந்து விடாது, உன்னைத்தொடர்ந்து வந்து, இப்போது உறுதியாகப் பற்றிக்கொண்டேன் என்று கூறுகின்றார்.[28]

இவ்வாறு சிவபரம்பொருள் தம்க்கு அருளிய அனுபவத்திலிருந்து பெறப்படும் உண்மையை எடுத்துப் பேசுகின்றார் இறைவனைத் தாம் முன்பு சமய நூல் ஆய்வினால்-விசாரணையினால் அறிந்துகொள்ள முயன்றதை எண்ணி, அந்த முயற்சி பயனற்று ஒழிய, திருப்பெருந்துறையில் இறைவன் தமக்கு அகக்காட்சி வழங்கிப் பக்திநெறியில் வாழச்செய்தான் ஆதலின், இறைவனால் மெய்யுணர்வு தோற்றுவிக்கப்பெற்று, அவனுக்கு ஆராத காதல் உடையவராய் வாழும் பக்திநெறியே சிறந்தது

என்று உலகிற்கு அறிவிக்கின்றார். இம்மெய்யுணர்வு பெறுதவர் எல்லாம், எத்துணை நூலறிவு பெற்றிருப்பினும் மூடரே; முத்தி நெறியை அறியாதவரே என்று கூறுகின்றார். இறைவனுக்காக மனம் உருகி நிற்கும் பத்திநெறியே தம் வாழ்வை நிறைவுறச் செய்தது என்பதை-பிறவிகளுக்குக் காரணமான பழவினைகள் (சஞ்சிதம்) எல்லாம் முற்றாக அழியும் வண்ணம் இறையருள் பெறுவதற்குப் பத்திநெறியே துணைநின்றது என்பதை-தெளிவாக் குகின்றார். வினைகள் நீக்கப் பெற்றுப் பிறவியறுத்தலே முத்தி. வினைக்கேடனும், பிறவியறுப்பவனும் சிவபரம்பொருளே ஆவான். அவனுக்குப் பத்தி செலுத்தி அடிமைசெய்து, அவன் திருவுள்ளக் குறிப்பின் வண்ணம் வாழ்தலே, மனமாசுகளும் வினைகளும் நீங் கவும், புது வினைகள் பற்றுவண்ணம் இருக்கவும் ஒரே வழியாகும். எனவே "முத்திநெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனைப் பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறுவித்து' என்றார். மனமாசுகளுக்கெல்லாம் ஒரே காரணம், ஆணவமலம் உயிர் அறிவை மறைப்பதாகும். அந்த மலத்தை உயிரைப் பிடித்த மலம் என்பார், 'சித்தமலம்' என்றார். அதனைச் சிவபரம்பொருள், வேருடன் களைந்து, அன்பினால் சார்ந்து நிற் கும் தம்மைச் சிவமாக்கினான். மற்றும் தம்மைச் சதா சர்வகால மும் தன் திருவடியில் வைத்து ஆள்கின்றான் என்பார்,

"சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்"

என்றார். இப்பேரருளை, அவனால் பத்திநெறி அறிவிக்கப் பெற்றுத் திருவருள் வழியே, அன்பினால் ஆவியும் உடலும் நைந் துருகி வாழ்பவர் அன்றி, வேறு யாரும் பெறமுடியாது; விண்ண வரும், மாலும் அயனும் பெற்றிலர் என்பார்,

"அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச் சோவே" என்று கூறுகின்றார்.29

இதுவரை கூறியவற்றால், மாணிக்கவாசகர் இம்மைவாழ் விலேயே இருள்மலம் நீக்கப்பெற்றுச் சிவப்பேறு நல்கப்பெற்ற மையால், அவர் சீவன் முத்தர் ஆயினார் என்று அறிகின்றோம். இம்முத்தி நிலையில் அவர்பெற்ற மெய்யுணர்வால், இப்பிறவிக்கு

முன்பு தாம் சிவகணங்களுள் ஒருவராயிருந்து இறைவன் திருவுள்ளக் குறிப்பினால் மக்கட் பிறவி எய்தியமையை உணர்ந்தார். இதனை அவர், 'முன்பு என்னை இறைவன் தன்னோடு நிலவாவகையில் மனித உடலில் வந்து வாழச்செய்து, பின்னர் ஆண்டுகொண்டான்' என்று கூறுகின்றார்.[30] சீவன் முத்தராக விருந்தே அவர் சிவபுராணம் முதலிய திருவாசக நூல்கள் பலவற்றைப் பாடினார். இதனை அச்சோப்பதிகத்துள், 'எனக்கு உய்யும் நெறியைக்காட்டி. ஓங்காரத்தின் உட்பொருளை இறைவன் அருளிய இதுபோல யார் பெறுவார்? என்று வியந்து பாடுபவர், சிவபுராணத்துள், "உய்ய என் உள்ளத்தில் ஓங்கார மாய்நின்ற மெய்யா விமலா விடைப்பாகா' எனக்கூறுவதால் அறியலாம். ஓங்காரம் என்பது அண்டங்களின் படைப்பிலும் இயக்கத்திலும் அடிநாதமாய் இருப்பது. இதனைத் தம் அனுபவத்தால் அறிந்தமையை இவ்வாறு கூறுகின்றார். ஓங்காரத்தின் உட்பொருள் இறைவனே ஆவான். இறைவன், தான் உலகில் கலந்து, இயக்க சக்தியாக இருக்கின்றமையை அவருக்கு அறிவித்தபடி இது.[31]

அவர் சீவன் முத்தரானமைக்கு ஏற்பவே, அவர்தம் உடலும் அருள் உடலாக, 'விண்களிகூர் தர வந்து வெளிப்பட்ட வேதகத்தால்' மாறியதை முன்னர் எடுத்துக்காட்டினோம். இறைவனின் அருளமுதத்தைப் பருகிச் சீவன் முத்தராகி, அருள் உடம்பு பெற்றவர் ஆகிய மாணிக்கவாசகரின் திருவாக்கு அமுதமே ஆகும். இதனை அவரே "இறைவனது சிறந்த கருணையாகிய தேன் என்னிடம் கலந்து நிற்க, அவனது அருள் என்னிடம் வந்து நிறைந்தது. அந்த அருள் நினைவுடன் அமுதம் போன்ற துதிப் பாடல்கள் என்னிடம் பிறக்கச் செய்தான்' என்று கூறுகின்றார்.

"என்னில் கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமுது ஆக்கினன்"[32]

குறிப்புக்கள்

1. William James, Varieties of Religious Experience, PP. 266-267.
2. பிடித்தபத்து : 7.
3. கோயில் திருப்பதிகம் : 3.
4. கண்டபத்து : 1.
5. மேலது., 2.
6. மேலது , 4.
7. திருவருட்பா, மகாதேவமாலை : 50.
8. கண்டபத்து : 5.
9. குலாப்பத்து 3.
10. திருத்தெள்ளேணம் : 18.
11. கோயில் திருப்பதிகம் ; 3.
12. மேலது., 1
13. திருவண்டப்பகுதி : 118, .20.
14. மேலது., 158-162; 170-177.
15. திருப்படையாட்சி ; 1.
16. கோயில் திருப்பதிகம் ; 10.
17. மேலது., 8.
18. உயிருண்ணிப்பத்து ; 3.
19. மேலது., 9.
20. கோயில் திருப்பதிகம் : 4
21. உயிருண்ணிப்பத்து : 2.
22. குழைத்தபத்து : 7.
23. திருவண்டப்பகுதி : 180-184.

23அ. புணர்ச்சிப்பத்து : 1.

24. திருப்படையாட்சி : 5.
25. மேலது., 8.
26. கோயில் திருப்பதிகம் : 5.
27. மேலது., 7.
28. பிடித்தபத்து : 9.
29. அச்சோப்பதிகம் : 1.
30. அதிசயப்பத்து : 8.

31. Religioun ought to mean nothing short of this new reach of freedom for us, with the struggle over, the key note of the universe sounding in our ears, and ever lasting Possession spread before our eyes.

-William James, Varieties of Religious Experience, P.48.

என்பது இங்கு நினையத்தகும்.

32. திருவண்டப்பகுதி : 180-181.

5. "அடியரிற் கூட்டிய அதிசயம்"

மாணிக்கவாசகர் தமது சிவானந்தப் பெருவாழ்வின் ஒரு கூறாகத் தம்மை இறைவன் அடியார் கூட்டத்தில் ஒருவனைச் சேர்த்தமையை ஓர் அதிசயம் நடந்ததைப்போலக் கூறுகின்றார். சிவானந்தப் பெருவாழ்வு உறுதிபெற்று நிலையாக இருத்தற்கு அடியார் கூட்டுறவு மிகவும் இன்றியமையாததாகும். உலகியலில் சமுதாய வாழ்வு பொதுநலன்கள் வளர்வதற்கு இன்றியமையாதது ஆதல் போலவே, அருளியலிலும் அடியார்கள் திருக்கூட்டம் இணைந்து வாழ்தல், அவர்கள் மேன்மேலும் மெய்யுணர்வில் மிகுந்து இறைவனைக் கலந்துநிற்கும் இறையொன்றிப்பிற்குப் பெரிதும் துணைசெய்வதாகும். அடியார்களை வழிபடுதல் சைவ சமய நெறியில் சங்கம வழிபாடு என்று கூறப்படும். சுந்தரர் திருவாரூரில் அடியார்களை வழிபடும் வரம் தமக்கு வேண்டும் என்று இறைவனை வேண்டினார். சீவன் முத்தராகி, சிவனை அணைந்தோர்-சார்ந்தோர்-பருப்பொருளாம் சிவனை அடியார்களையே கருதி, தங்கள் மலமயக்கம் நீங்கப்பெற்று, அன்புமிக்கவராய் உள்ள அடியார்களைத் தொழுது வணங்குவர் என்று மெய்கண்டார் கூறுவர். [1]

சீவன் முத்தர் அடியார்களை வழிபடுவர் என்றால், அவர்கள் தம் அகத்தில் சிவபரம்பொருளின் மெய்யுணர்வுக் காட்சி கண்டு, அன்பு பெருக நின்று, அவ்வன்பின் வளர்ச்சியால் (Extension of love) இறைவனின் அருள்பெற்ற அடியார்களைப் புறத்தே, சிவனாகவே கண்டு, அன்பு செலுத்துவர் என்பதாகும். அவர்கள் தம் உடலில் இருந்து வாழும் போதே சீவன் முத்தி பெறுவதால், உடலிலிருந்து பிரியுங்காறும், சிவானந்த வாழ்வு தடைபடாமல் இருக்க, அடியார் இணக்கம் வேண்டற்பாலதாகும். உடல் வாழ்வு உள்ளவரை, உயிர் அகத்தே சிவத்தைச் சார்ந்தபோலப் புறத்தே அடியார்களைச் சார்ந்திருத்தல் வேண்டும்.

மாணிக்கவாசகருக்கு அடியார்களைச் சார்ந்திருக்க வேண்டும் என்னும் எண்ணம், திருப்பெருந்துறையில் இறைவன் முதன் முதலில் அகமுகக்காட்சி வழங்கியவுடனே தோன்றிவிட்டது. இவ்வான்மீக அனுபவம் வருதற்கு முன்னும் அவர் கற்றோர் சூழலில், நூலாய்வில், இறையறிவைப் பெறமுயன்றவர். இது பின்னர் அவர், 'கற்றாரை யான் வேண்டேன்' என்று கூறுவ தால் அறியப்படும். நூற்கல்வியால் அறியப்படாத மெய்யுணர்வு, இறைவன் தந்த அகக்காட்சியால் வாய்த்தது ஆதலின், அம்மெய் யுணர்வின் வளர்ச்சிக்கும், பணிசெய்வதில் வழிகாட்டுதற்கும், இறைவனிடம் அன்பு மிகுதியும் செலுத்தக் கற்றுக்கொள்ளுதற் கும், அவ்வுணர்வினை முன்னரே பெற்ற அடியார் சூழலை அடுத்து வாழ விரும்பினார். அவர்கள் தம்மை இசைந்து ஏற்றுக்கொள் வரோ என்று ஐயுற்றார். தமது ஆன்மீக வாழ்விற்கு மேல்வரிச் சட்டமாக அடியர்களையே வரித்துக்கொண்டார். இவ்வுணர்வின் எதிரொலியே, அவர் பாடும் திருவெம்பாவையில், ஒரு கன்னிப் பெண் தம் தோழியரிடம், "புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட் கொண்டால் பொல்லாதோ" எனக்கேட்பதாக அவர் கூறும் சொற்கள். திருப்பெருந்துறைக்கு வந்து புதிதாக ஆட்பட்ட தம்மை அடியார்கள் கண்டுகொண்டு, ஏற்றுக்கொள்ள வேண் டும் என்று அவர் விரும்பினார். அடியார்கள் அவரை எல்லா நேரத்திலும் அங்கீகரிக்கவில்லை. இறைவனின் காட்சியால் அவர் அன்பு பெருகப்பெற்றுத் தம் முன்னைய நிலையை எண்ணாமல் அவர்களுடன் பழகிய அளவு ஏற்றுக்கொண்டனர். அதை நன்றி யுடன் நினைவுகூறுவார், 'மிதகாகல் அடியார் தம் அடியன் ஆக்கி' என்று கூறுகின்றார். அவர்களுடன் இறைவனின் புகழையும் கருணையையும் பாடி, அருள் தூண்டலினால் ஆடினார்.[2] தமது மனம் உலகியலில் பொருந்தும் போதெல்லாம், அடியாருடன் சேர்ந்து பணிசெய்யும் வாய்ப்பு இனி வருமோ என்று ஏங்கினார்.[3] தமது இறையன்பின் அளவை அடியார்களின் அன்புடன் ஒப்பிட் டுப்பார்த்துக்கொண்டார். தம் அன்பு குறையுடையது எனக் கண்டு, 'ஐயனே, உன்னிடத்தில் அன்றி வேறு எதனிடமும் எனக்குப் பற்று இல்லை என்று என் அறிவில் தோன்றுகின்றது. ஆனால் மனம் செய்யும் வஞ்சகத்தால் என் அன்பில் பொய் கலந் துள்ளதை உணர்கின்றேன். ஆதலால், நின் திருவடியில் உண் மையாகக்கலந்த அன்பர்களின் அன்பு எனக்கும் வாய்க்க வேண்டும் என்று இறைவனை வேண்டினார்.[4]

அவர் சிவானுபவத்தை மிகுதியாகப் பெற்றுவரும் நிலையில் தம்முடன் ஒத்த அனுபவம் உடைய அடியார்களுடன் கூடி வாழ்ந்த வாழ்வின் எதிரொலியே, திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற் சுண்ணம், திருப்பூவல்லி முதலியவாக அவர் பாடிய மகளிர்கூற்றுப் பாடல்கள். அவற்றில், தமது அனுபவங்களை, அடியார்களையும் உள்ளிட்டே கூறுவதற்குப் பின்வரும் சான்றுகள் காணலாம்:

1) இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை.5

2) நாட்டார் நகைசெய்ய நாம் மேலைவீடெய்த
ஆட்டான் கொண்டு ஆண்டவா பாடுதும்6

3) வானோர் அறியா வழிஎமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார்7

4) ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடி8

தமக்கு இறைவன் அருளிய நல்வாய்ப்புக்களுள் அடியார் கூட்டத்துடன் சேர்ந்து வாழும் வாழ்வும் ஒன்று என்பதை மணிவாசகர், ‘அடியார்களின் பொன்னடியில் வணங்கி அவர்களை வழிபடுவது என்ற குறிக்கோளை எனக்கு அளித்தான்’ என்று கூறுகின்றார்.

‘‘நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான்’’9

அடியார்களை வழிபடுவதே குறிக்கோள் என்றால் அவ்வழிபாடும், உடலை நீத்துச் செல்லும்வரை சிவனை வழிபடும் வழிபாடும் ஒத்தநிலையில் கருதப்பட்டன; அதாவது இவ்விரண்டும் இன்றியமையாதனவாகக் கருதப்பட்டன என்று உணரலாம்.

மணிவாசகர் சீவன் முத்தராய், சிவனது திருவடி இன்பத்தை இம்மை வாழ்விலேயே பெற்று மகிழ விரும்பி, அதற்காக வருந்தி, நைந்து, அழுது, இறைவனை வேண்டிக்கொண்ட பொழுதே, அடியார்களின் கூட்டுறவு தமக்கு வேண்டும் அதையும் இறைவனே தந்தருள வேண்டும் என்பார்.

அடியாரிற் கூட்டிய அதிசயம்''

> ''நெருங்கும் அடியார்களும் நீயும் நின்று நிலாவி
> விளையாடும்
> மருங்கே சார்ந்துவர எங்கள் வாழ்வே வாஎன்று
> அருளாயே''10

என்று வேண்டுகிறார். அடியவர் கூட்டத்தில் சேர்ந்து அவர்களோடு சிவானுபவ உணர்வில் ஒன்றி அல்லது சிவன் புகழ் பாடுதலிலேனும் ஒன்றி நின்று வாழ்ந்தால், இறைவனுடைய திருவருளைப் புரிந்துகொள்ள முடியும் என்றும், அதுமட்டுமன்றி அடியவர் உருவில் உள்ள சிவத்தைப் புரிந்துகொள்ளவும் உறவாடவும், அதனால் உய்யவும் முடியும் என்றும் மணிவாசகர் கருதினர். இதனை வெளியிடும்போது

> ''உன்அடியவர் தொகை நடுவே ஓருருவாய நின்
> திருவருள் காட்டி
> என்னையும் உய்யக் கொண்டருளே''11

என்று கூறுகின்றார், இதில் அடியவர் சூழலில் வாழும்போது இறைவனது திருவருள் உள்ளங்கை நெல்லிக்கனி போல வந்து உதவுவது உறுதி என்னும் கருத்து வெளிப்படுகிறது.

சீவன் முத்தி பெறுவோருக்கு அதனை அடுத்துப் பரமுத்திக்கு வழிகாட்டுவோர் அடியார்களே ஆவர். எவ்வாறு எனில், உடலின் சார்பு இருக்கும்வரை ஆன்மா கீழ்நிலைப்பட்டுத் திருவருள் வழியை விடுத்து மாறிச் செல்வதற்கு வாய்ப்பு உண்டு ஆதலின், அவ்வான்மாவிற்கு நற்சார்பு இன்றியமையாது வேண்டும். ஏன்? சிவானந்தத்தை இடையறாது அனுபவிப்பவர்களாகிய அடியார்களின் சார்பு சீவன் முத்தருக்குக் கிடைத்தால், அவர்களின் நட்புறவால் மெய்யுணர்வுச் சிந்தனை பெருகி, ஞான விசாரணை நடைபெற்று, அதனோடு பொருந்த வழிபாடும் இறைபணியும் செய்யப்பெற்று, பரமுத்திக்கு ஏதுவாதலின் என்க. இதைக்கருதியே மணிவாசகர் தாம் சீவன் முத்தரான பிறகும், அடியார் கூட்டத்தின் நட்புறவை விழைந்து, அவர்களைத் தம்மினும் உயர்ந்தவர்களாகக் கொண்டாடுகின்றார். அவர்களை இறைவன் ஒத்தவராகவே கருதி, அவனது திருவடி தமது தலையில்

பொருந்தியதை எவ்வாறு கொண்டாடுகிறரோ, அவ்வாறே அடியார்களின் திருவடியும் தம் தலைமீது பொருந்தின எனப் பெரு மகிழ்ச்சியோடு கூறுகிறார்.

> "......மலர்ச் சோதியான்
> தூய மாமலர்ச் சேவ டிக்கண் நம்
> சென்னி மன்னிச் சுடருமே"12

> "தன்அடியார் அடி என்தலைமீது தழைப்பன
> ஆகாதே" 13

அடியார்களின் கூட்டுறவு முடிவாகப் பரமுத்திக்கு வழி காட்டுவதோடு, இம்மையில் மேல்நிலை அனுபவங்கள் பலவற்றை யும் பெறுவதற்கு உதவியாக இருக்கிறது என்பதையும் மாணிக்க வாசகர் சொல்லத் தவறவில்லை. மணியோசை கேட்டல், உயிரி னுள் சோதி தொடர்ந்து எழுதல், தேவரும் அறியாத நிலையில் சிவபரம்பொருளைக் காணல், சிவனுக்கே உரிய எண்குணங்கள் வந்து எய்துதல், மிகமேலான அனுபவமாகிய பராபரவெளி என் னும் அனுபவம் கைவரப் பெறுதல் என முன்பு கேட்டறியாத பல புது மேல் நிலை அனுபவங்கள் அடியார் கூட்டத்தில் வாழும் பொழுதுதான் இறைவனுடைய அருளால் தமக்குக் கிடைத்தன என அவர் கூறுகின்றார். 14

அடியார்களுக்குப் பணிசெய்து அவர்களுக்கு அடியானாக வாழ்வதே தமக்கு ஆசை என்றும் இறைவன் தமக்கு தலையைத் தந்தது அவனை வணங்குவதற்கு என்றும், வாயைத்தந்தது அவ னுடைய திருவடிப் புகழை வாழ்த்துவதற்கு என்றும், அடியார் கூட்டத்தைத் தந்தது அவர்களுடன் இணங்கி இருப்பதற்கு என்றும் கூறுகின்றார். அடியார் அல்லாத மற்றவரைக் காணவும் தமக்கு அச்சமாக இருந்தது என்று கூறி, மக்கள் அனைவரும் சிவனடியார்களின் ஒழுக்கத்தை மேற்கொண்டு வாழ்தல் உகந் தது என்று புலப்படுத்துகின்றார். அங்ஙனம் அடியார்களாக வாழ்தல், அவர்களுக்கெனவே இறைவன் தனது திருவருள் ஆகிய களஞ்சியத்தில் இருந்து வாரிவாரி வழங்குகின்றான் ஆத லின் மக்கள் அனைவரும் இளங்காலையிலேயே அவனுக்கு அன்பு செய்து உய்யவேண்டும் என்று வேண்டுகின்றார்.15

அவர் திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பின்னர், தம் மனத்தின் உலகியற் சார்பினை நினைத்து நினைத்து, இறையன்பரோடு கூடிவாழும் சிவவாழ்வைப் பெறும் நல்லறிவும் நல்வினையும் தமக்கு இல்லை[16] என்று வருந்தினார். பின்னர்த் தில்லையில், அடியார்கள் தமமுள் கூடி இறைவனைப் பற்றிய திருவார்த்தைகளைப் பேசிச் சிரித்தும், களித்தும், தேன்போன்ற இன்பத்தைப் பெற்றும், தனித்தனி அவனைத் தியானித்தும், உணர்வில் ஆற்றாராய் நின்று அவனை அழைத்தும் சிவ உணர்வே நிறைந்து நிற்கும்போது, அவர்களின் கூட்டத்தில் சேராமல், அவர்களின் உணர்வைப் பகிர்ந்து கொள்ளாமல், 'இகழப்படுதற்கு உரியவனாய் நான் ஒதுங்கி இருப்பேனோ' என்று வருந்தினார்.[17] ஆனால் இப்பொழுது அடியார் கூட்டத்தில் உணர்வொன்றி வாழும் நிலையை இறைவன் தமக்குத் தந்ததால், அது ஓர் அதிசயம் என்று வியக்கின்றார்.

"அப்பன் ஆண்டு தன்அடியாரில் கூட்டிய அதிசயம்
கண்டாமே"[18]

தொடக்கம் முதல் மணிவாசகரின் குறிக்கோள் அடியார் வாழ்வு வாழவேண்டும் என்பதாகவே இருந்து வந்துள்ளது. அக் குறிக்கோள் நிறைவு பெற இறைவனும் அருள் பாலித்தான். உலகியலில் இருந்து அருளியலில் கால்வைத்த சமயம், நாட்டவர்கள் எல்லாம் தம்மை அடியவன் என்று பழித்தனர் என்னும் கருத்தால், 'அடியான் என்று ஏசப்பட்டேன்'[19] என்று வருந்தி அழுதவர், இப்பொழுது உலகியலை முற்றும் விடுத்து, அடியவருக்கு உள்ள அனைத்துத் தகுதிகளும் பெற்று, அடியவர் கூட்டத்தில் சேர்க்கப்பெற்றபோது, திருவருளை அறிந்து அதனோடு ஒத்து நின்று வாழ்வதற்குரிய உபாயம், அடியார்களுடன் சேர்ந்து வாழுதலே என்பதை அனுபவத்தால் உணர்ந்து, இறைவன் அந்த வாய்ப்பைத் தந்தது அதிசயம் என்று பாராட்டுகின்றார்.[20]

அடியார்களின் அருள்நோக்க வாழ்வையும் உலகியலாரின் பொருள் நோக்க வாழ்வையும் உறழ்ந்து சிந்தித்து, அடியார்களின் வாழ்வு எங்ஙனம் உண்மையை உணர்வதற்கும் அதனைப்

பற்றி நின்று பயன் பெறுவதற்கும் உதவியாக இருக்கிறது என்பதை விளக்குகிறார். வாழ்க்கையின் உறுதிப்பொருளாக உணரவேண்டுவது பரம்பொருள். ஆனால் அப்பொருள், உலகில எந்தப்பொருளையும் சார்ந்திருக்கவில்லை. அதனால் அதனை நினைப்பதும், உணர்வதும், சார்ந்திருப்பதும் எளிதில் இயலாத செயல்கள் ஆகும். அடியார்களைச் சார்ந்து அவர்களை வழிபட்டு, அவர்கள் சார்பில் வாழ்ந்தால், மெய்யுணர்வு தலைப்பட்டு, தோன்றாத் துணையாகிய பரம்பொருளை உணரலாம்; அடியார்களின் துணை கொண்டு அதனைப் பற்றலாம்; அதன் அருளையும் பெறலாம். இதைவிட்டு உலகியலில் பலப்பல ஆசை உடையவர்களாய், தாம் பெற்ற அளவில் பொருள்களின் பயனைத் துய்த்து வாழ்க்கையைக் கழிக்கும் பித்தர்களோடு சேர்ந்து, அவர்கள் பேச்சை நம்புவது அறியாமையாகும்.[21] என்று அவர் தரும் விளக்கம், நற்கதி பெற வேண்டுவோருக்கு அடியார்களின் நட்புறவு எத்துணை இன்றியமையாதது என்பதைக் காட்டும்.

மணிவாசகர் தாம் திருவாசகத்துள் கூறும் தம் அனுபவச் செய்திகளுக்கெல்லாம் முடிமணியாக அதிசயப் பத்தினுள் ஓர் செய்தியைக் கூறுகின்றார். அது அவர் முன்னைய வாழ்வில் இறைவனுக்கு அணுக்கத் தொண்டராய் அவனது அண்மையில் வாழ்ந்தவர் என்பதாகும். இச்செய்தியை அவர் உணர்ந்தது தமது அகஉணர்வு அனுபவத்திலே ஆகும். அங்ஙனம் இருந்தவர் மண்ணுலகில் பிறந்து இறுதியாகச் சீவன்முத்தராகி, அடியார் கூட்டத்தில் ஒருவராகிய முழு வரலாற்றையும் தொகுத்து ஒரு பாடலில் கூறுகின்றார்.

> "சிவபிரானோடு உடன் உறைந்த என்னை, அவன் ஓர் உடம்பில் புகுத்தி, அங்ஙனம் மனிதனாகப் பிறந்து மாயை வழிப்பட்ட என்னை, அவ்வாறே மயங்கி அறியாவண்ணம் காப்பதற்காக, திருப்பெருந்துறையில் எனக்காக நோக்கியவாறு குருந்த மரத்து நிழலில் வீற்றிருந்து, ஒருநொடியில் 'நுண்ணிய சொற்களைக் கூறி' அதுகாறும் நான் செய்துவந்த பொய்மைச் செயல்கள் எல்லாம் நீங்குமாறு செய்து, என் பற்றுக்களையும் அறுத்து, என்

உள்ளத்தினுள் சோதியாக எழுந்தான். அச்சோதிப் பெருவாழ்வில் நான் நிலையாக வாழும் வண்ணம் என்னை அடியார்களோடு சேர்த்தான். அஃது ஓர் அதிசயம்''

என்ற கருத்தில் பாடல் செய்கின்றார்.22

இப்பாடலில் நுகம்இன்றி விளாக்கைத்து என்பது கலப்பை இல்லாது உழுது எனப்பொருள்படும். அதன் கருத்தாவது எத்தகைய முன் ஏற்பாடும் சாதனமும் இன்றி என் உள்ளத்தில் மெய்யுணர்வை உண்டாக்கி என்பதாகும்.

குறைகளை உடைய ஒரு மனிதன் எவ்வாறு நிறை மனிதனாக வளர்கிறான் என்பதை மணிவாசகரின் இப்பாடல் உணர்த்துகிறது. மண்ணுலகில் பிறந்தமையால் உலக உணர்வுகளின் வாசனை காரணமாகக் கல்லாக உறைந்து போய்க் கிடந்த மணிவாசகரின் மனம் அன்புணர்ச்சியால் கனியாகித் திருவாசகத் தீந்தமிழ்ப்பாடல்கள் என்னும் கனிச்சாற்றைத் தந்த வரலாற்றை-அவரது அகவளர்ச்சி வரலாற்றை-இதுகாறும் ஐந்து தலைப்புக்களில் கண்டோம். இத்தலைப்புக்கள், அவரது அனுபவம் மெல்ல மெல்ல முதிர்ந்து வந்தமையைப் படிநிலையாகக் காட்டும். திருவாசகத்தின் முதற்பகுதியில் உள்ள நான்கு அகவல்களும் தனித்தனியே அவரது முழுவாழ்வையும் தொகுத்துரைப்பனவாகும். அவற்றைத் துணையாகக்கொண்டு. திருவாசகத்தின் ஏனைய பகுதிகள் மாணிக்கவாசகரின் அனுபவப் படிநிலைகளை எடுத்துக்காட்டும் பாங்கு இச்சொற்பொழிவுகளில் விளக்கப்பட்டது திருவாதவூரர் புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவை கூறும் மணிவாசகரின் வரலாற்றுச் செய்திகளுள், சிவபிரான் குதிரை வாணிகர் தலைவனாக வந்தது தவிர, ஏனைய நிகழ்ச்சிகள் இச்சொற்பொழிவுகளில் எடுத்துக்காட்டப் பெறவில்லை ஏனெனில் புறவரலாற்றைக் கூறுவதைக் கருத்தாகக் கொள்ளாமல், அகமாகிய ஆன்மாவின் வளர்ச்சி வரலாற்றைக் கூறுவது இங்கு நோக்கமாகக் கொள்ளப்பட்டது.

குதிரை வாணிகர் தலைவனாக வந்த நிகழ்ச்சியால் பாண்டி நாடே சிவலோகமாயிற்று23 என்றும், சிவபிரான் தம்மை ஆட்கொண்ட தலைவன் என்பதால் அவனே பாண்டியன் என்றும்

சிவலோகம், பாண்டி நாடே ஆனதால் சிவபிரானுக்கு நாடு பாண்டியநாடே[24] என்றும் இந்நாட்டில் உள்ள ஒரு பதியாகிய உத்தரகோசமங்கையில் மாணிக்கவாசகரின் வருத்தம் தீரும் வண்ணம் மீண்டும் போதக ஆசிரியனாகக் காட்சி அளித்து மெய் யுணர்வு நல்கியதால் உத்தரகோச மங்கையே சிவபிரானுக்கு ஊர்[25] என்றும் இறைவன் தமக்கு வாரி வழங்கிய அருள் காரண மாக அவனைப் பாண்டிப்பெரு வெள்ளம் என்றும் கூறுகின்றார். மணிவாசகரின் ஆன்ம வரலாறு இங்ஙனம் பாண்டிய நாட்டோடு தொடர்புடையதாய் விளங்குகிறது. மேற்கூறியவை மட்டு மின்றிப் பாண்டிய நாட்டின் பிற ஊர்கள் பலவற்றினும் இறைவன் நிகழ்த்திய அற்புதங்களை மாணிக்கவாசகர் கீர்த்தித் திருஅகவலில் கூறுகின்றார். தெற்கின் கண்ணதாகிய பாண்டிய நாட்டோடு சிவபிரானுக்கு இங்ஙனம் உள்ள தொடர்பினையும் தம்மோடு அவனுக்கு உள்ள 'உடையான்-அடிமைத்' தொடர்பினையும் கருதி, மணிவாசகர் அவனைத் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று சிறப்பித்து, எந்நாட்டவரும் வணங்கும் கடவுளர்களின் உருவ மாக நின்று அவனே அருள் தருகிறான் என்று கூறுகின்றார்.

> ''தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும்
> இறைவாபோற்றி''

திருவாசகம் மணிவாசகரின் பக்தி வாழ்வின் பரிசாக உலகிற்குக் கிடைத்த பேரிலக்கியமாகும். இதில் இலக்கியத் திறங்கள் பலவும் தலைசிறந்து விளங்குவதே போல்' ஆன்மீகப் பொருளும் அழகுற விளங்குகிறது என்பதை ஒருவாறு எடுத்துக் காட்டினேன் என அமைதி பெற்று இச்சொற்பொழிவுகளை முடிக்கின்றேன்.

குறிப்புக்கள்

1. சிவஞானபோதம் : 12ஆம் நூற்பா.
2. மேவினோம் அவனடியார் அடியாரோடும் மேன்மேலும் குடைந்தாடி ஆடுவோமே" திருச்சதகம் : 30.
3. மேலது., 46.
4. திருச்சதகம் : 73.
5. திருவெம்பாவை : 17.
6. திருஅம்மானை : 6.
7. மேலது., 16.
8. திருப்பொற் சுண்ணம் : 16.
9. திருப்பூவல்லி : 8.
10. கோயில் மூத்த திருப்பதிகம் : 7.
11. எண்ணப்பதிகம் : 1.
12. சென்னிப்பத்து : 1.
13. திருப்படையட்சி ; 6.
14. மேலது., 7.
15. திருப்பாண்டிப் பதிகம் : 5.
16. திருச்சதகம் : 5.
17. கோயில் மூத்த திருப்பதிகம் : 9.
18. அதிசயப்பத்து : 1.
19. திருச்சதகம் : 82.
20. அதிசயப்பத்து : 4.
21. மேலது., 9.
22. மேலது., 8.
23. திருஅம்மானை : 11.
24. திருச்சதாங்கம் : 2.
25. மேலது., 3.

———0———

முடிவுரை

திருவாசகம் மாணிக்கவாசகரது அகவரலாற்றை இயம்புவது என்றும், அவரது அகவரலாறு அன்பின் வளர்ச்சியே என்றும் இச் சொற்பொழிவுகளால் அறியலாம்.

அவரை "அழுது அடி அடைந்த அன்பர்" என்று குறிப் பிடுவார் பரஞ்சோதி முனிவர். அமைச்சராக இருந்தமையால், உலகியலிலே தோய்ந்து தோய்ந்து உறைந்து கிடந்து என்றே தமது மனத்தின் நிலையை மாணிக்கவாசகர் உணர்ந்தார். அது கசிந்து கனிந்து நிற்குமாறு அன்பு பெருக வேண்டும் என்னும் ஒரு வரத்தை மட்டுமே வேண்டி அழுதார்.

"வேண்டாது ஒன்றும் வேண்டாது
மிக்க அன்பே மேவுதலே"

படைத்தல், காத்தல், அழித்தல்களைச் செய்யும் மூவரே ஆயினும், மற்றும் யாவரே ஆயினும் அவர்கள் வகிக்கும் பதவி யால் வந்தடையும் ஆணவச் செருக்கின் காரணமாக, அவர்களால் அறிய இயலாதவன் இறைவன் என்று, அவர் திருவாசகத்துள் பலவிடங்களில் மீண்டும் மீண்டும கூறுதற்குக் காரணம், தமது பதவியின் சூழலில், தமது உள்ளத்தில இறையன்பு பெருக இடமில்லாமை பற்றி எனக் கருதலாம். "யாவராயினும் அன்பர் அன்றி அறியொணா மலர்ச் சோதியான்" என்று அவர் துணிந் துரைக்கின்றார். ஆதலின், இறைவனுக்கு எவ்வகையில் அன்பு செய்வது என்றே அழுதார்.

"உன் தாள் இணை அன்புக்கு
ஆராய் அடியேன் அயலே மயல் கொண்டு அழுகேனே"

அவருக்கு இரங்கி இறைவன் காட்சியளித்துப் பின்பு பிரிந் ததை நினைத்து அழுதார். பின்னர் அவனைக் கண்டு, கலந்து நின்றதை எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

"தன்னை ஒப்பாரை இல்லாத் தனியை
நோக்கித் தழுத்த கண்டம்
கனையக் கண்ணீர் அருவி பாய"

இறைவனது அருளாலேயே தமக்கு அவனிடம் அன்பு வளர்ந்தது; அவ்வன்பால் மனம் மட்டும் அன்றி, உடலும் உருகியது என்று கூறுகின்றார்.

"இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து என் என்புருகிக்
கரும்புதரு சுவை எனக்குக் காட்டினை உன் கழலிணைகள்"

உலகியலால் நம் மனம் தடுமாறாமல் காத்துக் கொள்ள வேண்டுவது மிகவும் அவசியம் என உணர்கிறோம். மனம் தான் நமது மிகப்பெரிய பலவீனம்; அதுவே நமது மிகப்பெரிய பலமாக இருக்கத் தக்கது. மனம் இல்லையேல் எந்த அனுபவமும் முழுமையடைந்து பயன்தரும் வகையில் அமையாது. மனம் உலகியலில் அலைந்து, ஏமாறி, இறுதியில் கசப்புணர்ச்சி யடைந்தோ, உடைந்தோ போகாமல் காத்து, அதில் இறையன்பு வளருமாறு செய்ய வேண்டும். உலகியலை விட்டு ஓடவும் இயலாது. ஆகவே நல்ல வழி, உலகியலில் மக்கள் பால் அன்பு செலுத்துவதும், இறைவனை அன்புடன் வழிபடும் பயிற்சியில் ஈடுபடுவதுமே யாகும்.

உலகியலால் இறுகிவிடும் மனம் அன்புணர்ச்சியால் கரைந்தால் மட்டுமே கடவுளைச் சார்ந்து, உயர் இன்பம் பெற இயலும். அங்ஙனம் மனத்தைக் கரையச் செய்வது இறைவன் அருளால் மட்டுமே இயலும். அவன் நமக்குக் கருணை காட்டி அருளைத் தருவதற்கு, அவனைப் பன்னாள், அழுதும், தொழுதும், முறையிட்டும், வழிபட்டு வர வேண்டும். இதனையே மாணிக்கவாசகரது அகவரலாற்றால் அறிகின்றோம்.

"பத்தியால் ஏத்திநின்று பணிபவர் நெஞ்சத்துள்ளான்"

என்ற திருநாவுக்கரசர் திருவாக்கை நினைவு கூர்கின்றோம்.

—O—